235

# பால பாரதி

Vol. II] 1925 [No. 1

ஏப்ரல்

சித்திரை

JL
m211,N24B8
N25.2.1
160[illegible]04

132 "BALA BHARATI," Sheramadevi. Vol. II. No. 1
தபால் எண்—ம. கக 2/0
வருஷச் சந்தா { உள் நாடு ரூ. ௩—0
வெளிநாடு ரூ. ௪—௮ }




| | | |
|---|---|---|
| புத்தகம் உ.<br>பகுதி க. | சித்திரை, கலியப்தம் ருOஉசு.<br>April, 1925. | தனிப்பிரதி<br>அணா கO. |

ஆசிரியன்: வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்.
பாரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.

## "பாலபாரதி," சேரமாதேவி.

——()——

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

——(:)——

ஆசிரியன்: வ.வே.ஸுப்ரஹ்மண்ய ஐயர்

"பாலபாரதி"யில் புதிய ரஸமான சுவை சொட்டும் சிறு கதைகள் வருகின்றன. ஓர் அருமையான பெருங்கதை (நாவல்) தொடர்ச்சியாக வருகிறது. சிறந்த வர்ணப் படங்களும் பிற படங்களும் "பாலபாரதி"யை அழகு படுத்துகின்றன. நமது உயர்ந்த நூல்கள் நவீன ஐரோப்பிய முறைகளில் ஆராயப்பட்டு ஐரோப்பிய பாஷைகளிலுள்ள இலக்கியங்களுக்கு நம் தமிழ் இலக்கியங்கள் எள்ளளவும் தாழ்ந்தன அல்ல என்று காட்டப் பெறுகின்றன.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், தயானந்த சரஸ்வதி, ஜாரதுஷ்டிரன், முதலிய சமயாசாரியரின் சரித்திரங்களும், திருவள்ளுவர், மார்க்க ஔரேலியன், ஸூபி ஸாதி முதலியோரின் சரித்திரங்களும் நல்லறிவு கொளுத்தும் திருவாக்குகளும் "பாலபாரதி"யில் இடைவிடாது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வீரர் சரித்திரங்களும், பிரசங்கங்களும், வீரப் பெண்டிரின் சரித்திரங்களும், வீரங் காட்டிய குழந்தைகளின் வரலாறும் "பாலபாரதி"யை அலங்கரித்து வருகின்றன.

ஹாஸ்யப் பிரியர்களுக்கு ஹாஸ்ய ரஸம் உள்ள கதைகளும் வியாஸங்களும் வெளி வருகின்றன.

உலக விநோதங்களைப்பற்றிய வர்ணனைகளும் விவரங்களும் பத்திரிகையில் வருகின்றன.

பள்ளிக்கூடங்களில் கற்காத நமது பெண்மணிகளுக்கும் குழந்தைகளுக்கும் இப் "பாலபாரதி" ஓர் சிறந்த கலாசாலையைப் போல விளங்கி, தன்னைப் படிப்பவரைக் கலாசாலையில் படித்தவரைவிட அதிக கலை ஞானம் படைத்தவராக ஆக்கிவிடும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. இன்று முதல் ஆனி மாதத்துக்குள் சந்நாதாரராகச் சேருகிறவர்க்கு ஜாரதுஷ்டிரன், குரு கோவிந்த சிங்கன் என்ற நூல்கள் இனாமாகவும், "பாலபாரதி" புத்தக சாலையிலுள்ள இதர நூல்கள் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் விலை தள்ளியும் கொடுக்கப்படும். எல்லா நூல்களுக்கும் தபால் செலவும் கட்டும் செலவும் வேறு

சந்தா விகிதம்.

உள்நாட்டுக்கு வருஷச் சந்தா: ரூ. ௩. கபீ: ரூ. ௨. நபீ: ரூ. ௧-௰.
மாதிரி பிரதி அணா ௰. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. ௯-௮.
சித்திரை, கலி ௫௦௨௭. காரியஸ்தன், "பாலபாரதி."

18 SEP
MADRAS

ஓம்

# பாலபாரதி

புஸ்தகம் ௨ | சித்திரை, கலியப்தம் ௫௦௨௭. | பகுதி ௧

## ஏசுநாதரின் தேசுறு மொழிகள் *

——(*)——

(சுத்தானந்த பாரதியார் பாடியது)

என்றென தாவியும் ஈசன் ஆணையை
நன்றுறச் செய்திட நாடி வந்ததோ,
அன்றென நினைத்தையும் அவன்கை யீந்தனன்.
இன்றிவர் பிடித்ததும் இறைவ னெண்ணமே.

பாதகர் செய்திடும் பல் லிடும்பைகள்
ஓரிய தேவியைச் சிதைக்க வல்லவோ?
சோருடல் போயிடின் சோதி சேர்ந்திடும்
ஆருயி ருடனுடை ஆண்டவன் பதம்.

எந்தையின் கட்டளை யியற்ற வென்கதை
சிந்துதல் தன்னினும் சீர்மை யாதுகொல்?
வந்த தென் வாய்மையும் வலிவு காட்டியே
சந்தத மாகிடுந் தருண மின்றரோ!

சாவினிற் படுமிலை சட்டை மாற்றமே
சோவினில் துயரிலை தூய ருக்கரோ
பூவெலா மீயினும், பொன்றி டாததாம்
ஆவியை விற்றது மாண்மை யாகுமோ?

* * * *

இன்னல்செய் பகைவரே யிற்று சற்றினில்
மண்ணொடு தூசியாய் மங்கி மாய்வரே;
புன்னகை புரிந்ததைப் பொறுத்த போதகன்
மன்னுவன் தேவென மண்ணும் விண்ணுமே.

* யேசுநாதரைப் பகைவர் பிடித்தவுடன் சீற்றமுற்ற சீடருக்கு அவர் சொல்லியது.

JL
211, 12488
25.2.1
160204

# ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேசகுமார சர்மா எழுதுவது)

## ஏழாம் அத்தியாயம்

### வன ராஜனும் மான் பேடையும்

மேற்குத் திசை மகளின் முகம் நாணத்தால் சிவந்தது. பறவைகளின் கூவுதல் வாயிலாக அவள் தன் நல் வரவு உபசாரத்தைத் தெளிவற்ற மொழிகளால் தொனிக்கச் செய்து கொண்டிருந்தாள். ஆயிரங் கதிர்ச் செல்வனுகிய ஆண்டவன் ஆதித்தனும் தன்னை நல்வரவாய் ஏற்று உபசரிக்கப்போந்த தலைகுனிந்த காதலியின் செவ்வரி படர்ந்த கபோலங்களின் மீது தன் கோமளக் கரங்களைப்* பரப்புவானுயினன். அப்பொழுது கங்காநதியானவள் தன்னைப் பெற்றெடுத்த பர்வத ராஜனிடமிருந்து எவ் வண்ணமோ அநுமதி பெற்றுப் படைப்பன்னை சிருஷ்டித்தாய் அளித்த அணிகலன்களைப் பூண்டு குடில கதியாய்ப் பாய்ந்தோடித் தன் ஆருயிர்ச் செல்வனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். மேற்குத் திசைமகளுக்குத் தன் பதியுடன் நிகழாநின்ற சங்கமத்தைப் பார்க்க அந் நதிமகளுக்குச் சகிக்கக் கூட வில்லை. அவள் காலை முதற்கொண்டே சூரியனைப் பிடித்து வைத்துக் கொள்ள முயற்சி செய்துகொண்டிருந்தாள். இவனை எவ்வளவுதான் பிடித்துவைத்துக் கொண்டாலும், இவன் குறிப்பிட்ட சமயத்தில் தன்னை வரவேற்க ஆவலாயிருக்கும் பிரிய பத்னியைக் கட்டித் தழுவிக்கொள்ளும் பொருட்டுத் தவறாமல் சென்றிடுவனென்றும், அப்படி ஒரு முறை சென்றுவிட்டால் அவன் மீண்டும் முப்பது நாழிகை ஆகிற வரையில் முகத்தைக் காட்ட மாட்டானென்றும் அந்த தேவநதிக்குத் தெரிந்தேயிருந்தது. ஆகவே இவ் வநுபவம் அவளுக்குப் புதுமையானதன்று. எனினும் மாதர்களின் மாற்சரிய சுபாவம் இத் தகைய மாற்றத்தைச் சட்டை செய்வதில்லை. எப்பொழுதும் போல் இன்றும் அவள் சூரியனுக்கும் மேற்குத்திசை மகளுக்கும் சங்கமம் நிகழக் கூடாதவாறு அவனைக் காலை முதல் தடை செய்து வைத்திருந்தாள். ஆனால் கதிரவன் தன்னை வரவேற்று உபசரிக்க ஆவலுற்றிருக்கும் பிரிய பத்னியின் சிவந்த வதனத்தைப் பார்த்தவுடனே திமிறிக்கொண்டு போவதைக் கடவுண்மாநதியாகிய கங்கையானவள் கண்ட போது, அவள் அந்தப் பிரேம சங்கமத்தைத் தன் சஞ்சலமாகிய சித்தத்தில் பிரதிபிம்பிக்கப் பண்ணிக் கொண்டு, இத் தகைய சுபயோகம் தனக்கும் சீக்கிரத்தில் வாய்க்க வேண்டுமென்று இச்சைகொண்டு, கம்பீரமாயும் சாந்தமாயும் விளங்கும் தன் பதியாகிய கடலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள்.

ஒருநாள் மேற்குத் திசையுடன் நிகழாநிற்கும் ஞாயிற்றின் அன்பு நிறைந்த இன்பக் கலவியைக் கண்டு களித்துக்கொண்டும், ஒருகால் அக் கலவியில் பொறாமை கொண்ட கங்கையின் குடில கதியில் பார்வையைச் செலுத்திக் கொண்டும், ஓர் இளங் குமரன் கங்கை யாற்றின் கரையிலுள்ள ஒரு சிலா தலத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் தன் வாழ்க்கையினது இளமைப் பருவத்தின்—வளர்ப்போரின் ஆதரவில் துள்ளி விளையாடுவதில் கழியா நின்ற பராதீனமாகிய இளமைப் பருவத்தின்—இறுதி யெல்லையைக் கடந்து விட்டவனாயிருந்தான். வாழ்க்கை யாத்திரை முழுவதிலும் எந்தப் பகுதியானது மிக்க இன்பம் அளிப்பதாயும் உள்ளதோ, சுகம் உண்டாக்குவதாயும் உள்ளதோ, அதில் அவன் இப்பொழுதுதான் அடியெடுத்து வைத்திருந்தான். அவன் இன்ப நிலயமான யௌவனமென்னும் பூஞ்சோலையின் வாயிலில் நின்றுகொண்டு, சென்றுபோன வாழ்க்கையைச் சிங்க நோக்காகவும், வரப்போகிற உலக யாத்திரையை எதிர் நோக்காகவும், களிப்புடன் நோக்கிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அவனது முக மண்டலத்தில் ஒப்பற்ற பிரமசரியத்தின் தேசு ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவனது மனோஹரமாகிய நேத்திரங்களிலே உண்மையான—தூய்மையான—க்ஷத்திரிய தேஜஸ் பளிச்சிடா நின்றது. அவனது அகன்ற நெற்றித் தடத்திலும் முழு மேனிப் பொலிவிலும் ஓர் அபூர்வ காந்தி திகழ்ந்தது. முகமண்டலத்தில் ஒளி வீசும் அந்தப் பிரமசரிய தேசையும், நேத்திரங்களில் சோபிக்கும் அந்த க்ஷத்திரிய தேஜஸ்ஸையும், மேனி முழுவதும் பிரகாசிக்கும் அந்த அபூர்வ காந்தியையும் பார்த்தால், இந்த யுவா ஏதோ ஒரு சிறந்த இராஜ வம்சத்தில் உதித்த உத்தம வீரன் எனத் தோற்றாமலிராது. ஆனால் அவனுடைய கோலம் அரசர்களின் விலாச வைபவத்துக்கு ஒத்திருக்கவில்லை. சிலாதலத்துக்கெதிரில் தரையிலே அவனுடைய வில் விழுந்து கிடந்தது. அவன் அரையில் ஒரு மாசற்ற வெள்ளாடை உடுத்து, அதே ஆடையின் பாதிப் பகுதியை அரையிலிருந்து தோள்மேல் செலுத்திக் கழுத்தின் பின்புறத்தினின்று மார்பின்மேல் விழும் வண்ணம் அணிந்திருந்தான். தலையில் கரிய கேசத்தைத் தவிர வேறு பாதுகாப்பு ஒன்றுமில்லை. அவனது திண்ணிய—கட்டமைந்த—சிறந்த தோள்கள் அவனுடைய ஆற்றலுக்குச் சான்று கூறின. இவ்வாறு அவ் இளங் குமரன் சிலாதலத்தின் மீது முக மலர்ச்சியுடன் அமர்ந்து, கங்காநதியின் நிர்மலப் பிரவாகத்தினதும் சூரியாஸ்தமனத்தின் சோபையினதுமாகிய ஆநந்தக் களிப்பில் ஈடுபட்டிருந்தான். அக வமைதியோடு படைப்பின் அழகைக் கண்ணாரக் கண்டு களிக்க வேண்டி இன்று அவன் ஆசிரமத்திலிருந்து வெகுதூரம் வந்து உட்கார்ந்திருந்தான். பறவைகளின் இன்னிசைப் பாட்டும், நாற்றிசையினின்றும் நறு மணமேந்திவரும் குளிர்ந்த காற்றும், அவ் விடத்தில் நிலைத்துள்ள சாந்தத் தன்மையும், சாயங்காலத்து உள்ளங் கவர் வனப்பும், தூய்மை பொருந்திய கங்கையாற்றின் அண்மையும், அந்தப் பிரதேசத்தின் இனிய காட்சியும்—ஆகிய இவற்றின் சையோகத்தினால், நற் பயிற்சி பெற்று உற்சாகம் நிறைந்த அக் காளையின் உள்ளம் அவ் வேளையில் சுகமெனும் குன்றேறி ஆநந்தபரவசமாய்க் களியாட்டயரா நின்றது. அவனது இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. அவன் விழிகள் குதூகலம் நிறைந்து விளங்கின. அவன் பக்கத்திற்கிடந்த வில்லின் நாணைக் கையால் தடவித்தடவி அதிலேயே லயித்துப்போன உள்ளத்தினனாய் மேற்குத் திசைப் புறம் உற்று நோக்கிய வண்ணமாய் இருந்தான்.

இப்பொழுது முற்றிலும் சூரியாஸ்தமயமாகும் சமயமாய் விட்டது. அப்படி யாகியும் இன்னமும் அவ் விளங் குமரனது இயற்கை யாராய்ச்சி முற்றுப்பெறவில்லை. அப்பொழுது திடீரென்று ஒரு தற்செயலான நிகழ்ச்சி நிகழ்ந்திராவிட்டால், அவன் எத்துணை நேரம் வரையில் அச் சிலாதலத்தின் மேல் அமர்ந்திருப்பானோ தெரியாது. அதற்குள் அச்சத்தால் நடுங்கிய ஒரு மான் பேடு அவனிடம் வந்து கூக்குரலிட்டு நின்றது. அவ் அச்சங்கொண்ட வனவிலங்கின் இந்த சாகசத்தைக் கண்டு அவ் விளங்குமரனுக்கு மிக்க ஆச்சரியமுண்டாயிற்று. அவன் சிலாதலத்திலிருந்து கீழே இறங்கினான். அம்மான் பேடையின் சரீரத்தை அன்புடன் தடவிக் கொடுக்கலாயினான். மான்பேடைக்கும் இப்பொழுது மிக்க நிம்மதி உண்டாகியது போல் தோற்றியது. மனிதனது கைபட்ட மாத்திரத்தில் தரித்து நிற்கும் சுபாவமில்லாத மான் தன் பக்கத்தில் இவ்வளவு நிர்ப்பயமாய் நிற்பதைக் கண்டு அவ் விளங் குமரன் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே, அந்த மான்பேடை எந்தத் திக்கிலிருந்து ஓடி வந்ததோ அதே திசையிலிருந்து மக்கள் மரபில் உதித்த பேரழகு வாய்ந்த ஒரு மடமான் வருவதாகத் தென்பட்டது. காட்டு மானைப் போலவே மக்கட் குலத்து ரூபவதியாகிய மான்விழியாளும் விரைவாய் ஓடி வந்துகொண்டிருந்தாள். அவளது அடர்ந்த அளகபாரம் அவளது முகத்தின் மீதும் தோளின் மீதும் இங்குமங்கும் அலைந்து புரண்டு விளையாடியது. ஓடி வந்ததனால் அவளது மெல்லிய ஆடை அலங்கோலமாய்ச் சிதறுண்டு காணப்பட்டது. இளைப்பினாலும் களைப்பினாலும் அவளது கண்களின் செவ்வரி இன்னம் அதிக சோபையுற்று மிளிர்ந்தது. இச் சுந்தரி தன்னைத் தரிசிக்க வேண்டியே வந்திருக்கிறாளென்று வனத்திருமகள் கருதி, அவளுடைய கன்னங்களிலும் நெற்றித் தடத்திலும், அவளது சின்னஞ்சிறிய மோவாய்க்கட்டையிலும் வேர்வைத் துளிகளாகிய நல் முத்துக்களை மிகச் சந்தோஷமாய் அணிந்து வைத்தாள். வாசனையை ஏந்திச் செல்லும் காற்றையும் தன் சுவாசத்

* கரம் என்பது கை என்றும் கிரணம் என்றும் பொருள்படும்.

தினால் நறுமணங் கமழச் செய்துகொண்டும் தன் அடி வைப்பினால் கடுமையான பூமியை மென்மை யடையச் செய்துகொண்டும் அம் மெல்லியலாள் காட்டு மானைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தாள். இக் காட்டு மானைப் பின் தொடர்ந்து நகரவாசினியாகிய மடமான் ஏன் ஓடி வருகிறாளென்பது அவ் விளங் குமரனுக்குச் சிறிதும் விளங்கவில்லை. காட்டு மானைத் தொடர்ந்து வரும் இளங்குமரி அங்கே வந்து விட்டதை இளங்குமரன் பிரத்தியக்ஷமாகக் கண்டான். இத்தகைய பயங்கரமும் கோரமுமான கானகத்தில் ஒரு பாலசுந்தரி ஒரு மானைப் பின் தொடர்ந்து ஓடி வருவதாகிய இந்த அநுபவமும் இந்தக் காட்சியும் அவ் விளங்குமரனுக்கு அவனது வாழ்க்கையில் அப்பொழுதே முதன் முதலாக நிகழ்ந்தது. மான் பேடை நிர்ப்பயமாயும் சாந்தமாயும் ஒரு வீரபுருஷன் பக்கத்தில் நிற்பதைக் கண்டு அந்த பாலிகையும் தன் ஓட்டத்தின் வேகத்தைச் சிறிது குறைத்தாள். குறைத்தும் அவளுடைய தோற்றத்தில் சஞ்சலத்தன்மை இருக்கவே செய்தது. ஒரு கையால் அந்த மான் பேடையைத் தடவிக் கொடுத்துக்கொண்டு அவ் விளங்குமரன் தன்னை நோக்கி வரும் இளங்குமரியின் ஒப்பற்ற சௌந்தரியத்தை இமை கொட்டாது தன் விழிகளால் பருகிய வண்ணமாய் இருந்தான். அவன் சில க்ஷணங்கள் வரையில் தன் நிலைமையையும் இவ் வுலகத்தையும் மறந்திருந்தான். அந்த ரம்மியமான பிரதேசம் அவனுக்குச் சுவர்க்க பூமிபோல் தோற்றியது. அவ் யுவதியும் அவனுக்கு ஒருகண நேரத்துக்குத் தெய்வ மங்கை போல் தோற்றினாள். ஆனால் அது தோற்ற மாத்திரமாகவே இருந்தது. அதே சமயத்தில், பின் புறத்தில் கால் யோசனை தூரத்திலேயே பூலோகத்து ஹரித்துவாரம் இருக்கிறதென்றும், சமீபத்திலேயே நிதாநந்த ஸ்வாமிகளின் ஆசிரமம் இருக்கிறதென்றும், அவரது அநேக சிஷ்யர்களில் தானும் ஒருவனென்றும் அவனுக்கு நினைவு உண்டாயிற்று. அதோடு, தான் பூலோகத்திலேயே இருப்பதாகவும், எந்த ஸ்தானத்தில் தான் நின்றுகொண்டிருந்தானோ அது பூலோகத்திலேயே உள்ளதாகவும், ஆதலினாலே தன்னை நோக்கி வரும் இவ் வெழிற் பசும் பூங்கொடியும் இம் மண்ணுலகத்திலேயே உண்டானதாகவும் அவனுக்கு அக்கணமே நிச்சயமாயிற்று. ஆனால் அந்த யுவதி மான்பேடையை ஏன் தொடர்ந்து வருகிறாளென்பது மட்டும் அவன் அநுமானத்தால் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே அவ் விளங்குமரி கூப்பிடு தூரத்தில் வந்துவிட்டதைப் பார்த்தவுடனே அவன் கூறினான்—"இந்த நிரபராதியான மான் பேடையை வீணே ஏன் தொடர்ந்து வருகிறீர்? இதற்குக் காரணம் எனக்குத் தெரிந்தால், உபகாரமாயிருக்கும். இது இங்கே வந்த பொழுது அதிக பீதியடைந்திருந்ததாகக் காணப்பட்டது. இந்தச் சாதுவாகிய மான் பேடை உமக்கு யாதொரு தீங்கும் செய்திருக்குமென்பது சம்பாவிதமல்லவே!"

யுவாவைக் கண்டவளவில் அந்த யுவதிக்குத் தான் சிறுபிள்ளைத் தனமுள்ள பேதைச் சிறுமியைப் போல் ஓடி ஓடி அவனிடம் வந்துவிட்டதைப்பற்றி விசனம் உண்டாயிற்று. தன் ஆடை அலங்கோலமாய்க் குலைந்திருப்பதைக் கண்டு வெட்கி, அவள் தலை குனிந்து விடை யொன்றும் அளியாது சும்மா நின்றாள்.

அத் தலை குனிந்து நிற்கும் தருணியை நோக்கிய வண்ணமாய்ப் புன்னகை புரிந்து இளங்குமரன் கூறினான்—'இந்தக் காட்டு மானின் அகன்ற கண்களின் மேல் பொறாமை கொண்டு அதைப் பின்தொடர்ந்து வந்ததாகச் சொல்லும் பக்ஷத்தில், உம் விழிகளே மிக விசாலமாயிருப்பது பற்றி இந்த மான்பேடையே அவைகளைக் கண்டு பொறாமை கொள்ள விரும்புமே. அப்படியிருக்க, இந்தத் திக்கற்ற ஜந்துவை ஏன் தொடர்ந்து வந்தீர்?"

இனி இவனுடன் பேசாதிருக்க முடியாதென்று கண்டு அவ் யுவதி கிழக்குத் திசைப் பக்கம் பயங்கொண்ட பார்வையைச் செலுத்தியவளாய் மிகவும் இனிமையான குரலில் கூறலானாள்—"அந்தச் சிங்கம் என் மானைப் பின் தொடர்ந்து வருகிறது. ஆகவே இதைக் காப்பாற்றும் பொருட்டே நான் இதன்பின்னே ஓடி வந்திருக்கிறேன்"

அம் மெல்லியலின் பக்கம் ஆச்சரியம் நிறைந்த பார்வையைச் செலுத்திக்கொண்டே இளங்குமரன்—"சிங்கத்தின் வாயிலிருந்து நீர் இதைத் தப்புவிப்பீரா?" என்று சொல்லிவிட்டு அதே க்ஷணத்தில் தன் வில்லை



யும் எடுத்து, அதில் அம்பைத் தொடுத்துக் காதளவும் நாணை இழுத்து அவ் வம்பை விடுக்கக் கருதிய வளவில் சடிதியில் திடுக்கிட்டவனாய் வில்லினின்று அம்பை வாங்கி வில்லைத் தூரமாய் எறிந்தான்.

இளங்குமரனுடைய இவ் விசித்திரச் செய்கையைக் கண்டு யுவதிக்கு மிக்க வியப்பு உண்டாயிற்று. அவனது வெளித் தோற்றத்தைக் கண்டு அவன் மகா சூரனாய் இருப்பனென்று நினைத்தாள் யுவதி. அவன் நிற்கும் முறுக்கையும், வில்லில் அம்பு தொடுக்கும் லாகவத்தையும், குறி நோக்கி எய்யும் திறத்தையும் கண்டு, இவன் அம்பெய்வதில் மிக்க வல்லவனாய் இருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோற்றியது. அன்றியும் இவனே ஒரே அம்பினால் சிங்கத்தை எமபுரத்துக்கு அனுப்பித் தன் அன்பார்ந்தமான்பேடையின் துன்பத்தைப்போக்கி விடுவானென்னும் திடமான ஆசையும் அவளுக்கு உண்டாயிற்று. அவள் தன் ஆவல் நிறைந்த விழிகளை அவ் விளங்குமரனது தேஜஸ்வியமுகத்தின் பக்கல் செலுத்தி உற்றுப் பார்த்தாள். அவன் விஷயத்தில் அவள் உள்ளத்தில் அதற்கு முன் அநுபவித்திராத ஒரு வகைக் கோமளமாகிய மெய்ப்பாடு— மனோவிகாரம்—எழுச்சியுற்றது. அந்த மெய்ப்பாட்டிற்கு மதிப்பு எனப் பெயரிட்டாள். இது அவளுக்குப் பரிசயமாயிருந்த பெயரே. ஆனால் அது ஒருவனுடைய நண்பர்களிடத்தும் வயதில் மூத்தவர்களிடத்தும் உண்டாகிற பழக்கமான மதிப்பு அல்லது ஆதரபாவம் அல்லவென்பது நிச்சயம். இன்று இளங்குமரனாகிய வீரனைக் கண்ட மாத்திரத்தில் உண்டாகிய ஆதரபாவம் அதற்குமுன் அனுபவித்தறியாததென்றும், அதில் ஒரு வகை அழகிய புதுமை உள்ளதென்றும், அதன் சுவாரசியம் அத்தியந்த மனோமோஹனமானதென்றும், அதன் ஆநந்தம் வர்ணிக்க முடியாதென்றும், அதன் கோமளத்தன்மை உள்ளங்கவர் நீர்மையதென்றும் அவளுக்குப் புலப்படத் தொடங்கியது.

இங்கே அவ்விளங்குமரன் இடையிடையே விநயமதுரமாகிய பார்வையை அவ் யுவதியின்பால் செலுத்திக் கொண்டே, எதிரில் வரும் சிங்கத்தின் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.

வில்லைத் தூரத்தில் எறிந்துவிட்டு நிச்சிந்தையாய்ச் சிங்கத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அவ் விளங்குமரனிடத்தில் பீதி என்பது இம்மியளவும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த யுவதியோ எவ் விளங்குமரனுடைய மேற்கூறிய விசித்திரமான செய்கையின் நிமித்தம் ஆச்சரியத்தினால் பரவசம் அடைந்தாளோ, அவனை இப்பொழுது திரஸ்கார சூசகமான பார்வை கொண்டு நோக்கலாயினாள். இவனது சரீரத்திலே தன்னையும் பிறரையும் பாதுகாக்கும் ஆற்றல் இல்லை யென்றும், இவனது பாவனையெல்லாம் கூத்தர்களின் நடிப்பைப் போன்றதே யென்றும்; இவனது தேகக்கட்டு வெறும் போலியே யென்றும் அவளுக்குத் தோற்றலாயிற்று. சிங்கமோ முற்றிலும் கிட்ட நெருங்கிவிட்டது. இப்பொழுது இந்த வேட்டைப் பிராணிகள் தன் வசமாகிவிட்டனவென்றும், இனி அவசரப்படவேண்டிய அவசியமில்லையென்றும் நினைத்து அந்தச் சிங்கம் நிச்சிந்தையாய் அலக்ஷியமாக வந்துகொண்டிருக்கிறதென்று அப் பெண்மணி அநுமானித்தாள். தன் அன்பான மான் பேடையை இது வரையிலும் காப்பாற்றுவதற்காகச் செய்த பிரயத்தனம் அவ்வளவு நிஷ்பலமாய்ப் போய் விடாமல் இருக்கவேண்டுமே யென்று அவளுக்கு அதே விசாரமாயிருந்தது. அவளுக்குத் தன் உயிரைப் பற்றிக் கூட இவ்வளவு அச்சம் உண்டாகவில்லை. இன்னொரு பொறுப்பு இப்பொழுது தன் தலைமேல் வந்து விழுந்ததாக அவள் எண்ணினாள். அவ் விளங்குமரனோ வில்லையும் அம்பையும் தரையில் எறிந்துவிட்டிருக்கிறான் ஆதலால் அவன் உயிரைக் காப்பாற்றவேண்டிய கவலையும் அவள் உள்ளத்தில் உண்டாயிற்று. இளங்குமரனைப் பார்த்த மாத்திரத்தில் அவள் நெஞ்சத்தில் எழுந்த சிறப்பாகிய புதிய மெய்ப்பாடு இப்பொழுது மறைந்துவிட்டது. அவளது இருதயத்திலே அவ்விளங்குமரன் பொருட்டு பூதயை உண்டாயிற்று. இந்த மான் பேடையுடன் இவ் விளங்குமாரனையும் தான் காப்பாற்ற வேண்டுமென்று அவள் எண்ணினாள்.

இது பரியந்தம் கவலையற்றிருந்த மான்பேடை தன்னை இரை கொள்ள வரும் சிங்கம் முற்றிலும் அருகே வந்துவிட்டதைக் கண்டு முன்னிலும் மிக்க பீதி யடைந்து தன் தலைவியைக் கெட்டியாய்த் தொத்திக்கொண்டு நின்றது. இப்பொழுது அந் நங்கைக்குச் சிந்திக்கத்தானும் நேரமில்லை. சிங்கம் சமீபத்திலே வரவர, இளங்குமரன் இன்னும் அதிகமாய் அதை உற்

றுப் பார்க்கத் தொடங்கினான். இந்தத் தருணத்தில் அப் பெண்மணி பயந்துபோய் தூரத்தில் விழுந்திருந்த வில்லைக் கையில் எந்தினாள். அதில் அம்பைத் தொடுத்தாள்; சிங்கத்தின் மேல் குறி வைத்து அம்பை விடுக்கத் தயாரா யிருந்தாள். அதற்குள் இளங் குமரனுடைய பார்வை அவள் பால் சென்றது. பெண்மணியின் இச் செய்கை அவனுக்குப் பிடிக்கவில்லை. அந்தக் கணமே அவன் அவளிடம் சென்று வில்லின் இழுத்திருந்த நாணையும், ஏற்றியிருந்த அம்பையும், அவற்றோடு அப் பெண்மணியின் கோமளமான கரத்தையும் தன் கரத்தால் பற்றினான். அக் காட்சி மிக ரமணீயமாயிருந்தது. இளங்குமரனது கர ஸ்பரிசத்தினால், முன் அப் பெண்மணியை விட்டு விலகியிருந்த மெய்ப்பாடு மீண்டும் இரு மடங்கு வேகத்துடன் எழுச்சியுற்றது. அந்தக் கோமள ஸ்பரிசத்தினால் இளங்குமரனது உள்ளமும் சுவர்க்க சுகத்தை அனுபவிக்கத் தொடங்கியது. இந்த ஆநந்தக்களிப்பு நெடுநேரம் நீடித்திருக்கவேண்டுமென்று இருவரும் விரும்பினர். ஒரு கண நேரத்துக்கு அவ் விளங் குமரனும் குமரியும் ஒருவரை யொருவர் காதலோடு கடைக்கணித்துக் கரஸ்பரிச சுகாநுபவத்தில் ஈடுபட்டு நின்றனர். இப்பொழுதோ சிங்கம் அத்தியந்த சமீபத்தில் வந்துவிட்டது. இளங்குமரி அவ் வின்பக் கனவினின்றும் விழித்தெழுந்தாள். அவள் தன் கையை இளங்குமரனது பிடியினின்றும் சாமர்த்தியமாய் விடுவித்துக்கொண்டு மீண்டும் அம்பு விடுக்கத் தலைப்பட்டாள்.

இளங்குமரன் அவளை ஆவலுடன் நோக்கிக்கொண்டே "நிறுத்த வேணும், நிறுத்த வேணும், தேவி, நிறுத்த வேணும்— உம்முடைய இயற்கையான மென்மையை விட்டு வீரர்க் குரிய கடுமையான செய்கையைச் செய்ய வேண்டாம்,"

இளங்குமரி—"வீரபுருஷனே வில்லைப் போட்டுவிட்டமையால், அவரைக் காப்பாற்றும் பாரம் பிறர் மேல் விழுந்திருக்கும் தருவாயில், க்ஷத்திரியக் கன்னியர் தம் மென்மையை விடவே செய்வர்."

"க்ஷத்திரியப் பெண்மணியே,பராக்கிரமசாலினியான பாக்கியவதியே, நீர் நினைப்பது தவறு. நான் வில்லை என் போட்டுவிட்டேன் என்பதன் காரணத்தை ஊகிக்கத்தானும் உம்மால் ஆகவில்லை! நான் அவ்வளவு வல்லமை யற்றவனல்ல.என்னையே காப்பாற்றும்பாரத்தைப் பிறர்மேல் — அதிலும் உம்மைப்போன்ற கோமளாங்கியின்மேல்—போட்டுவிடும்படியான பயங் கொள்ளியும் அல்ல."

"அப்படியானால் வில்லை என் எறிந்துவிட்டீர்கள்"

"அதற்கு விடை இந்த என் வனராஜனே அளிக்கும்," எனக் கூறி, அவன் தன்னை நோக்கி வெகு சமீபத்தில் வந்துகொண்டிருக்கும் சிங்கத்தினிடம் ஓடிப்போய் அதன் உயரமான பிடரியைத் தடவிக் கொடுத்துக் கொண்டு அதைச் சிலாதலத்தின் பால் நடத்தி வந்தான். அவ் விளம்பெண் இப்பொழுது ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போய்விட்டாள்.

சிலாதலத்தண்டை வந்தவுடனே வனராஜனுடைய முதுகைத் தடவிக் கொடுத்துக்கொண்டு இளங் குமரன் கூறலுற்றான்—"சுந்தரி, இப்பொழுது உமக்கு நன்றாய் விளங்கிவிட்டதல்லவா? இனி உமக்கும் உம்முடைய மான்பேடைக்கும் பயம் இல்லையே."

இளம்பெண் அநுதாபத்தைக் காட்டும் குரலில் உரைத்தாள்—"நான் தமக்குப் பெரும்பிழை செய்துவிட்டேன். ஆய்ந்தோய்ந்து பாராமலே நான் தம்மீது பொய்த் தோஷாரோபணம் செய்தேன்.இதன்பொருட்டுத் தாம் என்னைப் பொறுத்தருள வேண்டும்."

இளங்குமரன் அவளைப் பிரேமை தோய்ந்த பார்வையுடன் நோக்கி—"இல்லை இல்லை, நீர் இவ்வளவு வருத்தப்படவேண்டிய காரணமில்லை. இந்த வன ராஜன் உம்முடைய மான்பேடையுடன் எப்படி விளையாடுகிறதென்பதை நீரே பாரும். மானுக்கு இப்பொழுது பயம் பேய்விட்டது. இவ் வனராஜன் இத்தகைய சாதுவான, துர்ப்பலமான, பிராணிகளை ஒரு போதும் வருத்துவதில்லை. ஆனால் தன்னை வருத்த வருவோருக்கு இது எமஸ்வரூபமென்பது நிச்சயம். மற்றவர்களிடத்தில் இது மிக அன்பாய் நடந்துகொள்ளும். நான் இன்று தவறாய் இதன் மேல் அம்பு எய்யவிருந்தேன். நல்ல வேளையாய் உரிய சமயத்தில் நினைவு வந்துவிட்டது," என்றான்.



அப் பெண்மணி தழுதழுத்த குரலில் தெளிவற்ற மொழிகளால் பேசத் தொடங்கி—"வன ராஜா, இந்த இரத்தின மாலையை இந்த முதல் பேட்டியின் அறிகுறியாக உனக்கு அளிக்கிறேன்," என்று சொல்லி, மாலையைத் தன் கழுத்தினின்றும் கழற்றிக் கையில் பிடித்துக்கொண்டு வனராஜனுடைய கழுத்தில் அணிய முயன்றும் முடியவில்லை.

இளங்குமரன் சற்றுக் கம்பமுற்றகுரலில் கூறினான்—"மானே இந்த இனிமையான வேளையில் இந்த முத்திரிகையைத் தவிர உனக்கு அளிப்பதற்குத் தகுதியான பொருள் என்னிடம் வேறே எதுவும் இல்லை. ஆனால் இம் முத்திரிகை நீ உன்னிடத்திலேயே வைத்துக் கொள்ளக் கூடியதாயில்லை. ஆகையால் இதை அடைக்கலப் பொருளாக உன்னுடைய தலைவியும் மக்கட்சாதியில் மான் பேடையாய் விளங்குபவளுமாகிய இந்தத் தேவியிடம் தருகிறேன்." இவ்வாறு சொல்லி இளங்குமரன் தன் முத்திரிகையை, எந்தக் கையினால் முதலில் அந்த இளங்குமரியின் கையைப் பற்றினானோ, அதே கையினால் இளங்குமரியின் அந்தக் கையையே பிரேமையுடன் பற்றி அதன் மோதிர விரலில் அணிந்தான்.

இளங்குமரி கணப்பொழுது தியங்கி நின்றாள்; மனது திடமானவுடனே கூறலுற்றாள்—"வன ராஜ, நீ வனவனாந்தரங்களில் சஞ்சரிப்பவன். உனக்கு மாலை அவசியமில்லை. மேலும் அதை உன்னிடத்தில் வைத்துக் கொள்ளவும் உன்னாலாகாது. ஆகையால் நான் அந்த அன்புப்பொருளை உன் ஆருயிர் நண்பனிடத்தில் அடைக்கலம் வைக்கிறேன்," என்று சொல்லி அவள் தன் கையில் இருந்த இரத்தின மாலையை அவ் விளங்குமரன் கழுத்தில் அணிந்தாள்.

இளங் குமரனும் இளங்குமரியும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு மௌனமாய் நின்றனர்—வனராஜன் மான் பேடையுடன் வேடிக்கையாய் விளையாடிக் கொண்டிருந்தது. கடவுள் மூர்த்தியாகிய கதிரவனும் தன் மேற்குத் திசை மங்கையை அன்புடன் தழுவிக் கொண்டிருந்தான். இதே சுகாநந்த நிலை உலக முடியும் வரையில் இருக்கவேண்டுமென்று கதிரவன் கருதினான். வனராஜனது கருத்திலும் இப்படியே தடையின்றி இந்த மான் பேடையுடன் விளையாட்டிலேயே இந்த ஜன்மத்தை இங்கேயே கழிக்க வேண்டு மென்றும், அந்த இளங்குமரன் எண்ணத்திலும் இந்த இளங்குமரியின் அன்பு நிறைந்த அகண்டமான காட்சியின்பத்தை அநுபவித்துக்கொண்டு இங்கேயே இருக்கமாட்டோமாவென்றும் தோற்றின. வெறும் கருத்தளவில் மட்டும் இருந்தென்ன பயன்? சூரியன் இவ்வளவு தேஜோமயமாய் ஜொலிப்பவ னாயிற்றே. ஆனால் அவன் கூட அங்கத்தேசற்ற வெளிறிய முகமுடைய சந்திரனைப் பரிவார சகிதமாய்க் கண்டதும், வெட்கத்தினால் தன் ஆருயிர்க் காதலியை விட்டுப் பிரிய வேண்டியதாயிற்று. சிங்கமும் வனத்தில் உள்ள சகல மிருகங்களுக்கும் அரசனாயிருந்தும், அந்த மான் பேடையின் பரிபாலகன் அங்கே வருவதைப் பார்த்தவுடன் தன் சுகத்தை இழக்க வேண்டி வந்தது. இனி அவ் விளங்குமரியைத் தேடிக் கொண்டு அவளது தோழிமார் மிகச் சமீபத்தில் வந்துவிட்டபொழுது அவ் வீர புருஷனும் தன் பார்வையை விலக்கிக்கொள்ள நேர்ந்தது.

வந்த பெண்களுக்குள் முன்னே யிருந்த பெண் தூரத்திலிருந்தே—'இந்திரா, என்ன இது? நீ அந்த சிங்கத்தண்டை எப்படி நிர்ப்பயமாய் நிற்கிறாய்? இந்த பயங்கரமான ஜந்துவிடத்தில்உனக்குத் துளிகூட அச்சமில்லையா?" என்றாள்.

இந்திரை இளங்குமரன் பக்கல் கருத்து நிறைந்த பார்வையைச் செலுத்திக்கொண்டு கூறினாள்—"கமலா இது வனராஜன் என்பது வாஸ்தவமே. ஆயினும் இவ்வளவு நல்ல சுபாவமும் உள்ளன்பும் கொண்டிருப்பதால், இதனண்டை நின்றிருப்பதில் எனக்குக் கொஞ்சங்கூட பயம் தோன்றவில்லை. ஆநந்தமாகவே இருக்கிறது. நீ கூச்சமின்றி இங்கே நடந்து வரலாம். பாரேன், நம்ம மான்பேடை இந்த வனராஜனோடு எவ்வளவு குசாலாய்க் கொண்டாடி அடிக்கிறது!"

கமலையின் பின்னே மெல்ல மெல்ல வந்துகொண்டிருந்த ஸரோஜினி விநோதமான குரலில் பேசினாள்—"இந்திரா, இந்த மிருக ஜாதியின் மான்பேடை மிருக ஜாதியின் வன ராஜனோடேயே விளையாடிக்கொண்டிருக்கிறது;ஆனால் அதைப் பார்த்து நமது இந்த மனித ஜாதியின் மடமானும் இந்த மானவ வனராஜனுடன்

விளையாடிக் கொண்டிருந்தாளோ வென்று அநுமானம் உண்டாகின்றது."

இந்திரைக்கு ஸரோஜினியின் மேல் சினங்கொள்ள வேண்டுமென்று அதிக ஆத்திரம் உண்டாயிற்று. ஆனால் இந்திரையின் இரத்தினமாலை அவ் விளங்குமாரனது கழுத்தில் இலங்குவதை ஸரோஜினி கண்ட பொழுது அவள்—"ஏண்டீ இந்த மாலை இங்கே எப்படி வந்தது?" என்று கேட்டாள். அந்தக் கேள்விக்கு விடை கூற இந்திரைக்கு நா எழவில்லை. என்ன பரிகாசம் செய்தாலும், பேசாமல் கேட்டுக்கொண்டிருப்பதே கண்ணியமென்று அவளுக்குத் தோற்றியது.

அப்பொழுது கமலை தனக்கு ஏதோ ஒரு செய்தி நினைவுக்கு வந்தது போல் பாவனை காட்டி, திடீரென்று "இந்திரா, இங்கே எவ்வளவு நேரம் நிற்கப் போகிறாய்? இன்றைக்கே பாடலிபுத்திரத்துக்குத் திரும்பிப் போக வேண்டுமென்று சுபத்திராங்கியம்மா நிச்சயித்திருக்கிறார். கலிங்கநாட்டு யுத்தம் முடிந்துவிட்டது," என்றாள்.

இளங்குமாரன் இடையே குறுக்கிட்டு ஆச்சரியத்துடன் "என்ன சொல்லுகிறீர்? கலிங்கநாட்டு யுத்தம் நின்றுவிட்டதா? நல்லது, அதன் முடிவு எப்படி ஆயிற்று?"

"அநுமானித்தபடியே முடிந்தது. எங்கும் விஜய சீலனாகிய ஸம்ராட் அசோகனுக்கே வெற்றி உண்டாயிற்று. கலிங்கர்கோன் மிருகேந்திரனை எவனோ கொலை செய்து விட்டானாம்."

இளங்குமாரனுக்கு உண்டான பிரமிப்புக்கும் பதைபதைப்புக்கும் எல்லை இல்லை. அவன்—"மிருகேந்திர மன்னன் கொலையா? என்ன இப்படிச் சொல்லுகிறீரே' என்றான்.

"ஆமாம் மிருகேந்திர மன்னன் கொலையுண்டு போனான். இன்றுதான் இந்திர புரத்திலிருந்து ஆள் வந்தான். அவனே வெற்றிச் செய்தியையும் கொண்டு வந்தான். அவன் சொன்னதாவது—"மிருகேந்திர மன்னனை எவனோ சித்தாந்த ஸ்வாமி என்பவன் கொலை செய்துவிட்டானாம். பள்ளியறையின் பக்கத்திலேயே கொலை நடந்ததாம். அதைப் பற்றிய விசாரணை பாடலிபுத்திரத்தில் நடக்கப் போகிறது. சாமியாரைப் பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். கலிங்கநாட்டின் ராஜ்ஜிய பாரத்தை மந்திரியாகிய விசாகாக்ஷனிடம் ஒப்பித்துவிட்டுப் பாடலிபுத்திரத்துக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இளங்குமாரன் ஆச்சரியத்தாலும் துக்கத்தாலும் பதைபதைப்பினாலும் மனங்கலங்கி நின்றான். அவன் வாயினின்று ஓர் அக்ஷரமும் வெளிப்படவில்லை. அவன் கமலையையே அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

கமலை மீண்டும் மொழியலுற்றாள்—"இந்திரா" உன் தமையன் கலிங்கநாட்டின் மேல் வெற்றி கொண்டு ஒப்பற்ற புகழ் சம்பாதித்துவிட்டார். இதை முன்னிட்டு அவருக்கு சக்கரவர்த்தி பதமும், வாய்த்திருக்கிறது. சுபத்திராங்கியம்மாவின் ஜாதகத்தைப் பார்த்து ஜோஸியர்கள் இவருடைய புத்திரன் சக்கரவர்த்தி யாவானென்று சொன்னார்களாம். அந்த ஜோஸ்யம் பலித்துவிட்ட நற்செய்தியைக் கேட்டது முதல் சுபத்திராங்கியம்மையின் ஆனந்தத்துக்கு அளவேயில்லை. எப்பொழுதுபோய்த் தமது சக்கரவர்த்தியாகிய குமாரனைப் பார்க்கப் போகிறோமென்று அவர் ஆவலாயிருக்கிறார். அதுவும் தவிர, இராஜதானியிலுள்ளவர்களும் அரசர் பெருமான் சக்கரவர்த்தி பதம் அடைந்ததை முன்னிட்டு மகா மங்களத் திருவிழா கொண்டாடப் போகிறார்கள். அதை உத்தேசித்து, மாதா ஸ்ரீயும் புத்தபிரானது சரண-பாதுகைகளைத் தரிசிக்கும் பொருட்டு ஹிமாலயத்துக்குப் போவதாயிருந்த எண்ணத்தையும் நிறுத்திக்கொண்டு இராஜதானிக்கே புறப்பட்டுப் போக நிச்சயித்திருக்கிறார்."

கமலை பேசி நிறுத்தியவுடனே இளங்குமாரன் நித்திரையினின்று விழித்தெழுந்தவன் போல் பேசலுற்றான்—'ஆகவே நீர் அசோக மகாராஜனுடைய சகோதரியென்று ஏற்படுகிறதே!"

இந்திரை தலையை அசைத்து ஆமென்று உணர்த்தினாள்.



இளங்குமாரன் கமலையைப் பார்த்து "சித்தாந்த ஸ்வாமிகளைப் பிடித்து எங்கே வைத்திருக்கிறார்கள்," என்று கேட்டான்.

"ஸம்ராட்டோடு கூடவே அவரைப் பாடலி புத்திரத்துக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள். இதற்குள்ளாகப் பெருமானும் சேனை சகிதமாய் இராஜதானிக்குப் போய்ச் சேர்ந்திருப்பார்."

அதன் மேல் இளங் குமாரன் கமலையிடம் ஒன்றும் கேட்கவில்லை. அவனது முகத்தில் சிந்தையின் சாம்ராஜ்யம் நிலைகொண்டது. அவன் எதை எதைப் பற்றியோ தன் உள்ளத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

இந்திரை இளங்குமாரனது முக வேறுபாட்டை அப்பொழுதுதான் கவனித்தாள். மிருகேந்திர மன்னன் கொலை செய்யப்பட்ட செய்தி கமலையின் வாயினின்று வெளிப்பட்ட பொழுது அதைக் கேட்டவுடனே இளங்குமாரன் முகம் வாடிப் போய்விட்டது. அதை இந்திரை குறிப்பிட்டாள். இவளுக்குச் சற்று நேரத்துக்கெல்லாம் இவன் மிருகேந்திர மன்னனுக்கு ஏதோ ஒரு விதத்தில் பந்துவாயிருக்க வேண்டுமென்று சந்தேகம் உண்டாயிற்று. உண்டாகவே அவள் அத்தியந்த விநயத்துடன் இளங்குமாரனை வினவினள் "தங்கள் திருநாமம் என்னவோ?" என்று.

"இந்திரா, என் பெயரைக் கேட்கவேண்டாம். அதனால் உனக்கு ஒரு லாபமும் உண்டாகாது. மாறு, துக்கமே உண்டாகும். ஈசன் திருவருளால் என் பெயரை வெளியிடக்கூடிய நல்ல காலம் வரும்போது, என் பெயரை உனக்குச் சொல்லாமல் இரேன். இன்றைய பேட்டியை நினைவில் வைத்துக்கொள். இப்பொழுது நான் இதற்கருகேயுள்ள சித்தாந்தஸ்வாமிகளின் ஆசிரமத்தில் ஓர் எளிய வித்தியார்த்தியாய் இருக்கிறேன். போகப் போக நல்ல காலம் வரும்போது என் பெயரைக் கூறுவேன். இப்பொழுதைய தரித்திர நாமத்தைக் கூறுவது இராஜ வம்சத்தைச் சேர்ந்த இந்திரையையே ஏமாற்றுவதாகும். அதைக் கூறுவதை விடக் கூறாமலிருப்பதே உத்தமம்," என்று சொல்லிவிட்டு இளங்குமாரன் ஒரு முறை இந்திரையை உள்ளங்கொள்ளப் பார்த்து, இப்பொழுது இவளுடன் ஒன்றும் பேச்சு வைத்துக்கொள்ளக் கூடாதென்று நிச்சயித்துக்கொண்டு திரும்பியும் சிலாதலத்தில் அமர்ந்து நிராகாரத்தில் ஆழ்ந்தான்.

இந்திரை இளங் குமாரனிடம் வந்து "இன்னும் ஒரு வார்த்தை மட்டும். நான் இன்னும் ஒரு செய்தி சொல்லிக்கொள்ளவேண்டியிருக்கிறது. இன்றுதொட்டு நான் என் வாழ்க்கையை இந்த முத்திரிகையின் நினைவிலேயே கழிப்பதென்று நிச்சயத்திருக்கிறேன். தாமும் இந்த இரத்தின மாலையை மறக்கக் கூடாது." என்றாள்.

இளங்குமாரன் "இல்லை—இல்லை இந்தச் சரீரத்தில் ஆத்மஜோதி பிரகாசித்துக் கொண்டிருக்கிற வரையிலும், ஞாபக சக்தி என் மூளையை விட்டு விலகாதிருக்கிறவரையிலும், உலகத்தின் துன்பங்களுடன் போராடி என் புத்தி கெடாதிருக்கிற வரையிலும், இந்த இரத்தின மாலையையும் அதன் உடைமையாட்டியாகிய இந்த என் இந்திரையையும் எப்போதும் மறக்கமாட்டேன்,"

துக்க மேலீட்டினால் இளங்குமாரன் அதற்கு மேல் ஒன்றும் பேசக் கூடவில்லை. இந்திரை அவ்விடத்திலிருந்து செல்ல மெல்ல மெல்ல அடி யெடுத்து வைத்தாள். வன ராஜனுக்குத் தன் சிந்தாகுலனாகிய மந்திரனை இந்திரையை அவளிருப்பிடம் வரையில் கொண்டு போய்ச் சேர்க்க முடியாதென்று தெரிந்தது. ஆகவே இந்தக் காரியத்தைத் தானே செய்யவேண்டுமென்று அது தீர்மானித்து இந்திரையையும் அவளது தோழிமாரையும் ஹரித்துவாரம் வரையிலும் வழியனுப்பச் சென்றது. அப்படிச் செய்வதற்கு வேறொரு காரணமும் இருந்திருக்கலாம்:— அதாவது, அந்த மான் பேடையோடு எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு அதிக நேரம் கூடியிருக்க அவ் வன ராஜனுக்கு ஆசையாயிருந்தது. பிறகு, வன ராஜன் இந்திரையைக் கொண்டு போய்விட்டுத் திரும்பி வந்த பொழுது, சந்திரன் சோதிப்புண்ட பூமி மாதாவைத் தன் குளிர்ந்த கிரணங்களால் சாந்தப் படுத்திக்கொண்டிருந்தது. சிலாதலத்தில் ஒரு தருண பௌத்த பிக்ஷு உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும் முதலில் வனராஜன்

சற்று உறுமியது; ஆனால் பின்பு மிக்க அன்புடன் அந்த பிக்ஷுவினிடம் சென்று அவனது பாதங்களை நக்கத் தொடங்கியது.

தருண பௌத்த பிக்ஷு கூறினான்—“வனராஜ, இந்த வேஷத்திலும் என்னை நீ அடையாளம் தெரிந்து கொண்டாய். உனக்காகவே நான் வழி பார்த்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது எனக்கு விடை கொடு.” இவ்வாறு சொல்லி வனராஜன் கழுத்தை முத்தமிட்டுவிட்டு அந்த பிக்ஷு இரண்டு நாலு கண்ணீர்த் துளிகள் சிந்தினான். ஹரித்துவாரத்துக்கும் ஆசிரமத்துக்கும் நமஸ்காரம் செய்து அந்த பௌத்த பிக்ஷு பாடலிபுத்திரத்துக்குச் செல்லும் மார்க்கமாய்த் திரும்பினான். துஷ்ட விலங்குகளின் வேந்தனாகிய வனராஜனும் வேகமாய் அடியெடுத்து வைத்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

# யோக சாதனம்

—[o]—

(உத்தரயோகி அரவிந்த கோஷ் எழுதியதை க. அமுதன் மொழிபெயர்த்தது)

அடுத்தது சித்தம். சித்தத்தில் இரண்டு தட்டுகள் உள; ஒன்றில் ஆவேகங்கள், மற்றொன்றில் செயலற்ற ஞாபக சக்தி. நம்மால் பார்க்கப்பட்ட, நினைக்கப்பட்ட, உணரப்பட்ட சகல வஸ்துக்களின் சின்னங்களும் சித்தத்தின் அடித்தட்டில் விழுந்து பதிகின்றன; மேலும் அவைகள் ஜீவன் நமது உடலை விட்டு நீங்குகிறவரை அங்கு தங்கி வாழ்கின்றன. பிறகு கூட இப் பதிவுகளனைத்தும் ஸூக்ஷ்மதேகத்துடன் கலந்து ஜீவனுடன் மற்ற உலகுகளுக்குச் செல்கின்றன. ஜீவன் மறுபடி பிறவியெடுக்கும்பொழுது அவைகள் மூலாதாரத்திலுள்ள வெளித் தெரியா அந்தரங்க ஸம்ஸ்காரங்களாக ஜீவனுடன் வந்து சேர்கின்றன; இது பற்றியே சாதாரண ஜனங்களுக்குத் தங்களுடைய முற்பிறவிகளைக்குறித்து ஞாபகம் வருகிறதில்லை; மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பினால் முற்பிறவி நினைவுகளைப்பெறலாம். புத்தியின் ஸக்ரிய சைதன்யம் அந் ஞாபகப் பதிவுகளைத் தாண்டி எழுப்பும் வரை அவைகள் அப்பிரகாசமாகவே இருக்கும். புத்தியை எட்டும் பழைய நினைவுகள் நாம் வேண்டாத காலத்துங்கூட திரும்பத் திரும்ப வந்து தொந்திரைகொடுக்கும் வழக்கத்தை உடைத்து; வழக்கமான எண்ணங்கள், கருத்துகள், உணர்ச்சிகள், அபிப்பிராயங்கள் முதலியன மனம் சாந்தியை அடைகிற வரையில் யோகசாதனைகளை அல்லற்படுத்திவரும்; ஏனெனில் மேற்சொல்லியவைகள் மனோ நிலத்தில் நிகழ்கின்றவைகளாகும்.

ஆவேகங்கள் * இரண்டாவது அல்லது சித்தத்தின் மேற்தட்டிற் குரியவைகள். உறுதியின் கட்டளைகள் சித்தத்தில் வந்து தங்கும்பொழுது ஆவேகங்களாக மாறி, தூண்டல்களின் உருவை அடைகின்றன. அவைகளை மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கலாம்: எண்ணத் தூண்டல்கள், உணர்ச்சித் தூண்டல்கள், செயற் தூண்டல்கள். எண்ணத் தூண்டல்களுக்குப் பல பெயர்களுண்டு. இயற்கையறிவு † பிரேரணை ‡ நுண்ணகப் பார்வை ¶ பிரதிபை $ ஸஹஸ்ரதளத்திலிருந்து ஜீவன் அனுப்பும் செய்திகளேயாம் இவைகள். ஸஹஸ்ர தளத்திலிருந்து, நம்மையறியாது புத்தியின் வழியாகச் சென்று மேற் சொல்லியவைகள் சித்தத்தில் புகுந்து தங்குகின்றன. அகம் அல்லது புறத் தீண்டல்களினால் இவைகள் கிளறுண்டு தூண்டப்படும் பொழுதெல்லாம் திட்டெனக் கிளம்பி சுயம் பிரேரணை போலவும், சுயம்பிரதிபை போலவும், விஞ்ஞான பூமியிலிருந்து இறங்கிய ஒளிக் கதிர்கள் போலவும் புத்தியை எட்டித் தாக்குகின்றன. ஆனால் இவைகள் ஆவேகங்களினால் சோபையில்மாறுதலையடைந்தும், சித்தத்தின் கூட்டுறவால் விபரீத வேறுபாடுகளையடைந்தும், இவைகளை புத்திக்குக் கொண்டு செல்லுகிற கற்பனா சக்தியால், இவைகளை சுய நிலையினின்று பெரிதும் பிரண்டவைகளாகும். நம்பிக்கை, பக்தி, கவிதா சக்தி, முதலியவைகள் அநேகமாக இந்த இடத்தினின்றே உதயமாகின்றன. இது சாதாரண மனிதனுக்கு நிரம்ப உபயோகமானது, விலங்குகளுக்கு அத்தியாவசியமானது, ஆனால் யோகிக்கு மிக்க இடையூறை விளைவிக்கக் கூடியது.

சாதாரணமாக ஆவேகங்களென்று சொல்லப்படுகிறவைகளை உணர்ச்சித் தூண்டல்களாகும். ஆவேகங்கள் இருவகைப்படும்: இயற்கையாவேகங்கள், செயற்கை ஆவேகங்கள். இவையிரண்டிலும் முதற்சொன்னவைகள் அழியாத சாசுவத குணத்தை உடைத்து. இரண்டாவது சொன்னவைகள் மாறுதல்களை அடையக்கூடியவை; ஆகவே இவைகளுக்கு விகாரங்கள் எனவும் ஒரு பெயருண்டு. அன்பு இயற்கையானது; அது ஞானத்தினின்று உதயமாகின்றது; பரிணாமத்தில் நீடூழி வாழக் கூடியது; பகை அன்பின் விகாரம், அஞ்ஞானத்தினால் உண்டான ஒரு சீர்கேடான நிலை. அது போலவே துணிவு அல்லது திண்மை சாசுவதப் பேறாகும்; அச்சம் விகாரப்பொருள். கருணை சாசுவதப் பொருள்; இரக்கம், வெறுப்பு, அருவருப்பு முதலியன விகாரப் பொருள்களாகும். அன்பு, திண்மை, உண்மை, சிறந்த ஆதர்சங்களில் நாட்டம் முதலிய இயல் தன்மைகள் தருமமானவைகளாகும்; இவைகளின் விகாரங்கள் அதர்மங்களாம். மேற்காட்டிய வரையறுப்பு சாசுவத நிலை நோக்கத்தினின்று பார்த்துக் கண்டு பிடிக்கப் பட்டது. இதற்கும் லௌகிக தர்மத்திற்கும் ஒரு வித தொந்தார்த்தமும் கிடையாது. மேலும், வளராத நிலையினின்று வளர் நிலையை அடைவதற்கும், அதம தர்மத்தினின்று உத்தம தர்மத்தை அடைவதற்கும் நடுவில் அதர்மம் அநேகதடவைகளில் நம்மை ஆபத்தஞ் செய்வதற்கு வேண்டிய கருவி அல்லது இடைவழியாக அவசியமாகின்றது. யோகிக்கு விகாரங்களினின்றும் விடுபடுதல் அவசியம், ஆனால் அவன் ஸனாதன தர்மங்களினின்று பிறண்டுவிடக் கூடாது.

செயற் தூண்டல்கள் மூன்றாவது வகுப்பாகும். இவை மனிதனுடைய இராஜஸிக வளர்ச்சியினால் சித்தத்தில் ஏற்பட்ட ஒரு தாற்காலிக அமைப்பாகும். ஆசை அல்லது ஆவேகத்தாலல்லாது அசுத்த இராஜஸிக மனிதனை செயலின் பொருட்டு சுலபத்தில் தூண்ட முடியாது. அன்பு, பகை, அவா, வெகுளி முதலியன அவனகத்து மூண்டெழுந்தால்தான் அவனால் செயல் புரிய முடியும்; அவைகள் அவனிடம் எழாத காலத்து அவன் வலியற்று இயங்குவான். நிஷ்காம கருமமெனப் படுகிற ஸுத்தப் ப்ரவ்ருத்தியை அவன் அறியான். மனிதனுடைய இயல் அல்லது ஸ்வபாவத்திற்கு ஆவேகம் பல நிற ஒளிகளைத் தரவேண்டும். மனிதன் சாதாரணமாக அன்பு, திண்மை, கௌரவம், உயர் நோக்கம், தற்சார்பு முதலிய உணர்ச்சிகளுக்கு எப்பொழுதும் ஆலயபதமாக இருக்கவேண்டும். ஆனால் அவன் ஒரு தனி உணர்ச்சியால்—இவ்வுணர்ச்சி எவ்வளவு மேம்பட்ட குணத்ததாக இருந்த போதினும் சரியே—செயலின் பொருட்டுத் தூண்டப்பட்டுவிடக் கூடாது. விஞ்ஞான கோசத்தில் உள்ள

* Emotions † Instinct ‡ Inspiration
¶ Insight $ Intention

புருஷனிடம் போக்கு வரத்து செய்யும் தபஸ்-சக்தியின் தூண்டல் ஒன்றுக்கு மட்டிலுமே அவன் முற்றிலும் இணங்கி நடக்க வேண்டும்; இவ்வாறு இணங்கி நடக்கும்பொழுது புத்தியினால், தவறுறுதி என் அந்த பிரத்யேகமான வழியில் இயங்குகிற தென்பதை அறிந்துகொண்டு, தன் சுபாவத்திற்குத் தக்க ஆவேகத்தினால் செயலுக்கு ஒரு சோபையை அவன் தந்துகொள்ள வேண்டும். ஆனால் புத்தி அல்லது ஆவேகமானது செயலில் நேரில் தலையிட்டு அதை நிர்ணயிக்கக்கூடாது. புத்தி எண்ணங்களுக்காகவும் சித்தம் ஆவேகங்களுக்காகவும் ஏற்பட்டுள்ளன. சுத்த நிலையினின்று வெளிப்படும் செயல்களுடன் அவைகளுக்கு ஒருவித சம்பந்தமும் கிடையாது. புத்திமானாகிய அசுரன் செயல்களைத் தன்னுடைய விசார புத்தியினால் அல்லது ஆதர்சத்தினால் நிர்ணயிக்கிறான்; ஆவேக அசுரன் செயல்களைத் தன்னுடைய உணர்ச்சிகளால் நிர்ணயிக்கிறான். ஆனால் சுத்த புருஷனானவன் விஞ்ஞானத்தின் திவ்ய இருக்கையினின்றெழும் உயர்தரப் பிரேரணையால் செயல்களை நிர்ணயிக்கிறான். ஜனங்கள் இதையே **ஆதேச** மென்கிறார்கள். சுத்த புருஷன் ஒருவனாலேயே இவ்வித ஆதேசத்தில் நம்பிக்கை வைக்க முடியும்; சுத்த நிலையை அடையாத யோகியானவன் பலதரங்களில் தன்னுடைய கருத்துகளையும், கற்பனைகளையும், ஆவேகங்களையும் —விருப்பங்களையும் கூட—ஆதேசமெனக் கொள்கிறான்.

ஆகவே, யோகி தன்னுடைய சித்தத்தின் அடித் தட்டின் இயக்கத்தினின்று விடுபட்டு வெளிவர முயலல் வேண்டும். ஏற்கனவே சொல்லியுள்ள வழியினால் மனதை சாந்திசெய்து அதன் பயனைப் பண்டை ஞாபகப் பதிவுகளினின்றும் விடுபடவேண்டும்; இவ் உபாயத்தினாலேயே தானாக எழும் எண்ணம் அல்லது எண்ணத்தூண்டல்களையும் விலக்க முயலவேண்டும்; ஆவேகத்தூண்டல்களை உறுதியினால் அமைதி செய்து ஆவேகங்களினால் செயல்புரிய தென்னும் வழக்கத்தை ஒழிக்கவேண்டும்; இதனால் ஆவேகங்கள் தூய்மைபெறும். இதயத்தினின்றெழுகிற உக்கிர விகாரங்கள், ஆவேகங்கள் முதலியவைகளினால் தூண்டப்பட்டு கண்மூடித்தனமாகப் போவது அல்லது செயல்புரிவதென்பதை உறுதிச் சக்தியினால் களைந் தெறியவேண்டும். ஆவேகங்கள் பிறகு அமைதியைப் பெறும்; ஆவேகங்கள் செயலின் பொருட்டு முற்றமாக எழுவதை அடக்கி அவைகளைக் கடலின் அலைகள் போல எழுந்து மடியும்படி வழக்கப் படுத்த வேண்டும். செயலில் ஆக்ரமிக்காது அல்லது வாழ்க்கையை அல்லது கருத்துகளை ஆட்கொள்ளாது தங்கள் இருக்கையில் இன்புறும் தன்மையுள்ள அமைதி அலைகளுக்கே சுத்த ஆவேகங்களென்று பெயர். உபரொழுந்து புத்தியை அமைத்து எண்ணத்தை அல்லது அபிப்பிராயத்தை நடமாடச் செய்ய முயலும் ஆவேகங்களுக்கு அல்லது வெளிக்கிளம்பி மொழிகளாகவும் செயல்களாகவும் இயங்கும் ஆவேகங்களுக்கும் அசுத்த ஆவேகங்களெனப் பெயர். அதாவது சித்தத்தினின்றெழும் ஆவேகங்கள் போகத்தின் பொருட்டு மாத்திரமே; வேறொரு உயர்தர தத்துவம் செயலை நடத்திக் கொடுக்க வேண்டும்.

இன்னொரு முறை சொல்லுமிடத்து, இதயத்தை தபஸ்-சக்தி சித்தஞ்செய்து, ஆண்டு, புறம்பிரித்துத் தரவேண்டும். மனது அமைதியாயிருக்கும்பொழுது ஞானம் இயங்கத் தொடங்கினால் மட்டுமே தபஸ்-சக்திக்கு மேற்சொல்லியவைகளை செய்துதரப் பெரிதும் இடமுண்டாகும். மனம் சாந்தியைப் பெறின், இதயம் எளிதில் தூய்மையை அடையும்.

# கொன்புத்ஸன் *

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதுவது)

யாருடைய மொழிகள் மனிதர் மரபில் ஏறக்குறைய அரைப்பங்கு அடங்கிய சீனத்தின் வேதமாக விளங்குகிறதோ, யார் இடமகன்ற சீன நாட்டின் தலைவனும், ஆசானும் விளங்குவதோ, யார், மக்களறத்தையும், மன்னறத்தையும், அறவழியையும் சீனருக்கு மொழிந்ததோ, யாருடைய கோயில்கள் சீன வள நாடெங்கும் இன்றும் சிறந்து விளங்குகின்றனவோ, யாருடைய நூல்கள் அந் நாட்டின் கல்விக்கும், அறிவிற்கும் அடிப்படையா யுள்ளனவோ அப்படிப்பட்ட சீரியன், கொன் புத்ஸனின் வரலாற்றையும் திரு மொழிகளையும் இம்முறை அன்பர்கள் கேட்பார்களாக!

சீன நாடு பழைமையில் நம் நாட்டை யொத்தது. [illegible] வழி தொட்டுத் தன் சொந்த நாகரீகத்திலேயே [illegible]லைத்துள்ளது. புற நாடுகளை எதிர் பாராது பெருமையுடன் தனியரசாய் நிலவுகிறது. தன் கலைகளையும், நடையுடைகளையும், அறக் கோட்பாடுகளையும் தனக்கேற்றவாறு தானே அமைத்திலங்குகிறது. சீனர் அறிவிலும், முயற்சியிலும், மறத்திலும், தொழிலிலும், கலையிலும் சிறந்தவர். தன் நீண்ட பெருஞ் சுவற்றைத் தாண்டி ஒரு அன்னியனும் வந்து தன் சுதந்திரத்தைக் கெடுக்காது சுமார் பதினாயிரம் வருஷமுள்ள நாகரீகத்தைப் படைத்த சீனதேசம் ஆதி காலத்திலிருந்தே பட்டு, காயிதம், வெடி மருந்து, அச்சு இயந்திரம், இசைக் கருவிகள், கண்ணாடி முதலிய பல கைத்தொழில்களில் முதன்மை பெற்றிருந்தது. சித்திர வேலைகளில் சீனத்தர் பேர்போனவர்கள். உலகத்திலேயே மிகப் பெரிய போகராதி † சீனாவில்தான் முதல் முதல் எழுதப்பட்டது. இந்த உயர்வுக்கெல்லாம் காரணம் சீனத்தவர் சுதந்திர உணர்ச்சியே.

பழைய சீனத்தர் இயற்கையைத் தொழுதார்கள். தங்கள் முன்னோர்களின் உருவங்களை வணங்கினார்கள். இன்றும் சீனத் தரசனின் அரண்மனையில் காலஞ் சென்ற துறவிகளுக்கும், அரசர்களுக்கும், அறிஞர்களுக்கும், மலைகளுக்கும், நதிகளுக்கும், வயல்களுக்கும் எல்லாவற்றினும் உயர்ந்ததும் பழைமையுமான வானத்திற்கும், வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

சீனத்தவரின் நாகரீகத்தைச் சிறப்புறச் செய்தது அவர்களுடைய சமயங்களே. சீனாவில் மூன்று சமயங்கள் நிலவுகின்றன. அவற்றுள் கொன்புக்ஸனுடைய சமயமே முதன்மையானது. இதற்கும் புராதனமான ஆனால் சிறுபான்மையோராலேயே வழிபடப்பட்ட சுத்த அத்வைத மாகிய லவோத்ஸனுடைய மதம் இரண்டாவது. மூன்றாவது புத்த மதம். சீனர் புத்தரை 'போ' என்று அழைப்பார்கள். இம் மூன்று மதங்களுக்குள் சீனத்தின் ராஜ மதமாகிய கொன்புத்ஸனுடைய மதத்தையும் வரலாற்றையும் ஆராய்வோம். இம் மதத்தைச் சீனர் ஜூஇஸியா என்பர்.

## கொன்புக்ஸன்னின் பிறப்பும் வாலிபமும்.

சீனத்தில் ஒரு புதிய தூற்றாண்டை உண்டு பண்ணின கொன்புத்ஸன் கிறிஸ்துவுக்கு ருருக ஆண்டுகளுக்கு முன் பிறந்தான். புத்தருக்குப் பின்னரே கொன்புத்ஸன் பிறந்தது. சிலர் புத்தர் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே அவன் பிறந்ததாகச் சொல்லுகிறார்கள். இவன் பிறந்தது ஒரு சிறந்த இராஜ குடும்பத்தில். லூ என்னும் சீன மாகாணத்தில் வேலை பார்த்திருந்த அவன் தகப்பனார் கொன்புத்ஸன்னின் மூன்றாவது வயதில் தவறிவிட்டார். ஆனால் ஒரு தகப்பனின் கவலையையும் சேர்த்து அவன் தாய் அவன் பாசஞ் செலுத்தினள். கொன்புத்ஸனுடைய தாயார் தனி நல்லாள். நன்கு கற்றறிந்தவள். ஒரு வீரனுக்கேற்ற சீரிய அன்னை. தன் மகனுக்கு வீரர் சரிதைகளைச் சொல்லி, உணவோடு வீரவுணர்ச்சியையும் குழந்தைக்கு ஊட்டினள். ஒரு சிறந்த வீணையால் ஏவப்பட்டு

* Kung-foo-tze latinized into CONFUCOIUS
† Encyclopedia

உதித்த நமது கொன்புத்ஸனும், தாயாரை அடிக்கடி. தன் நாட்டின் பழையவரலாறுகளையும், தன் தேசத்தின் தற்கால நிலைமையைப் பற்றியும் அடிக்கடி வினவுவான். பெரியோர்களிட்ட அறநெறிகளை அடிக்கடி ஊக்கமாகக் கேட்டறிந்து எண்ணுவான்.

கொன்புத்ஸன் கல்விப் பசி மிகுந்த பையனானான். சீன நாட்டின் பழைய நீதி நூல்களை யெல்லாம் விருப்புடன் படித்தான். பூஷி என்னும் பண்டைய அறிஞரின் சிறந்த நீதி நூல்களை மனப்பாடம் செய்தான். இந்தப் பூஷி என்பவரே சீனரின் மனுவாக விளங்குகிறார். ஒரு பெரிய ஊழி வெள்ளத்தினின்று இவர் எழு தோழருடன் தப்பி எழுந்ததாகவும், பிறகு மணம் புரிந்து மூன்று ஆண் மக்களையும் மூன்று பெண் மக்களையும் பெற்று அவர்களுடைய கலப்பினாலேயே உலகம் முழுதும் புத்துயிர் பெற் றெழுந்ததாகவும் சீனர் கூறுவர். இந்த பூஷியினிடம் கொன்புத்ஸனுக்கு வணக்கம் மிகுதி. வெகு ஆர்வத்தோடு, தான் பின்னே செய்யப் போகும் பெருந் தொண்டையே எண்ணி கொன்புத்ஸன் பதினைந்து வயதிற்குள் பற்பல நூல்களைக் கற்றுப் பேரறிஞனானான். கல்வியுடன் தன் நடத்தையையும் நல்வழிப்படுத்தினான். தன் தாயினிடம் அளவற்ற வணக்கம் செலுத்தினான். அன்பு, பொறுமை, விடாமுயற்சி, தைரியம், பெருந்தன்மை முதலிய தூய தன்மைகள் பொற் குடத்திற் கற்பதித்தது போலும், அழகிய மலருக்கு வாடா நறுமணம் போலும் அவன் வாழ்வோடு பொருந்தின. தன் வருங்கால வாழ்விலேயே தன்னை ஒரு மனப்படுத்தி, அதன் வழியிலேயே வாழ்வை உறுதியுடன் நடத்திக் கொண்டு செல்ற நமது வீரனுக்குப் பத்தொன்பது வயதிலேயே திருமணம் நடந்தது. குடும்ப வாழ்க்கை தன் புயங்களில் அழுந்த உட்கார்ந்தவுடன் அதைத் தாங்கப் போதுமான பொருளை ஈட்டுவதற்குப் பல முயற்சிகளிற் புகவேண்டியிருந்தது. தன் எண்ணங்களை, மனைவியும், சுற்றத்தாரும், குடும்பக் கவலையும்; முடிவில் தனது வாழ்க்கை நோக்கமும் பங்கிட்டன. முன்னே மாற்றப்படாது முழுதாக இருந்த வாழ்க்கை இப்போது பல கவலைகளாக மாற்றப்பட்டது.

இருப்பினும் கொன்புத்ஸன்னின் மனது அடிக்கடி தன் நாட்டின் நிலைமையையே எண்ணியது. அக் காலத்தில் சீன சமூகம் அறத்தில் தாழ்ந்து மறத்தில் வீழ்ந்து கொண்டிருந்தது. தேசமானது பல சில்லறை அரசுகளாக வகுக்கப்பட்டிருந்தது. எங்கும் சிற்றரசர் பலர் வலுத்தனர். ஒருவருக்கொருவர் போர் புரிவதில் காலத்தைச் செலுத்தினரே யன்றி தேச முன்னேற்றத்தை எண்ணிலர். போரென்றால் அதன் பரிவாரங்களான கொலையும், கொள்ளையும், கூக்குரலிட்டுக் குதித்தன. நல்லோர் மனம் பதைத்தது. பணக்காரர்களின் மாளிகைகளில் நடந்த அழி செயல்களுக்கு அளவில்லை. ஏழைகளின் கண்ணீருக்கும் அளவில்லை. முந்தையோர் கண்ட நெறிகளின் மீது மறதி யென்னும் இருள் மூடிற்று. தான்றோன்றித்தனமே அதிகமாயிற்று. சீரும் செல்வமும், பழைமையும் கலையும் செறிந்த நாடு போரும் பொய்யும் நிறைந்ததாயிற்று. தன் தாய் நாடு இத்தகைய தலைவிரி கோலத்துடன் தன்னெதிரேநிற்கக் கண்ட நமது வீரன் என் செய்வான்! அதையே நோக்கி அழுதழுது புலம்பினான். நாட்டைக் காக்கும் வழிகள் பழைய நூல்களிலேயே யுள்ளன வென்று பழைய சாத்திரங்களை இடை விடாது கற்றான்.

குடும்பம் ஒன்று இருக்கிறது. மேலும் ஒரு உத்தியோகம் வகித்தால்தான் ஜனங்களுக்குத் தன்னை முதலில் தெரியப்படுத்திக் கொள்ளலாம். ஆகலின் கொன்புத்ஸன் தன் ௨௬-வது வயதில் பல அரச சபைகளுக்குச் சென்றான். இராஜ தர்மத்தையும், தேச தர்மத்தையும், சமூக தர்மத்தையும், வேண்டுமட்டும் எடுத்துச் சொல்லி, தன்நாட்டாரைப் பழைய வழிகளில் திருப்ப முயன்றான். நல்லொழுக்கமே அரசாட்சியின் அடிப்படை என்று வற்புறுத்தினான். இது சிலருக்குப் பிடிக்கவில்லை. இன்னும் அரசரைக் காலத்தின் கோலம் நீங்கிலது. நீதி சொல்லும் நல்லோனுடன் வாது புரிந்து பிரிந்தனர். யூ என்னும் அரசன் காலத்தில் சீன நாடு செல்வ நாடாயும் தெய்வ நாடாயும் விளங்க அடிப்படையாயிருந்த அறங்களை கொன்புத்ஸன் அரசர்களுக்கு எடுத்துரைத்தான். ஒன்றும் பலிக்கவில்லை. அரசாங்கத்திற்கு அரசாங்கம் பல வகையான பதவிகள் வகித்து அமர்ந்திருந்தான். அங்கே பணக்காரரின் விருந்துகளும், கூத்துகளும், அக்கிரமங்களும், சீ[illegible] கேடான நிலைமையும், வேலைக்காரரின் கோ[illegible] பொறாமையும், பொய்யும், சண்டையும் கண்டு தி



திடுக்கிட்டான். எங்கே அமர்ந்தாலும் கொன்புத்ஸனின் நீதிவழி கூட இருக்கும் நேயருக்குப் பிடிப்பதில்லை. அவன் மேல் கட்சி கட்டிக்கொண்டு சதியாலோசனை செய்து அவ்விடத்தைவிட்டு அவனைக்கிளப்பி வந்தார்கள்.

கொன்புத்ஸனுடைய மனம் பெரும் ஆறுதலைத் தேடித் திரிந்தது.

அக் காலத்தில் லாவோத்ஸன் என்ற பெரிய அத்வைதி சீன நாட்டை அலங்கரித்து விளங்கினார். இவர் கிறிஸ்து பிறப்பதற்கு ௬௦௪ ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர். கொன்புத்ஸனைவிட ௫௩ ஆண்டு முதியவர். இவர் சீனர் லீ என்று சொல்லும் திராக்ஷை மாத்தடியில் பிறந்ததினால் இவருக்கு லவோ என்று பெயராயிற்று. பிறக்கும்போதே இவர் மண்டை முற்றும் நரைத்திருந்ததாம். ஆதலின் இவரைக் 'கிழட்டுப் பையன்'' என்று அனைவரும் அழைப்பர். லவோத்ஸன் சோ என்னும் அரசாங்கத்தில் கணக்குக் கட்டுகளை மேல்பார்த்துக்கொண்டிருந்தார். அரண்மனையின் ஒரு முக்கியமான பாகத்திற்குக் காவலராகவும், இருந்தார்.

இப்படி இருக்கும்போதே லவோத்ஸனுடைய மனம், தவோ என்று அவன் அழைத்த தத்துவப்பொருளின் தியானத்திலேயே ஆழ்ந்திருந்தது. உலகில் மனப்பற்றை நீத்தான். மௌனம் பேணினான். சங்கம்வெறுத்தான். சிந்தை தெளிந்தான். சித்தை அறிந்தான். பேரின்பமடைந்தான். போகம் விடுத்தான். யோகம் மடுத்தான். இந் நிலையிலிருக்கும் லவோத்ஸன்னின் புகழ் மெல்லப் பரவிற்று. இதைக் கேள்வியுற்ற நமது கொன்புத்ஸன் இம்மஹானைக் கண்டு ஆறுதலடையலாமென வந்தான். வணக்கமுடன் தன் சந்தேகங்களைத் தெரிவித்துத் தன் நாட்டினர் முன்னேற்றம் வழியையும் கேட்டான். முற்றிலும் மௌனத்தையே விரும்பும் லவோ "தம்பீ, நீ பேசுகிறவர்கள் இறப்பவர்கள்; புத்திசாலியான வியாபாரி தன் செல்வத்தை மறைத்துவிட்டு வெளியே ஏழை போல் காட்டுவதொப்ப, அறிஞர் பூரண ஞானமுடையவரா யிருந்தும் அவற்றை யெல்லாம் வெளியே காட்டாது அடக்கமாயிருக்கிறார்கள். நீ என் ஜனங்களுக்கு வலுவில், பெருமையுடன் உபதேசிக்கிறாய்? உன் இளமையின் துடிப்பையும் ஆசையையும், அடக்கு. மனிதன் வெளியே சீர்திருந்தினால் மட்டும் போதாது. உள்ளேயன்றோ சுத்தமாக வேண்டும். தத்துவ ஆராய்ச்சி செய்து உன்னையே நீ அறி. உலகை இயற்கையின் வழியில் விட்டுவிடு. மனிதனுடைய சட்டங்களால் ஜனங்களை நெருக்கியாள முயலுவது பேதமை. அரசாங்கமே ஜன சுயேச்சையின் சத்துரு. சட்டங்களும் அடக்குமுறைகளும் குறையக்குறையக் குற்றங்கள் குறையும். அரசரின் புன் சிரிப்பை நாடி அலையாதே. உள்ளே இலகும் தவோவை அறியத் தியானம் செய். உன்னை நீ வெல்லு. மௌனத்தினால்தான் ஞான வளர்ச்சி ஏற்படும். எளிமையும், அஹிம்சையும், அடக்கமும், சாந்தமும், களிப்பும் வகித்து தத்துவ ஆராய்ச்சி செய்'' என்று லவோத்ஸன் உபதேசித்ததை கொன்புத்ஸன் கேட்டான். தன் கொள்கைகளுக்கும் இவ் வுபதேசத்திற்குமிடையில் வெகு தூர மிருக்கக் கண்டு சென்றுவிட்டான். லவோத்ஸன்னும், உலகின் அசுத்தத்தையும் முதன்மையான சோ அரசாங்கத்திலுள்ள ஊழல்களையும் கண்டு சகிக்காது, சமாதானத்தை நாடித் தனியே ஓடிப்போய் தவஞ் செய்யத் தீர்மானித்து வெளியேறி விட்டான். வழியில் தன்னை நன்கறிந்த ஒரு சுங்க உத்தியோகத்தன், அவனைப் பிடித்து வைத்துக்கொண்டு "ஐயனே தாங்கள் தனியே ஆழ்ந்து விடின் தங்களுக்குள்ளிருக்கும் ஞானரத்தினம் உலகிற்கு எப்படிப் பயன்படுவது? ஆதலின், தங்கள் கொள்கைகளையும் அநுபோகத்தையும் புத்தகமாக எழுதிவைத்துவிட்டுப் பிறகு வேண்டுமென்றால், தனித் தவம் நாடுங்கள்,'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். லவோத்ஸன், தன் கொள்கைகளை விரித்து ௫௦௦௦ சீன எழுத்துக்களில் தவோ தே கிங் என்ற இரு புத்தகங்கள் எழுதி வைத்துவிட்டு எங்கே சென்றானென்று ஒருவரும் சொல்லமுடியாது. பிறகு அவன் வாழ்க்கையின் மேல் ஒரு மறைதிரை விழுந்துவிட்டது. தனியே எண்ணி, தனியே வாழ்ந்து, தனியே இறந்தான் லவோத்ஸன். அவன் சீடனான சாந்த்ஸன் தன் குருவின் திருநூல்களை எங்கும் பரவச் செய்து பல சீடரைச் சேர்த்துத் தன் குருவின் பெயரைச் சீனமெங்கும் தொழச் செய்தான்.

நமது கொன்புத்ஸன் லவோத்ஸனை வணங்கினன். எனினும், தன் கொள்கைகள் அவன் தனிமைக் கொள்கைகளினின்று முற்றிலும் மாறுபடக் கண்டான். உலகமோ அகன்ற வானமும், எண்ணிறந்த மீன்களும், சூரியனும், சந்திரனும் அழகு செய்யும் கூரையையுடைத்தாயிருக்கிறது. கம்பீரமான மலைகள் மனிதனுடைய மனதை உயர்த்தி நிமிர்ந்து நிற்கின்றன. நீண்டு அகன்ற மஞ்சள் நதியும், ஹோயாங்கோ நதியும் ஆனந்தமாகப் பாடிப் பல பயிர்களை ஊட்டி சாந்த சமுத்திரத்தில் கலக்கின்றன. எண்ணிறந்த சோலைகளும், காடுகளும், வனங்களும், மரவகைகளும், கண்களை நிரப்பிப் பசுங் கோட்டைகள் போல் இங்குமங்கும் காணப்படுகின்றன. பலவகையான பிராணிகள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு உண்மையை விளக்கி, உலகில் விளங்குகின்றன. உலகை அழகுறுத்தும் மாதரும், உலகைத் தம் ஆண்மையால் தாங்கும் வீர மனிதரும், இளைய வாலிபரும், பசிய குழந்தைகளும், கடவுளின் அருமையான படைப்பன்றோ. இவ்வற்புத வுலகையும் மனித சமூகத்தையும் மறந்து மனிதன் எப்படித் தனியே சென்று மூக்கைப் பிடித்துஉட்காருவது? அதற்காக மனிதன் பிறக்கவில்லை! உலகை மனிதன் அனுபவிக்கவே வேண்டும். சிருட்டிப் பொருள்களிலெல்லாம் மேலான மனிதருக்குத் தொண்டு செய்வதே தான் ஈடேறும் வழியெனத் தீர்மானித்து கொன்புத்ஸன் ஜன ஊழியத்திற் புகுந்தான். வாய்வேதாந்தம் வெறுமையெனத் தள்ளினன். தனக்கே கடுமையான விதிகள் விதித்துக் கொண்டு அதன்படி தன் வாழ்வைப் பழக்கித் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டான். "௧௫-வது வயதில் என் மனது கல்வியில் சென்றது. ௩௦ வது வயதில் நான் நன்னெறியில் ஊன்றிக்கொண்டேன். நாற்பதாம் ஆண்டில் மாயையினின்று விலகினேன். ௬௦-ம் ஆண்டில் என் காதுகள் உண்மையைக் கவனித்து, அறிந்து ஏற்றுக்கொண்டன. ௭௦-ம் ஆண்டில் என் மனம் சிறுமையின்பால் செல்லாது, பெருமையான எண்ணங்களிலும், செய்கைகளிலும் நிலைத்தது. என்று தன்னைப்பற்றித் தானே கொன்புத்ஸன் சொல்லுகிறான். படிப்படியாகத் தன்னைச் சீர் திருத்திக்கொண்டு அவன் தன் சமூகத்தையும் சீர்திருத்தினன். "நல்ல குணங்களை விருத்தி செய்யத் தவறுதலும், கற்றதைப் பகுத்தறியாமையும் பெரியோர் வழியைக் காட்டியும் அதன்படி நடக்கமுடியாமையும், பிழைகளை வருந்தித் திருத்திக் கொள்ளாமையும், என் துக்கங்களுக்குக் காரணமாயிருந்தன," என்று கொன்புத்ஸன் உரைக்கிறான்.

தன் உயர்ந்த அறிவால் கொன்புத்ஸன், சங்து என்ற ஊருக்கு நியாயாதிபதி யானன். அவ்வூரை வெகு நீதியுடனும் கவலையுடனும் கொன் ஆண்டான். ஏழைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான். கல்வி சுகாதாரம், தொழில் முதலியவற்றிற்காக வேண்டுமட்டும் செலவழித்துப் பொது ஜனங்களின் வாழ்வை உயர்த்தினன். இதோடு ஜனங்களுக்கு நீதி தர்மத்தைக் கற்பித்தான். தான் தன் வாழ்க்கையில் கண்ட உண்மைகளைப் பலருக்குச் சொன்னன். அவனுடைய பரிசுத்தமான வாழ்க்கையும், பழைய வழிகளை அவன் அனுசரித்துப் போதித்த வகையும் ஜனங்களை அவன் பால் இழுத்தன.

கொன்புத்ஸன் தனது ௫௦-வது வயதில் லூ என்ற அரசாங்கத்திற்கு மந்திரியானன். அந்த அரசாங்கத்தை வெகு திறமையுடன் கொன்புத்ஸன் நடத்தினன். ஆயினும் தன்னைச் சுற்றியுள்ள உத்தியோகஸ்தரும், அரசவம்சத்தினரும் செய்யும் அட்டூழியங்களை அவனல் சகிக்கமுடியவில்லை. அவர்களுடைய களியாட்டங்களும், இடம்பங்களும், வீண் ஆடம்பரங்களும், பகட்டான பாவங்களும், இந்த மஹானின் கண்களில் முட்கள்போல் தைத்தன. அவை தன் சாந்தமான வாழ்வையும் கெடுத்துவிடும், பணத்தையும், பதவியையும் விடத் தன் தூய வாழ்வே மேல் என்று எண்ணிக் கொன்புத்ஸன் மந்திரி வேலையை எள்ளித் தள்ளி விட்டுத் தனியே கிளம்பிவிட்டான். இனிமேல் தான் தன் வினையே கண்ணயினன்.

கொன்புத்ஸனை இப்போது கடுமையான வறுமை வந்து கருமையான முகத்துடன் கௌவிக்கொண்டது. உலகின் மற்ற துக்கங்களும் கூட்டமாக அவன் மேற் பாய்ந்தன. தன் உயர்ந்த உபதேசங்களை ஒருவரும் மதிக்கவில்லை. கவலையால் மனமுடைந்து போய் கொன்புத்ஸன் பலவிடங்களைச் சுற்றிச்சென்றான். பல தேசங்களில் சஞ்சாரம் செய்து இன்ப துன்பங்களைச் சகித்து முடிவில் மனமோய்ந்து தன் நாடு வந்தான். அக்காலத்து மன்னர் அவனை வேதாந்தக்குடுக்கையென மதித்து இகழ்ந்தனர். பொது ஜனங்களிடையும் பழிப்பிற்கிடமான ஏழை போலானன். ஆ கொன்புத்ஸன்! உன் கல்வியும், அறிவும், பரிசுத்தமும், பெருந்தன்மையும் எவ்வளவ் பெரிது! உன்னை உலகு எவ்வளவு சிறுமையுடன் மதிக்கிறது. அந்தோ உலகே, கொன்புத்ஸனுடைய வாழ்வையும் சோக ரசத்தாலா நிரப்பினய்! உன் குணம் இது!



கொன்புத்ஸன் தன்னைச் சுற்றி இகழ்ந்துநிற்கும் காலநிலையால் மனங் குலையவில்லை. தான் தனிமையாகச் சிந்தித்து எழுதுவதற்கு அதுவே சமயமெனக் கொண்டான். முன்னோர்களின் நீதிநூல்களை ஒழுங்குசெய்து சமூகச் சீர்திருத்தத்திற்கு வேண்டியபடி குறைத்தும் கூட்டியும் அழகான புத்தகங்களாக எழுதியமைத்தான். அப் புத்தகங்கள் இப்போது சீனவில் தொழுதேத்தி ஒவ்வொருவராலும் ஓதப்படுகின்றன. அவன் சேர்த்து ஒழுங்கு செய்த பழைய நூல்கள் ஐந்து. அவற்றுள் ஈகிங் என்பது முதன்மையான நீதிகளைப்பற்றிச் சொல்லுவது. ஷூ கிங், யோ என்னும் அரசன் காலமுதல் கொன்புத்ஸனுடைய காலமுடிய சீன தேசத்துச் சரித்திரம். இது பெரிய தேசீய நூல். ஷீகிங் என்பது ௩௦௫ நீதிச் செய்யுள்களும், மற்றும் பெரிய வீரரைப்பற்றிய கீதங்களும் அடங்கியவை. லீ கி என்பதில் சீனரின் சடங்குகளும், நடையுடைபாவனைகளும் நாகரிகமும் அடங்கியுள்ளன. சன் சூ என்பது கொன்புத்ஸனின் சொந்தப் புத்தகம். இதில் சீனத்து சரித்திரம் முழுதும் அடங்கியுள்ளது. மேலும் சன் சின் (வஸந்தமும் கிரீஷ்மமும்) என்ற அழகிய நூலையும் எழுதினன். இவ்வரிய நூல்களினல் கொன்புத்ஸன் சீனத்திற்கு அரிய தொண்டு செய்தான். இவற்றினின்றே சீனரின் நீதி, மதம், அரசாங்கமுறை, முதலிய அனைத்தும் பிறந்தன. இவற்றைத் தொழாத சீனன் கிடையாது. இவற்றின் மூலமாகச் சீன தன் மஹானை அறிந்துகொண்டது.

விண்ணையே பெரிய சக்தியாயும் பெரும் பொருளாயும் கொன்புத்ஸன் தொழுதான். இறந்த பெரியோரை வழிபடுவதையும், பெற்றோருக்கு வணக்கம் செலுத்துவதையும், எல்லாப் பிராணிகளிடமும் மரியாதையாய் நடப்பதையும், அரசனை வணங்கவேண்டிய கடமையையும் கொன்புத்ஸன் வற்புறுத்தினன். பூர்ண மனிதனவதே வாழ்வின் நோக்கமாகவும், நல்ல நினைவும் முயற்சியும், வாழ்வும், ஊக்கமும், மனிதனுக்குக் களிப்பைத் தருமென்றும், எதனிடமும் வணக்கமுடனும், அன்புடனும், பழகவேண்டுமென்பம், அடக்கமும், மரியாதையுமான பேச்சும், தன்னைப் போன்று பிறரையும் பாவித்தலும், கருத்தை உறுதிப்படுத்தலும், பொறுமையும், உணவு, உறக்கம், பேச்சு முதலியவற்றில் மிதமும் எளிமையும், இடம்பமின்மையும், முன்யோசனையும், தன் வாழ்வை உயர்த்திக்கொள்ளவேண்டுமென்கிற ஆவலும், கொன்புத்ஸன் தன் சீடருக்குச் செய்த உபதேசச் சுருக்கம். சில இளைஞருக்கு இவ்வுபதேசங்கள் மிக வுறுதியாகப் பட்டன. அவன் காலத்திலேயே சுமார் ௩௦௦௦ சீடர்கள் அவன் வழிப்பட்டிருந்தனர். அரிஸ்தோதிலன், பிளேதன், மோசே, போன்று பெரிய போதகனுகவிளங்கிப் பலரை நல்வழிப்படுத்தி தேசத்திற்குத் தன் நூலாலும், சொல்லாலும், பல்லாற்றானும், வாழ்வாலும், வழி காட்டிவிட்டு தன் ௭௩-வது வயதில் கொன்புத்ஸனுடை ஆவி மின்னென மறைந்தது. ஜனங்கள் பின்பு அவனுடைய அருமையை மிகவும் உணர்ந்தனர். பெரிய ரிஷி, தியான யோகி எனப் பணிந்தனர். "கொன்புத்ஸன்! கொன்புத்ஸன் நீ எத்துணை பெரியோன், அறிஞன்! கொன்புத்ஸனுக்குமுன் ஒரு கொன்புத்ஸன் இருந்ததில்லை! பின்னும் இருக்க வில்லை!" என்று ஒவ்வொரு சீனனும் புகழும்படி, கொன்புத்ஸன் இன்னும் புகழுடலில் உலகில் நிலவுகிறான். ஆனல் கி. மு ௨௧௩-ம் ஆண்டில் கொன்புத்ஸனுடைய நீதி நூல்களுக்கு மற்றொரு பெருத்த அபாயம் வந்தது. ஒரு கொடுங்கோல் மன்னன் அவைகளை எரிக்கும்படி உத்தரவு செய்தான். கொன்புத்ஸனுடைய சீடரைக் கொடுமையாக நடத்தினன். ௧௨௦௦ மைல் நீளமுள்ள சீனச் சுவரைக் கட்டுவதில் வேலை செய்ய விடுத்தான். ஆனல் இவனுக்குப் பின் கொன்புத்ஸன் நூரசரால் ஏற்றுத் தொழப்பட்டான். அவன் ஆலயங்கள் எங்கும் நிரம்பின. அவனுக்காக ஜனங்கள் திருவிழாக் கொண்டாடினர்கள். அவனுடைய போனன தாசிதுசன் கொன்புத்தின் உபதே

சங்களைத் திரட்டிப் பெரு நூலாகச் சேர்த்தான். இன்னும் பலரும் அம் மாதிரி செய்தனர்.

கொன்புத்ஸன் புதிய மதத்தை உபதேசிக்கவில்லை. மனிதன் எப்படி சமூகத்தில் வாழவேண்டியது என்பதையே சொன்னான். அறிவையும், நீதியையும், ஆத்ம பக்தியையும், வணக்கத்தையும் அவன் பிறருக்கு ஓதினான். கடவுளைப்பற்றி அவன் ஒன்றும் சொல்லவில்லை. வானுலகைப் பற்றிமட்டும் இங்குமங்கும் தன் நூல்களில் குறிப்பிடுகிறான். ஆகாயத்தைப் பெரிய சக்தியாக வர்ணிக்கிறான். கொன்புத்ஸன் நாஸ்திகனல்ல. தான் அறிந்துகொள்ள முடியாத விஷயத்தைப் பிறருக்குச் சொல்வது சரியல்லவென்று எண்ணினான். தன் மனித சக்திக்கு அதீதமாயுள்ள பரம்பொருளைத் தெரிந்துவிட்டதாக வெளியில் சொல்லிக்கொள்ள அவனுக்கு இஷ்டமில்லை. கொன்புத்ஸனுடைய திருவாக்குகளினின்று சிலவற்றைக் கீழே குறிப்பிட்டு எனது கட்டுரையை முடித்துக் கொள்கிறேன்:—

௧. உனக்குத் தெரிந்ததைத் தெரியுமென்று ஒப்புக்கொண்டு, தெரியாததைத் தெரியாதென உரைத்தல் அறிவு.

௨. ஞாயம் இன்னதென்றறிந்து அதைச் செய்யாதிருப்பது கோழைத்தனம்.

௩. நீ கும்பிடும் தேவதை முன் நிற்பது போல எண்ணித் தொழு.

௪. என் மனது வழிபாட்டில் நிற்காவிடின், நான் வழிபட்டதாகவே ஆகாது.

௫. வெறும் சோறும், தண்ணீரும், தலையணைக்குப் பதிலாகக் கையும் கொண்டு ஆனந்தமடையலாம். ஆனால் நற்குணமின்றி, செல்வமும், கீர்த்தியும், காற்றால் சிதறிப்போகும் மேகங்களைப் போல் எனக்குத் தோன்றுகின்றன.

௬. மனிதருக்கு உன்னைத் தெரியவில்லையென வருந்தாதே. உனக்கு மனிதர்களைத் தெரியவில்லை என்றும் வருந்தாதே.

௭. நல்ல மனிதன் எப்போதும் பெருந் தன்மையோடிருக்கிறான். கெட்டவன் எப்போதும் பயத்தால் பதுங்கியிருக்கிறான்.

௮. சிறிது நற்குண முள்ளவிடத்தும், வணக்கமும், இன் சொல்லுமிருக்கும்.

௯. ஒரு முறை தன் சீடர் "போதகரே தாங்கள் எம்மோடு பேசாவிடின் நாங்கள் எதைக் கற்பது?" என்றனர். அதற்கு கொன்புத்ஸன் "ஆகாயம் பேசுகிறதோ? நான்கு ருதுக்களும் வந்து பல காரியங்கள் செய்கின்றன. ஆனால் ஆகாயம் பேசுகிறதா?" என்றார்.

௧௦. பிறர் உனக்கு எதைச் செய்ய விரும்புவாயோ அதையே பிறருக்கும் நீ செய்வாயாக.

௧௧. அறிவை விரும்புபவன் சிறந்த ஞானியாவான். தன் நடத்தையில் கவனம் செலுத்துவோன் சீலனாவான். தன் மானத்தைக் காப்பதில் கண்ணுள்ளவன் தைரியமுள்ள வீரனாவான்

௧௨. தன்னைத் திருத்திக்கொள்ள முடிந்தவன் மற்ற மனிதரை அறிவு புகட்டி ஆளும் தகைமையுள்ளவனாவான். மனிதரை ஆளத் தெரிந்தவன் தேசங்களையும் உலகங்களையும் ஆள வல்லவனாவான்.

௧௩. உலகை விடுவதினால் மட்டும் சாந்தமேற்படாது. தன்னைச் சுற்றியிருப்போரிடம் அன்புடன் பழகுவதினாலும் உலகோடு ஒத்து வாழ்வதினாலுமே நலம் ஏற்படும்.

௧௪. மனிதனிடத்தில் இருக்கும் உயர்ந்த சக்தியைக் கண்டு பிடித்து அதை வளர்ப்பதே படிப்பின் நோக்கம்.

௧௫. ஞானத்தால், பக்தியுள்ள மனதும், பக்தியுள்ள மனதால் நேரான எண்ணங்களும், அதனால் கல்வி நிறைந்த மனிதரும், அவர்களால் களி நிறைந்த குடும்பங்களும், அவைகளால் ஒழுங்கான ஜனசமூகமும், அதனால் சமாதானமான உலகும் உண்டாகிறது. கொற்றவனிலிருந்து குடியானவன் வரையில் அனைவரும் தங்களைத் திருத்திக் கொள்ளத் தொடங்கவேண்டும்.

௧௬. அழகானவற்றை உண்மையாகவே விரும்பி, தீய மணத்தை எப்படி வெறுக்கிறோமோ, அது போலவே தன் மனச்சாட்சி உண்மையாயிருப்பதே பக்தியுள்ள மனம் எனப்படும்.

௧௭. சாந்த முள்ள மனமே நேரான மனம். சுக துக்கங்களில் அழுந்துவது அமைதிக்குப் பகையானது. பதற்றமும் அபாயமும் உள்ளவன் மனம் சாந்தமாயிராது. சாந்தமற்றவருக்கு உணவு உருசியாயிராது. கண்கள் சரியாகப் பாரா. காதுகள் சரியாகக் கேளா.

௧௮. நேரான மனதோடும், சாந்தமாய், நுட்பமான புத்தறிவுடன், நல்லதை யறிந்து, நடப்பவனே கற்றவனெனப்படுவோன்.

சீனரை, மனவலிவும், உண்மையும், ஒழுக்கமுமுள்ளோராக்கிய கொன்புத்ஸனுடைய செம்மொழிகளின் சுவைத் தகையது. ஒவ்வொரு தேசத்திலும் மஹான்கள் தோன்றியிருக்கின்றனர். ஒரு தேசத்தை நன்கு அறிந்து விரும்புவதற்கு அத் தேசத்து மஹான்களின் சரிதைகளைப் படிப்பது ஒரு சிறந்த வழி. இந்தியாவில் உண்டான பொத்தரை "போ" என்ற பேருடன் சீனர் என்றும் தொழுகின்றனர். சீன தேசத்து பாஹியானும், ஹியாந்த்ஸாங்கனும், நமது பழைய பாரதநாட்டின் மேன்மையைக் குறித்துவைத்து இன்று நமது வந்தனத்திற்குரியவர்களாகின்றனர். இப்படி நாட்டை நாடு அறிந்து நாட்டிற்கு நாடு உதவி உலக முழுவதும் ஊராயும், தேசமெல்லாம் தெருவாயும், ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் கை தந்து வாழ வேண்டுவதே எமது நோக்கம். அந்த அன்பு வாழ்வு நாடுகளிடை ஏற்படின் உலகில் போர் ஏது? போரொடுங்கின் வேறு துயரேது. நாடுகளெல்லாம் ஒன்றிற்கொன்று அன்புடன் வாழ்க!



# ஆனந்தரங்கப்பிள்ளையின் தினசரி

—:(*):—

விக்கிரம வருஷ சித்திரை மீ ௭ உ செவ்வாய்க்கிழமை. ௧௭௪௦ ஆண்டு அபிரெல் மீ ௧௫ உ

இந்த நாள் காலத்தாலே முசெல்லி பிரம்மை மட்டு மட்டுக்கும் சவாரி போயிவந்ததாய் சேதி கேழ்க்கப்பட்டது. இங்கலெசுக்காரரும் வழிதாவூர் கோட்டையின் பேரிலே மொராச்சாவச்சு சுருக்காய்த் தானே பீரங்கிபும் போம்பும் போடுகிறார்கள். ஊரிலேயும் போயி பிரவேசிச்சு இருக்கிறார்கள். நம்முடவர்கள் இத்தனை பவுஞ்சு இருந்தும் சமீபத்திலே இருக்கச்சே மத்தும் போகாமலிருக்கிறதும் மெத்த ஆச்சரியமாயிருக்குதென்று செனங்கள் சொல்லிக்கொள்ளுகுறார்கள். இவர்கள் கோட்டைக்கு மத்ததுபண்ணுதபடியினாலே இன்னைய த் தினம் கோட்டை விட்டுமென்று சொல்லிக் கொள்ளுகுறார்கள். பட்டணத்திலே இரண்டு மூணு நாளாய் வர்த்தகரை பிடிச்சுப் பணம் கொடுக்கச் சொல்லி கோட்டையிலே காவல் பண்ணியிருந்தவர்கள் நேத்திய தினம் மகாநாட்டாரண்டைக்கி வந்து வர்த்தகர் எங்களுக்கு நால் லக்ஷத்திருபத்தினாயிரம் ரூபாயி வரிபோட்டு கொடுக்கச் சொல்லுகிறான். இதை நீங்கள் மகாநாட்டார் பேரிலே போட்டுக் கொண்டு எப்படியாகிலும் இதுக்கு மார்க்கம் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் அவரவர் ஆஸ்தியெல்லாம் நாங்கள் எழுதிக் கொடுப்போமென்று சொன்னதின் பேரிலே இன்னைய தினம் சிபாயிமான் வந்து வர்த்தகரை அழைச்சும் போயி கோட்டையிலே மறுபடியும் காவல் வச்சார்கள். இந்த காபருவினாலே பட்டணத்திலுள்ள செனங்களெல்லாம் ரொம்ப காபருபட்டு வெகுசனம் வெளியேறிவிடுகுறார்கள்.

விக்கிரம௵ சித்திரை௴ ௲எ௱சா௰ ஆண்டு

அஉ, புதன்கிழமை. அபிரெல்௴ கசுஉ

இந்த நாள் கால்த்தாலே பனிரெண்டடிச்சு ஒண்ணரை ரெண்டு மணிக்கி கும்பனிய தேசெந்து என்கிற கப்பல் முன் அஞ்சாந் தேதி வந்த லபலே என்கிற கப்பலுக்கு முன்னாக கவனத்து வர வேணுமென்று சொன்னார்களே அந்தக் கப்பல் வந்து துரை பிடிச்சு நங்கூரம் போட்டு கப்பலிலேயும் பதினொரு பீரங்கி போட்டான். கரையிலேயும் பதினொரு பீரங்கி போட்டார்கள். கப்பல் கப்பித்தானும் இறங்கி கடுதாசியை கொண்டு கோட்டைக்குப் போனானெங்கிறதாய்க் கேழ்க்கப்பட்டது அந்தக் கப்பலிலே இருந்து இரண்டு பாதிரிகள் இறங்கி வீசனார்கோவிலிலே வந்திருக்குறார்கள். அவர்களைச் சேதி விசாரிக்கச் சின்னதுரை மூசெகில்லியர் சாயங்காலம் அஞ்சு மணிக்குக் கால் நடையாய் அடிக்கைக்காரன் குடை பிடிக்க நடந்து வந்து அந்தப் பாதிரியனைக் கண்டு பேசிப் போகச்சே பிராமணத் தெருவிலே நகல குருவப்பன் வீட்டண்டை வேர் தடுக்கிக் கீழே விழுந்து சத்து நேரம் சொபமாயிருந்து தெளிஞ்சு மறுபடி வீட்டுக்குப் போனாரெங்கிறதாய் சேதி கேழ்க்கப்பட்டுது. இவர் விழுந்ததுக்கு பட்டணத்திலே சகல செனங்களும் ரொம்ப தாபந்தப்பட்டார்கள். இவர் சகல செனங்களுக்கும் ரொம்ப உபகாரமாய் நடப்பிக்கிறபடியினாலே சனங்கள் ரொம்ப தாபந்தப்பட்டார்கள். இந்தக் கப்பலிலே வந்த தினுசுகள் இனிமேல் விவரிச்சு எழுத வேண்டியது. இந்த நாளும் வழுதாவூர்க் கோட்டையின் பேரிலே சண்டை நடந்துகொண்டு இருக்குது. நம்முடவர்களும் கோட்டைக்காரருக்கு மத்துப் போனதில்லே. கோட்டைக்காரரும் இது வரைக்கும் இங்கலெசுக்காரருக்கு சபாபு குடுத்துக்கொண்டு இருக்கிறார். இனிமேல் என்ன நடக்குமோ தெரியாது. இந்த நாள் ராத்திரி வழு மணிக்கிக் கேழ்க்கப்பட்ட சேதி மத்தியானம் மூணு மணிக்கி இங்கலெசுக்காரர் கொலனெல்மெஸ்தாத் தெங்கிறவன் வழுதாவூர் கோட்டையின் பேரிலே லக்கை ஏறி கோட்டையை பிடிச்சுக்கொண்டு கோட்டையிலேயிருந்த பிராஞ்சுக்காரருடைய சொலுதாதுகள் சிபாயிகளை யெல்லாம் காவல் பண்ணிக் கொண்டு கோட்டையிலே இங்கலெசுக்காரர் கொடியும் போட்டுக்கொண்டார்களென்று சேதி கேழ்க்கப்பட்டுது. முன்னாலே சித்தாராம் ஜோஸியர் சொல்லியிருக்கிற சாஸ்திரம் என்னவென்றால் மனுஷன் சரீரத்துக்குப் பக்கத்து வேர் அன்பத்தாறும் ஆணி வேர் நாலும் ஆக அறுபது வேர். இதிலே பக்கத்து வேர் அன்பத்தாறும் அத்துப் போயி வடக்கத்தி வேர் கிழக்கத்தி வேரும் மத்துப் போயி தெற்கித்து வேரும் மேற்கித்து வேரு மிருந்தால் ஆயி யுத்தாரணமிருக்கும் தெற்கத்து வேரும் மேற்கத்து வேரும் அத்துப்போயி வடக்கத்து வேரும் கிழக்கத்து வேரும் இருந்தாலும் ஆயித்தாரணம் சரியென்று சொன்னபடிக்கி சரி. நமக்கு அன்பத்தொன்பதே முக்காலே வேரு மத்துப் போயி தெற்கத்து வேரிலே அரைக்கால் வேரிருந்த படியினாலே பரம உத்தியாயம் ஒன்பது நாழி குறை நூறு வருஷமும் சரியா யிருக்குமென்று சொன்னார். இப் பட்டணத்துக்குப் பக்கத்து வேர் அன்பத்தாறும் ஆணி வேர் நாலும் ஆக அறுபது வேருக்குள்ளே பக்கத்து வேர் அன்பத்தாறும் அத்துப் போச்சுது. ஆணி வேர் நாலுக்கும் வடக்கத்து வேரும் கிழக்கத்தி வேரும் அத்துப் போச்சுது. ஆனால் தெற்கத்து வேரும் மேற்கத்து வேரும் இருக்குதென்று இருந்தோம். தெற்கத்து வேரு மத்துப்போச்சுது. இண்ணையுடனே மேற்கத்து வேருமத்துப் போச்சுது. ஆனபடியினாலே இந்தப் பட்டணத்துக்கும் ஆயுந்தாரணம் சரி. பிராஞ்சுக்காரருக்கு விருத்தி இனிமேல் யிருக்கிறபடியினாலே வேறே பிரபுக்கள் வந்து செஞ்சிக் கோட்டையைப் பிடிச்சுக்கொண்டு இப்படி இருக்கிறவர்கள் அபசவ்விய சுக்குறானபடியினாலே இவர்களெல்லாம் எட்டுப்பட்டுப் போம். இனிமேல் வருகிறவர்கள் சவ்விய சுக்குறானபடியினாலே செஞ்சிக் கோட்டையிலே போயி பிடிச்சு பிலத்து தஞ்சாவூர் கோட்டையும் பிடிச்சுச் சென்னபட்டணமும் வாங்கிக்கொண்டு கொலகொண்டையிலே போயி சென்றல் போட்டு இந்த ராச்சியமெல்லாம் பிராஞ்சுக்காரருக்குத் தானே நடக்கும் லக்கினாதிபதியாய் சூரியன் உச்சனாதனைப் ஏற்பட்டு நிற்கிறபோது சுக்கிர வர்க்கங்களெல்லாம் அடிபட்டுப் போம். இது சித்தாராம் சோசியர் சொன்ன சாஸ்திரப்படிக்கி அனுபோகம் சரி.



விக்கிரம௵ சித்திரை௴ ௲எ௱சா௰ ஆண்டு

கூஉ வியாழக்கிழமை அபிரெல்௴ கஎஉ.

இந்த நாள் இங்கலேசுக்காரர் வந்து வில்லியனூர் கோபுரத்தின் பேரிலே இங்கலேசுக் கொடியும் போட்டுக்கொண்டு வில்லியனூர் சீமை தயாம் குண்டு சாலே வரைக்கும் தோரணம் கட்டிக்கொண்டு எங்கும் குண்டு சாலே வரைக்கும் இங்கலேசுக்காரருடைய மனுஷனைத் தானே இருக்குறார்கள். இந்த நாள் நம்முடவர்களுக்கும் இங்கலேசுக்காரருக்கும் பொம்பை மேட்டிலே சண்டையால் நம்முடவர்கள்முறிஞ்சு கொஞ்சந் சேதமாய் பிறப்பட்டு ஒழுகரை எல்ல பிள்ளை சாவடி இவடங்களிலே நம்முடவர்கள் வந்துவிட்டார்கள். குண்டு சாலே அரியாங்குப்பம் தவிர மத்த இடங்களெல்லாம் இண்ணைய வரைக்கும் இங்கலேசுக்காரருடைய தோரணமாச்சுது. பெருமாள் நாயக்கன் சாவடி குண்டு சாலே அரியாங்குப்பம் இது வரைக்கும் இங்கலேசுக்காரராய் இருப்பாரகளென்று சுப்பா சோசியர் சொன்ன படிக்கி சாஸ்திரம் இது வரைக்கும் சரி. இனிமேல் என்ன நடக்குமோ அது அறிய வேண்டியது. முன்னிபவருஷ வரைக்கும் நம்முடவர்களுக்கு அரியாங்குப்பம் முருங்கப் பாக்கம் ஒழுகரை குண்டுக் கிராமம் காலாபட்டு இந்த அந்திலே எப்படியிருந்தார்களோ அந்தப்படிக்கி காலாபட்டுத் தவிர மத்த அரியாங்குப்பம் முருங்கப்பாக்கம் ஒழுகரை குண்டுக் கிராமம் குண்டு சாலே இந்த அந்திலே இண்ணைய வரைக்கும் நின்னார்கள். நாளை முதல்கொண்டு என்ன கதி நடக்குதோ அறிய வேண்டியது. இந்த நாள் முசெகி வேலெங்கிற பாளையக்காரனிருக்கிற வெள்ளைக்காரன் மகா நாட்டாரை அழைச்சு பணம் தண்டியாச்சுதா என்று கேட்டதின் பேரிலே இன்னம் தண்டியாகவில்லை என்று இவர்கள் சொன்னதின் பேரிலே அவன் மகா நாட்டாருக்குள்ளே செட்டியளை இரண்டொருத்தரைக் கையாடி நீங்கள் முன்னாலே முசெல்லியாருக்கு ஐயாயிரம் ரூபாயி குடுக்கிறோம் என்றல்லவா உடன்படிக்கைப் பண்ணிக் கொண்டீர்கள் இப்ப எண்ணாயிர ரூபாய் குடுக்கவேணும் இல்லாவிட்டால் காவலிலே வைப்பேன் என்று சொன்னதின் பேரிலே மகானாட்டாரெல்லாம் வந்து சட்டப்பெருமாளய்யர் மடத்திலே கூடி வரி பிரிச்சு எழுதுகுறார்களெங்கிறதாய் சேதி கேழ்க்கப்பட்டுது. இதல்லாமல் பாபுராயர் ராமச்சந்திர ராயர் கணக்கு ரங்கப்பமுதலி குமாரன் கும்பினி வர்த்தகர் வகையறு பதிமூணு பேரைக் காவல் வச்சு லக்ஷத்திருபதுனாயிரம் ரூபாயி குடுக்கச் சொல்லி வச்சிருக்கிற படிக்குத் தானே இருக்குது. பட்டணத்திலே செனங்களெல்லாம் இங்கலேசுக்காரர் வந்து வில்லியனூர் கோபுரத்தின் பேரிலே கொடி போட்டுக்கொண்டு அவர்களும் வந்து நம்முடவர்கள் வெளியே இறங்கி இருக்கிற பவுஞ்சின் பேரிலே சண்டை பண்ணுகிற படியினாலேயும் இவடத்திலேயும் வரி போட்டுப் பணங்காசுகளுக்கு சுருக்கு பண்ணுகிறபடியினாலேயும் வெளியேயிருந்து வந்த செனங்

களெல்லாம் மோசம் வந்தது. இனிமேல் இருக்கப் போகாதென்று இன்னையத் தினம் வெகு செனங்கள் பிறப்பட்டுப் போய்விட்டார்கள் இன்னையதினம் பட்டணத்திலேயுள்ள செனங்கள் அதலகுதலப்பட்டுத் தத்தளிக்குறது. கடுதாசியிலே எழுதிமுடியாது. தேவடியாள் மூத்தபிள்ளை பேரிலே நமக்குப் பதினாயிரம் ஐயாயிரம் வரவேண்டியதுக்கு ராமலிங்கபிள்ளை இப்ப சத்தியாய் நானூறு ரூபாயி வாங்கிக் கொள்ளச் சொல்லி உடம்படிக்கை பண்ணினத்தின் பேரிலே இவிடத்திலே பணங் கேட்ட விடத்திலே இங்கே பணம் இல்லை. கிராமத்துக்கு வந்தால் தாருமென்று சொன்னான். அதன் பேரிலே ராமலிங்கம்பிள்ளை காகிதம் ஒன்னு கொடுத்தான். அந்தக் காகிதம் கொண்டுகொண்டு நம்முட சேவகரும் திருவெண்ணைநல்லூர் இலடங்களெல்லாம் தேவடியாள் மூத்தபிள்ளையைத் தேடிப் பார்த்து காணமல் படிக்கி மறுபடி நம்முட சேவகர் ராமலிங்கபிள்ளை எழுதிக் குடுத்த கடுதாசி கொண்டு வந்துவிட்டார்கள்.

விக்கிரம ௵ சித்திரைமீ ௧௭௬௦ ஆண்டு
௧௦௨ வெள்ளிக்கிழமை அபிரெல்மீ ௨௨

இந்த நாள் கேழ்க்கப்பட்டசேதி ராமசந்திரராயன் பாபுராயன் கணக்கு ரங்கப்ப முதலி மகன் கும்பினி வர்த்தகர் வகையறு பதிமூணு பேரைப் பணங்குடுக்கச்சொல்லி கோட்டையிலே காவல் வச்சு சாப்பாட்டுக்கு விட்டு மறுபடியும் காவலிலே வைச்சு பணங் கேட்டுக்கொண்டிருந்தார்களே அவர்கள் முசெலெறி கொவர்னர் தொரை கண்டு பேசி நீங்கள் எங்களைக் காவலிலே வச்சுப் பணங்கேட்டால் நாங்கள் எங்கேயிருந்து குடுக்கப் போகிறோம் முன்னேதானே இருக்கிறதைக் கொடுத்துவிட்டோம் இப்பவும் மகா நாட்டாரை அழைச்சு அவர்களுடனே சொல்லி எங்களையும் கூட்டிவிட்டால் அவர்களும் நாங்களும் யோசனை பண்ணிக்கொண்டு முன்னே எழுதின வரிப்படிக்கி வரி எழுதி பணத்திற்கு ஒரு மார்க்கம் பண்ணுகிறோம் என்று சொன்னதின் பேரிலே முசெலெறி கொவர்னர் தொரை மகா நாட்டாரையெல்லா மழைச்சு கும்பினி செலவுக்கு இரண்டு லக்ஷம் ரூபாயி இப்போ குடுக்கவேணும் நீங்களும் இவர்களும் யோசிச்சு இந்த இரண்டு லக்ஷ ரூபாயிக்கும் தகப்படுத்திக் குடுக்க வேண்டுமென்று சொன்னதின் பேரிலே மகா நாட்டாரிருந்து சொன்னது நாங்கள் முன்னேதானே நாலாவிதத்திலேயும் இருக்கிற தட்டுமுட்டுகளும் வித்துக் குடுத்துவிட்டோம். இனிமேல் எங்களுக்குக் குடுக்கிறதுக்கில்லை. என்று சொன்னதின் பேரிலே அப்படியல்ல இந்த வேளை செலவுக்கில்லாதபடியினாலே நீங்கள் இல்லையென்று சொல்லப் போகாது. பாபுராயர் கும்பினி வர்த்தகர் வகையறு பதிமூணு பேரையும் வச்சுக்கொண்டு பணத்துக்கு எந்த விதத்திலே தகப்படுத்த வேணுமோ அந்தப்படிக்கி யோசனை பண்ணிக்கொண்டு சம்மதி பண்ணுங்களென்று சொன்னதின் பேரிலே மகா நாட்டாருக்குள்ளே இரண்டொருத்தரை வெள்ளாள கனக சபைபை உள் கையாய் ராமச்சந்திரராயன் போட்டுக்கொண்ட படியினாலே அவர்களுக்கு மாத்திரம் இந்த விசேஷம் சம்மதி மத்தப்பேர் மகா நாட்டாருக்குச் சம்மதியில்லாதபடியினாலே அவர்கள் சொன்னது நாங்கள் மகா நாட்டார் வந்து ஏழை முன்னேதானே யிருக்கிறதைக் குடுத்துவிட்டோம். இனிமேல் குடுக்கிறதுக்கு எங்களுக்கு நிர்வாகம் இல்லை. எங்கே பணம் இருக்குதோ அங்கே வாங்கிக் கொள்ளுங்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் வியாச்சியம் என்ன இருக்குது. அக்கரையில்லை என்று சொன்னதின் பேரிலே முசெலெறி கொவர்னர் தொரை முன்னேதானே கட்டிக் கொண்டிருக்கிற படியினாலேயும் மகா நாட்டா



ருக்குள்ளே ரெண்டொருத்தர் உள் கையாய் இருக்கிறபடியினாலேயும் முசெலெறி சொன்னதில்லை மேஸ்திரிபோகச்சே காதிலே இரண்டு கடுக்கனும் கையிலே இரண்டு மூணு மோதிரமும் போட்டுக்கொண்டு பேசினதைப் பார்த்து இப்படி அவரவர் கடுக்கனும் மோதிரமும் வித்துக் குடுத்தால் இந்தப்பணம் சரியாய்ப் போம். போங்கள் நீங்களெல்லாம் கூடி யோசனை பண்ணிக்கொண்டு பணத்துக்குச் சம்மதி பண்ணுங்களென்று சுயினை அழைச்சு இவர்களையெல்லாம் ஒருதரவிலே சேர்த்து வரி பிரிச்செழுதி யார் பேரிலே பணம் சொல்லுகுறார்களோ அவர்கள் கையிலே பணம் வாங்கிப் போடச் சொல்லி அழைச்சுக் கொண்டு போகச் சொல்லிச் சொன்னதாகவும் இவர்களும் நல்லது என்று வந்ததாகவும் சேதி கேழ்க்கப்பட்டது. இதெல்லாம் மகாநாட்டார் சொன்னது. பட்டணத்திலே இருக்கிற செனங்களெல்லாம் வெளியே பிறப்பட்டுப் போயிவிட்டார்கள். யார் கையிலே பணம் வாங்கிறது என்று சொன்னதின் பேரிலே ஆனால் செனங்களை ஒருத்தரையும் வெளியே போகாமல் தாக்கீது பண்ணுகிறோம். வெளியே போனவர்களிலே எசெமான் மாத்திரமிருந்து மத்தப்பேர் போய்விட்டால் அவர்கள் வீடு எழுதத் தேவையில்லையென்றும் பெண்டுகள் பிள்ளைகளிருந்து எசெமான் வெளியே போயிவிட்டால் அவர்கள் வீடுகளெல்லாம் எடுத்தெழுதச் சொல்லி சாவடி கணக்குப் பிள்ளையை அழைச்சு முசெலெறி கொவர்னர் தொரை உத்தரம் பண்ணினதாய் சேதி கேழ்க்கப்பட்டது. அந்தப்படிக்கி தெருவுகளிலே சிறிது வீடுகள் எடுத்தெழுதிக் கொண்டுவாரதாய் சாவடி மணியக்காரர் வந்து நடக்குதுக் காபுறு சொன்னார்கள். இந்தவெலக்கரார் வழுதாவூர் வாங்கிக் கொண்டு வெளிசீமையெல்லாம் தோரணம் வச்சுக் கொண்டு அந்த மட்டுக்குள்ளே இருக்குறார்கள். இனிமேல் என்ன நடப்பிப்பார்களோ அது அறிய வேண்டியது. நம்முடவர்களும் பட்டணத்திலே இருக்கிற செனங்கள் கையிலே பணம் வாங்கவேணுமென்கிற நினைவின் பேரிலே இருக்குறார்களோ. அல்லாமல் சத்துருவின் பேரிலே எதுத்துச் சண்டை பண்ணி செயம் பண்ணுவோமென்கிற நினைவுமில்லை. அந்தக்கவலையும் இல்லை. இவர்களும் அந்த மட்டிலே இருக்குறார்கள். இந்த நாள் ராத்திரி எட்டு மணிக்கி குண்டுசாலையளுக் கெல்லாம் பட்டணத்திலே இருக்கிற செனங்களை ஒருத்தரையும் வெளியே விடாமல் படிக்கி தாக்கீது பண்ணியதாய் சேதி கேழ்க்கப்பட்டது.

# எறும்பின் மெய்க்கீர்த்தி

(மார்க்கு துவெயின் எழுதியதினின்று மொழிபெயர்த்தது)

[சென்ற தலைமுறையில் ஹாஸ்ய ரஸத்தையே கையாடி வந்த அமெரிக்க ஆசிரியரில் முதன்மை பெற்றவன் மார்க்கு துவெயின் என்ற புனை பெயர் வைத்துக்கொண்ட ஸாமுவெல் கிளெமென்ஸ் என்பான். ஹாஸ்யத்தை ஓர் பாஷையினின்று மற்றோர் பாஷைக்குக்கொண்டு வருதல் மிக்க கஷ்டமான காரியம். இருப்பினும் பிறநாட்டார் ஒவ்வோர் சுவையையும் எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்று அந்நாட்டு பாஷையறியாத ஜனங்களுக்கு அறிவுறுத்த வேண்டுமானால் அவர்கள் எழுதியவற்றை மொழி பெயர்க்காமல் தீராது. பன்னுடைப் பான்மைத்தாக இருந்தபோதிலும் நாம் இம் மொழி பெயர்ப்பை "பாலபாரதி" நேயர்களுக்குத்தருவதற்குத்

காரணம் மேற்சொல்லியதுதான். கற்றோர் நம் குற்றத்தைப் பொறுக்க. ஸாமுவெல் கிளெமென்ஸ் தான் எழுதிய நூல்களிலெல்லாம் மார்க்கு துவெயின் என்ற பெயரைப் புனைந்து வைத்தே வெளிப்படுத்தினன். அவன் கலி சகஙகூ—இல் பிறந்து இப்பொழுது தான் எழெட்டு வருஷங்களுக்கு முன் இறந்தான். இங்கு மொழி பெயர்க்கப் படும் நூலுக்கு ஒடுகாலியாய்ப் பரதேசம் போனது* என்ற அவனது நூலினின்று எடுத்தது.]

மகா உழைப்பாளி என்று பெருமையாகச் சொல்லப்படுகிறதே, அந்த எறும்பின் செயல்களை என் யாத்திரைகளில் இடைக்கிடையே கவனித்து வந்தேன். அதனிடம் நூதனமாய் நான் ஒன்றும் பார்க்கவில்லை—எதற்கும், அதைப் பற்றி நான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை மாற்ற அதனிடம் ஒரு சாக்கையும் காணேம். புத்தியைப் பொறுத்த மட்டில் அதற்குப் பேர் தான் பெத்த பேரு. வேலையும் வினைக்கெட்டு இன்று வரை பல வேனில் காலங்களாக அதைப் பார்த்து வருகிறேன்— ஆனால் செத்துப் போன எறும்பைவிட மூளை சிறிதேனும் அதிகமாயுள்ள ஜீவந்த எறும்பை இனிமேல்தான் நான் பார்க்கப் போகிறேன்! ஆனால் †பேஷக, நான் பேசுவது சாமானிய எறும்பைப் பற்றித்தான் பிரதிநிதிகள் தேருவதும், சைனியங்கள் பயிற்றி வைத்துக்கொள்வதும், அடிமைகளை ஆளுவதும், சமய வாதங்கள் புரிவதுமான உங்கள் ஸ்வித்ஸர்லாந்து எறும்பாவது, ஆபிரிக்க எறும்பாவது எனக்கு முகதாவில் பரிசயமில்லை. இந்தத் தனி எறும்புகள் இயற்கை சாஸ்திரிகள் கூறுகிறபடியெல்லாம் இருக்கலாம்—ஆனால் இந்தச் சாதா எறும்பு இருக்கிறதே, அது வெறும் ‡அம்பக்குத் தான். அது உழைக்கிறது என்று நான் ஒத்துக் கொள்ளுகிறேன்—உலகத்தில் அதனளவு உழைப்பார் (மற்றோர் பார்த்திருக்கும்போது) யாருமிலர்—ஆனால் அதன் களிமண் மூளை மீது தான் எனக்கு இத்தனை ஆத்திரம். இப்படி வேட்டையாடப் போகிறார் நம் எறும்பு நண்பர்: வகையாக ஏதாவது ஒரு வஸ்து அவர் கைக்குச் சிக்குகிறது: உடனே என்ன செய்கிறார்? வீட்டுக்குப் போகிறார் என்பாய், இல்லை—அங்கே தான் போவதில்லை: அதை ஒன்றை விட்டுவேறு எங்காவது தான் போடுவார். தன் வீடு எங்கிருக்கிறது என்று அவருக்குத் தெரியும் என்றா சொல்லுகிறாய்? அவருக்கு அது தெரியவே தெரியாது. அவர் வீடு மூன்று அடி தூரத்துக் கடுத்தாற் போலே இருக்கலாம். அதனால் என்ன! அவர் கண்ணுக்கு அது படுவதில்லை. அவருக்கு ஏதோ ஒரு வஸ்து சிக்குகிறது என்று சொன்னேன். அந்தவஸ்துதான் என்னவோ? அனேகமாய் அவருக்காவது மற்றெவருக்காவது அது பயன் படாததொன்றாய்த்தானிருக்கும். பார்த்தமாய் இருக்கக் கூடிய அளவுக்கு அனேகமாய் ஏழு மடங்கு பெரியதாய் இருக்கும் அந்த மேற்றானி எடுக்கும் வஸ்து. அதையும் எங்கு பிடித்தால் கையாடுவது மிகக் கஷ்டமாக இருக்குமோ அங்கே தான் அவர் அதைப் பிடிப்பார். அவ்வாறு பிடித்துக் கொண்டு பலமவ்வளவையும் பிரயோகித்துச் செங்குத்தாய் அதைத் தூக்குகிறார்— தூக்கிப் புறப்படுகிறாரே, பார்க்க வேணும்; ஆனால் வீட்டை நோக்கி அப்பாலே போகமாட்டார்—நேரே எதிர்ப் பக்கம் தான் போவார். சாந்தமாக, யுக்தியோடு செல்லுவாரா? இல்லை, வெறிபிடித்தவன்போலத் தடபுடலாய்த் தான் ஓடுவார்— பலத்தைப் போற்றி வைக்கும் வழக்கம் அவரிடமில்லை. ஒரு கல் மீது மோதிக் கொள்ளுவார். ஆனால் அதைச் சுற்றிச் செல்ல

* A tramp abroad.

தொடரின் தொனியை தெலுங்குத் தொடரும்.

†சந்தேகமில்லை. இந்த விசிஷ்டபதம் தான் முதனூலிலுள்ள அப்ஸ் கோர்ஸ் என்ற இவ்விடத்தில் தருகிறது. அதே மாதிரி தான் மேலே வந்த பெத்த பேரு என்ற

‡ Humbug மோசடி.



கையோடு தன் மூட்டையைத் தூக்கிக்கொண்டு, பின்புறமாக நடந்து அதன்மீது மெல்ல ஏறுவார்; அந்தப் புறம் சுருட்டி அடித்துக் கொண்டு விழுவார்; வெறிகொண்டு குதிப்பார். உடனே, தன் ஆடையை உதறிக்கொண்டு, கையில் எச்சில் துப்பி ஈரமாக்கிக்கொண்டு, மூட்டையை வெடுக்கென்று பிடித்துத் தூக்கிக்கொண்டு, இப்படிச் சற்று நேரம் இழுப்பார், அப்படிச் சற்று நேரம் தள்ளுவார்; அடுத்த நிமிஷம் வாற்புறம் திரும்பி இழுத்துக் கொண்டு நடப்பார். அதற்குள்ளும் நிமிஷத்திற்கு நிமிஷம் அவருக்கு வெறி ஏறிக் கொண்டே வரும். உடனே பளுவை ஆகாயத்தில் தூக்குவாரே, பார்க்கவேணும். தூக்கிக் கொண்டு புதிதாய் மூன்றாவது ஓர் திசையை நோக்கி வேகு வேகு என்று போவார். வழியில் ஓர் பூடு இருக்கும்—அதைச் சுற்றிப் போகவேண்டும் என்று அவர் மூளைக்குப் படாது. ஊஹூம்—அதன் மீது ஏறித்தான் ஆகவேண்டும்— ஏறவே செய்கிறார் ஏறுவதும் தன் மூட்டையைத் தூக்கிக்கொண்டு தான் ஏறுகிறார். இதற்கு மனித உலகத்து உதாரணம் வேண்டுமானால், நான் ஹைடெல்பெர்க்கிலிருந்து ஸ்திராஸ்புர்க்குக் கோபுரத்தின் மீது ஏறிப் பாரிஸுக்கு வரப் பிரயத்தனப் படுவது போலாகும். பூடின் உச்சிக்கு ஏறினதும் அது அன்று தான் விரும்பிய இடம் என்று அவருக்குத் தோன்றுகிறது. ஆகையால் சுற்றுப் புறத்துக் காட்சியை யெல்லாம் பார்த்து விட்டு, கீழே இறங்குகிறார்—அல்லது உருண்டு விழுகிறார். விழுந்தவுடன் மறுபடி ஓர் முறை புறப்படுகிறார்—வழக்கம் போல நான்காவது திக்கை நோக்கியே செல்லுகிறார் அரைமணி நேரத்துக்குள் தான் புறப்பட்ட இடத்திற்கு ஒரு சாணுக்குள் வந்து தன் மூட்டையைக் கீழே போட்டு விடுகிறார். ஏதன் மத்தியில், சுற்றி இரண்டு கஜத்துக்கு ஒரு ஊசி முனை இடம் விடாமல் அவர் நடந்தாகிவிட்டது—வழியிலுள்ள கூழாங் கற்களெல்லாம், பூடுகளெல்லாம் அவர் ஏறியாகி விட்டது. இப்பொழுது நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டு, கைகால்களைப் பிடித்துக் கொண்டு, என்றைக்கும் உள்ள தடபுடலாகவே யாதொரு கருத்தும் நோக்கமும் இன்றி ஓட்டம் பிடிக்கிறார். குறுக்கும் நெடுக்குமாக வெகு தூரம் போய்விட்டுக் கடைசியாகத் தான் எறிந்து போட்ட மூட்டை மீதே மோதிக் கொள்ளுவார். ஆனால் அதை முன்னொரு முறை பார்த்ததாகவே அவருக்கு நினைவிருப்பதில்லை. எது வீட்டுக்குப் போகாத பாதை என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு, மூட்டையைச் சுருட்டிக் கொண்டு புறப்பட்டுவிடுகிறார். பழையபடி முன்னே சுற்றின இடமெல்லாம் சுற்றுகிறார். கடைசியாக ஓரிடத்தில் ‘உஸ்’ என்று உட்காருகிறார்: ஓர் தோழன் எதிர்ப்படுகிறான். சந்தேகமில்லாமல், அவன், சென்ற வருஷத்து வெட்டுக்கிளியின் கால் மிகவும் உபர்ந்த ஓர் புதையலென்றும் அது எங்கிருந்து அவருக்குக் கிடைத்தது என்றும் வினவுகிறான். சந்தேகமில்லை, சுவான்தார் எறும்பர், ‘எனக்கு நினைவில்லை, ஆனால் இங்கே தான் எங்கேயோ அகப்பட்டது,’ என்கிறார். நண்பரும், சந்தேகமில்லை, அதை வீட்டுக்குக் கொண்டுபோகத் துணை புரிகிறதாக ஏற்றுக்கொள்கிறார். உடனே சரியான பைபிலிக மேதையோடு கூட * அவர்கள் அந்த வெட்டுக்கிளிக் காலை இரண்டு புறமும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஒருவர் கிழக்குப் பார்த்தும் மற்றவர் மேற்குப் பார்த்தும் தங்கள் பலமெல்லாம் பிரயோகித்து முண்டுகிறார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் நிறுத்திக் கொண்டு ஒருவரையொருவர் கலந்து கொள்ளுகிறார்கள். ஏதோ ஓர் இடைஞ்சல் நேர்ந்திருக்கிறது. ஆனால் அது என்ன என்று தெரியவில்லை என்று நிச்சயத்துக் கொள்ளுகிறார்கள். பிறகு முன்னைப் போலவே வேலையில் இறங்குகிறார்கள். பயன் மேற்படியே பாஸ்பா சண்டைகள். ஒரு

* எறும்பு அறிவு.

வரை ஒருவர் நீ தான் சல்லியக்காரன் என்று பரிமாறிக்கொள்ளுகிறார்கள். உஷ்ணம் ஏறுகிறது வாதம் மல்யுத்தத்தில் போய் முடிகிறது. கையோடு கை தாக்கிக்கொண்டு ஒருவரை ஒருவர் குரங்குக் கடியாய்க் கடித்துக் கொள்ளுகிறார்கள். பிறகு இருவரும் ஒருவர் மீது ஒருவர் புரளுகிறார்கள். ஒருவனுடைய கொம்போ காலோ போன பிறகுதான், அவன் அதைப் பழுது பார்த்துக் கொள்வதற்காகப் பிரிந்து ஓடிப்போகிறான். பழுது பார்த்துக்கொண்ட பிறகு மறுபடி பழைய வெறியோடு போர் தொடங்குகிறார்கள். ஆனால் காலொடிந்த எறும்பின் நிலைமை கஷ்டமானதாயிருக்கிறது. ஆகையால் எத்தனை முன்டினாலும், எதிரி அந்தக் கொள்ளையையும் தன் எதிரியையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய்விடுகிறான். பின்னவனும் சாமானைப் பிடித்திருக்கும் பிடியை விட்டு விடுவதற்குப் பதிலாக அதைப் பிடித்துக் கொண்டே இருக்கிறான்—பயன், கையும் காலும் ஒவ்வொரு கல்லிலும் கட்டிலும் அடிபட்டுக்கொண்டே வருகிறது. கடைசியாக, அந்த வெட்டுக் கிளிக் கால் மறுபடி அந்த இடம் முழுதும் இழுக்கப்பட்டான பிறகு அது முன் இருந்த இடத்திலேயே எறியப்பட்டு விடுகிறது! மேலும் விருவிருத்துப் போய், அவ்விருவரும் வெகு ஜாக்கிரதையாக சாக்கை ஆராய்ந்து பார்க்கின்றனர். பிறகு இன்னும் ஏதாவது ஓர் பழைய ஆணியோ, விளையாட்டு சாத்தக்க கனமாயும், எறும்புகள் விரும்பும்படி பயனை அற்றதாயும் உள்ள வேறு ஒரு சாக்கைத் தேடிக்கொண்டும் இரண்டு பேரும் வெவ்வேறு திக்குகளை நோக்கிப் புறப்பட்டு விடுகின்றனர்.

அங்கே கிருஷ்ணாரணியத்தில் * மலை யோரத்தில், தன்னைப் போலப் பத்து பங்கு எடையுள்ள ஒரு சிலந்தியின் சவத்தைத் தூக்கிக்கொண்டு ஒரு எறும்பு இத்தகைய காரியம் செய்ததைப் பார்த்தேன். சிலந்தி முட்டமுழுக்கச் செத்து விடவில்லை, ஆனால் தன்னைக் காத்துக்கொள்ளச் சக்தி யற்றுப் போயிருந்தது. நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்று கண்டதும், எறும்பு அச் சிலந்தியை மல்லாக்கத் தள்ளி, அதன் தொண்டைக்குழி வழியில் பல் புதைய ஒரு ... அதைக் கவ்விக் கடித்தது, அதைச் ... தூக்கி, வெகு வேகமாய் நடந்தது. வழியில் எறும்பு கூறாங்கற்கள் மீது வழி விழும் சிலந்தியின் தொங்கிக்கொண்டு வந்த கால்கள் மீது தன் காலை வைத்துத் தடுக்கி விழும்; பின்னாலே நகர்ந்து சென்று சிலந்தியை ... தூக்காதத் தூக்கி எறியும்; அது அங்குலக்கற்களைக் கண்டால் அவற்றைச் சுற்றிப் போவது அதற்கு இழிவெனத் தோன்றும் போலிருக்கிறது—அவற்றின் மீது ஏறி இறங்கிக் கொண்டே நடக்கும்; தன்னைப் போல இருபது மடங்கு உயரமுள்ள புற்களின் மீது ஏறித் தொடர்க்கட்டைகள் ... என்று விழும். கடைசியாக, தன்னைப் போன்ற இன்னொரு முட எறும்பைத் ... போராளியாக இருக்கட்டும் என்று அவ் எறும்பு அச் சிலந்தியை நடு ரஸ்தாவில் போட்டு விட்டு, அதைமாதிரி ... ஆன இன்னொரு காரியத்தை நோக்கிக் கொண்டு விரைந்து விட்டது. இந்தக் கழுதை மகன் நடந்த தூரத்தை அளந்து நான் பார்க்க லாம் என்று நினைத்து அளந்தேன். இருபது நிமிஷ நேரத்தில் அது செய்த வேலை—மனிதக் கணக்கில் கணக்கிட்டால்—இது போன்றதாகும். அதாவது ஏறக்குறைய ... ... இரண்டு குதிரைகளைச் சேர்த்து ஒன்றாக... வாயில் கவ்விக்கொண்டு ஆறு ... உயரமுள்ள பாறைகளின் மீது—பாறைகளைச் சுற்றியன்று—பெரும்பான்மையும் சென்று, பிரயாணத்தினிடையே நயகராவைப் போன்ற ஓர் செங்குத்துப் பாறைமீது கஉ0 அடி உயரமுள்ள மூன்று கோபுரங்கள் மீதும் ஏறித் தொப்பு தொப்பு என்று குதித்து, திறந்த வெளியில், பல

* ஜெர்மனியிலுள்ள கறுப்புக் காடு.



இடத்தில் ஒருவரையும் வைக்காமல் குதிரைகளை இறக்கிப் போட்டுவிட்டு, பிறகு பெருமைக்காக இது போன்ற இன்னொரு சூரத்தனத்தில் இறங்குவது போலாகும்.

மழை காலத்துக்காக எறும்பு ஆகாரம் சேர்த்து வைக்கிறது என்று முட நம்பிக்கை உலகம் தோன்றிய நாள் முதல் இருந்து வருகிறது. பௌதிக சாஸ்திரம் அந் நம்பிக்கை தவறு என்று ருஜுப்படுத்திவிட்டது. இதன் பிறகு புலவரும் இனி நம் தோற்றை இலட்சியத்தை விட்டு ஓர் மட்டுக்கு உத்வாஹம் செய்து விடுவார்கள். அது வேலை செய்வதில்லை மண்ணையில்லை. அது வேலை செய்வதில்லை மனிதர் பார்த்துக்கொண்டிருக்கும்போதுதான் அதுவும் பிரகிருதி சாஸ்திர சம்பந்தமான பார்வையோடு பார்த்துக்கொண்டிருக்கும்போது குறித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று காணும்போதுதான் அது வேலை செய்வது போலப் பாசாங்கு செய்யும். இது எனாற்றமாகுமன்றோ? இதனால் சுயதேசிகளும் அதைத் தங்கள் பகவத்கதாப் பிரசங்கத்தினின்று ஓட்டி விடுவார்கள். எது சாப்பிடத் தகுந்தது, எது தகாதது என்று பார்க்கக்கூட அதற்கு அறிவில்லை. அதனால் மனிதர் இனி அதற்கு மதிப்பும் வைக்க மாட்டார்கள். ஓர் காட்டைச் சுற்றிச் சென்றதானால் மறுபடியும் அதற்கு வீட்டுக்கு வர வழி தெரியாது. இது மக்குத்தனமே யாகும். இனி அறிவாளிகள் அதை உதாரணமாகக் கொள்ளார்கள். வெகு பெருமையாகப் பேசப்படுகிறதே அதன் முயற்சி, அது வெறும் டம்பமே யொழிய வேறில்லை. அம் முயற்சியால் அது அடையும் பயன் பூஜ்ஜியம்—தூக்குகிற எதையாவது வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தால் தானே! இந்த எறும்பைப் போன்ற இவ்வளவு பச்சையான அம்பக்குகிறத்தை ஜாதியார்களை, அகப்பட்டுக் கொள்ளவே கொள்ளாமல், இத்தனைக் காலம் வரையில் ஏமாற்றி வந்திருப்பது நினைக்கக்கூட முடியாத அவ்வளவு அதிசயமாக இருக்கிறது, அண்ணே!

# இயல் மறதி, இயற்றுறக்கம்

———:(※):———

இயலைப் போன்றது செயல் என்பது பெரும்பான்மையோர் அறிந்த உண்மை. இயல் உயிர்; செயல், உடல். எப்பொழுதும் உயிருக்குத்தக்க உருவே அமையும். உருவில் உயிர் நிறைந்திருப்பது எங்கும் கிடையாது; அவ்வண்ணமே செயல் மாற்றத்தினால் இயல் மாற்றம் ஏற்படும் என்பதுங் கிடையாது. உயிர் உருவுடன் வெளியாகிறது; இயல் செயல்களினூடே இயங்குகின்றது. உரு மாறவேண்டுமாயின் உயிர் மாறவேண்டும்; செயல்களின் தன்மை மாறவேண்டுமாயின், இயலில் மாற்றம் வேண்டும். உயிர் உறங்கின், உருவில் சலனம் இராது. ... இயலில் விழிப்புண்டாயின், செயல்களில் ஒளிரும் சலனம் தோன்றும்—வினைகளின், அகமே புறம்.

இயல் ஒன்று, செயல் பல; இயல் பலவாயின், செயல்களின் தொகை வகைகளை எண்ணி முடியாது. இயல் நீடித்த நிலைப் பொருள்; செயல் பல வகைகளில், மாறி மாறி இயலை வெளி உலகிற்குத் தெரிவிக்கும் இயக்கப் பொருள். உதாரணமாக, தமிழ் இயல் நீடித்த நிலைப் பொருள்; தமிழ்ச் செயல் மாறி மாறிப் பல வகையில் இயங்கி வரும் பொருள். தமிழ் இயல் உள்ளவரை தமிழ்ச் செயல் என்னவாயினும், தமிழ் தமிழே. இது

லனுதன உண்மை. தமிழுயிர் உள்ளவரை, தமிழியல் உண்டு; தமிழியல் உள்ளவரை தமிழோர் அல்லது தமிழச் சாதி உண்டு; தமிழச்சாதி உள்ளவரை, தமிழ்ச் செயல் உண்டு; தமிழ்ச் செயல் உள்ளவரை, தமிழகம் உண்டு. தமிழகத்தின் வல்லுயிரொலியே தமிழ்.

உயிரிருப்பதற்கு அறிகுறி சலனம், நகர்ச்சி, இயக்கம். உயிரின் வகையைப் பொதுவாக இரண்டாகப் பிரிக்கலாம்; ஒன்று சொந்த இயல் ஒளிர இயங்கும் உயிர், மற்றொன்று சொந்த இயலை மறந்து, உறங்கி இயங்கும் உயிர். அததற்கென் றமைந்துள்ள இயலினின்று இயக்கங்கள் வெளிப்படையாகும் பொழுது, அவைகள் ஒளி, வலி, இன்பம், எழில், தூய்மை முதலியவைகளுடன் திகழ்கின்றன. உயிரில் இயல் மறதியும், இயல் உறக்கமும் உண்டாகும் பொழுது, செயல்களில் இருள், வலியின்மை, சோர்வு, துயர், அழகின்மை முதலியன தோன்றும். சொந்த இயலற்ற உயிருக்கு, வன்மை கிடையாது; வன்மையற்ற உயிரின் இயக்கமும், செயலும், மொழியும் உலகில் ஏற்கா—அதன் இருக்கைக்கும் மதிப்பு கிடையாது. காலஞ்சென்ற நமது சுப்பிரமணிய பாரதியார் சொற் சோர்வுபடாதிருந்ததற்குக் காரணம், அவர் சிறிது காலமாவது தன் சொந்த இயலில் வலியுற ஒளிர முயன்றதேயாம். அவருடைய வல்லிய மொழிகளை இன்றும் நம்மால் கவனிக்காதிருக்க முடியவில்லை என்பதும் இதற்கு ஒரு சான்றாகும். சொந்த இயலினின்று வலிய எழுந்து ஒளிரும் செயலையோ, மொழியையோ எவராலும் ஒதுக்கி, நீக்க முடியாது.

தமிழகத்தில் இயல் மறதியும் இயலுறக்கமும் தற்கால சின்னங்கள். சில தமிழர்கள், இம் மதிப்பை, என்னுடைய நிராசையினின் றெழுந்த மொழிகளென்று கூறலாம். இந்தியாவின் எந்த ஒரு மாகாணத்தின் இருவர்களும் சந்திக்கும் பொழுது, தங்கள் மகாண பாஷையிலல்லாது வேறெந்த மொழியிலும் பேசமாட்டார்கள்; ஆனால் ஆங்கிலம் தெரிந்த இரண்டு தமிழ் வாலிபர்கள்—முக்கியமாக, தமிழ்ப் பிராமண யுவர்கள்—சந்திக்கும் பொழுது, இவர்கள் ஆங்கிலமல்லாது வேறெந்த மொழியிலும் குசலம் விசாரிக்கமாட்டார்கள். இது என் கண்களால் நேரிற் கண்ட விஷயம். தமிழகத்தில் மேற் சொல்லியதற்கு மாறாக நடந்து கொள்ளும் ஆங்கிலம் கற்ற தமிழர்கள் எங்கோ ஒரு சிலரேயாகும்—காரணம் இயல் மறதி, இயலுறக்கம்.

இயல் மறதியும் இயலுறக்கமும் ஒரு நாட்டுணர்வில் உண்டாகும்பொழுது—இதற்குக் காரணம் கூறுதல் அரிது—முதலில் உணர்வின் அனந்த விரிவிற் குறுமை பரந்து படரும்; உணர்வின் பல திசைகளிலும் வரம்புகள் ஏற்படும். தன் இயலில் மயக்கம், உறக்கம், அவநம்பிக்கை முதலியன நடமாடுவதனால், அயல் நாட்டின் உணர்வுப் பெருக்கம் அதனுள் எளிதிற் புகும். இதனால் ஒரு நாட்டின் பிரத்தியேக குணங்களற்றுப்போம்; இன்னானென்று சொல்லக் கூடாத ஒரு மனிதன் போல் ஆய்விடும். நாட்டின் சர்வ அலங்காரங்களும் ஒரு உயிரற்ற பொம்மைக்குச் சூடியது போல் ஒளியற்று விளங்கும். தன் சொந்த இயலை மறந்த உயிரில் மண்ணினின்று உரம் ஏறாது; வானின்று அதன்மீது ஒளி வெள்ளம் பாயாது; அதன் அகமெனும் குகையினுள் நின்று உறுதி பெறும் தீ சுடர் விட்டு, வானை நோக்கி எரியாது; அதனுடைய உணர்வெனும் பெரு நீர்க்கடல் உறங்கி வாழும்—“அப்ரகேதம் ஸலிலம்” என்பது இதுவே.

பாரத வர்ஷத்தில் தமிழ் நாடு விழிப்பின் புறமாக நோக்கி நிற்கின்றது; ஆந்திர தேசம் உறக்கத்தினின்று எழப் பெரிதும் முயற்சிக்கின்றது; வங்கநாடு பாரதிக்குக் கண் விழித்துவிட்டது. ஒரு நாட்டின் உணர்வில் ஒரு சிறிதளவாவது விழிப்பு இருந்தாலன்றி, அந் நாட்டோரும் அயல் நாட்டோர்களும் மதித்து வணங்கக் கூடிய பெருஞ் செயல்கள் அந் நாட்டில் உண்டாக மாட்டா. வங்க நாட்டினுடைய விழித்தவரும் உணர்வின் இயற் செயல்களை எல்லோரும் மதித்து வணங்கி அங்கீகாரம் செய்ய வேண்டி இருக்கிறது—சிந்தனையில் வல்ல பெரியோர்கள், எழுத்தில் வல்ல பெரியோர்கள், ஓவியத்திற் சிறந்த பெரியோர்கள், செயலிற் சிறந்த தீரர்கள் முதலிய வகைப் பூக்கள் வங்க நாட்டில் புஷ்பிப்பதை கவனிக்கவும். பாரதவர்ஷத்து ஏனைய நாடுகளுக்கு இன்னமும் உணர்வில் விழிப்பு உண்டாகவில்லை—ஆகவே தெய்வதம் வாய்ந்த வன்மைக் கனங்களும், ஒளித் திரள்களும், எழிற் கதிர்களும், இன்பக்



குவியல்களும் உணர்வின் அடியற்ற ஆழங்களினின்று பிறக்கமாட்டோமென்கின்றன. வங்க நாட்டோர் போல் நாமும் ஆய்விட வேண்டுமென்பது என் எண்ணமல்ல—அவ்விடத்து விழிப்பின் சிறப்பையே இங்கு கூறினேன். தமிழகத்துத் தமிழுயிர், தன் இயலில் விழிப் புண்டு, மறதி நீங்கி, ஒளிரும் வலி பெற்று, எழில் வீசும் இன்பச் செறிவில் இலங்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை—தமிழன் உண்மைத் தமிழனாதல் இங்கு முக்கிய நோக்கம்.

தமிழகத்தில் சிறந்துயர்ந்த பண்டைச் சரக்குகள் பல இருக்கின்றன—தொன்மை மணக்கும் இலக்கியங்கள் கோவில்கள், கோபுரங்கள் முதலியன நம் நாட்டில் மலிந்து கிடக்கின்றன. ஆனால் கேவலம் பழமையில் மட்டிலும் மூழ்கிக் கிடத்தல் உயிரின் இருக்கைக்கு அறிகுறியாக மாட்டாது. நிகழ்காலத்திற்கு உயிரும், உயிரில் உணர்வும்; உணர்வில் தன் இயலும், தன் இயலில் பெருஞ்செயலும் இருந்தாலன்றி பழைமைக்குச் சிறப்புக் கிடையாது; மேலும் நிகழ்காலத்தின் ஒளி நம் வன்மையே எதிர் காலத்தை வேண்டியவாறு சமைக்கிறது; நிகழ்காலம் இறந்தகாலமாகப் போவதற்குள்ளாக அதற்குச் சிறப்பையும், ஒளியையும், வலியையும், இன்பத்தையும், எழிலையும் தருவது நமது கடமை—இறைவன் நமக்கு விதித்த கடமை.

தமிழகத்தில், ஆங்கிலம் 'கற்ற தமிழர்கள் புதிய ஆதர்சங்களையும், கருத்துக்களையும், எண்ணங்களையும், இன்பங்களையும், எழில்களையும் தங்கள் நாட்டில் காணுது பற்றி ஆங்கிலக் களஞ்சியத்திலிருந்து வாரி எடுத்துக் களிக்கிறார்கள். இவர்களுக்கு நம் நாட்டுத் தொன்மை மணக்கும் சரக்குகள் அர்த்தமாவதில்லை; அவைகளை பொருள் பட எடுத்துத் தருவோரும் இல்லை. ஆங்கிலமறியாத பச்சைத் தமிழர்களோ வெனில்,— இவர்கள் எத்தனை தரந்தான் பழமையைத் தோண்டித் தோண்டி ருசிப்பார்கள்! பழமையில் சலிப்புற்று, ருசிப்பதற்கு வேண்டிய புதிய காவியங்கள், கதைகள், நாடகங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், தத்துவங்கள், தரிசனங்கள் முதலியவைகளைக் காணுது மதி மயங்கி நிற்கிறார்கள். புதிய ஒளிபட்ட ஒரு சிலர் தங்கள் வன்மையை தங்களுக்கு முற்றிலும் இணங்கி வராத ஆங்கில மொழியில் நடத்திக் காட்டுகிறார்கள். இவ்வித சரக்குகள் இங்கிலாந்தில் நீடிக்கப் போவதில்லை என்பது நிச்சயம்; தமிழகத்தில் இவைகள் நீடிக்க மாட்டா என்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை. தமிழன் உயிரினின்று ஒலிப்பது தமிழ்; தமிழன் உயிரை எட்டக் கூடியதும் தமிழேயாகும். தமிழகமெனும் கோயிலின் கருப்பக்கிரகத்திலுள்ள தமிழுயிர்த் தெய்வத்தைக் கண்டு கும்பிட வல்லது தமிழே யாகும். ஆகவே உயிர் வேண்டின் நம் உணர்வின் இயலால் தமிழை பற்ற வேண்டும்.

பழமைக் கயிற்றால் நிகழ்காலத்தின் கழுத்தில் சுருக்கிடக் கூடாது; நிகழ்காலக் கயிற்றாலும் வருங் காலத்தின் கழுத்தில் சுருக்கிடக்கூடாது. இவ்விரண்டு செயல்களும் சாவைக் கொண்டு தரும். நமது வாழ்க்கையின் இயலினின்று, புதிய நோக்கங்கள் எழும் பொழுது அவைகள் பழைய நோக்கங்களுக்கு விரோதமாக உள்ளன என எண்ணி அவைகளை ஒதுக்கி விடல் கூடாது. வாழ்க்கை அனந்தமான பொருள். இறந்த, நிகழ், எதிர் என்னும் முக் காலங்களாலும் அதற்கு நாம் முற்றுகை போடுதலானது வாழ்க்கைப் பொருளை எது மற்ற பாலை வனமாக்குதல் போலாகும். உதாரணமாக ஆத்யாத்மிக அநுபவத்தால் ஒருவர் நம் நாட்டில் ஏதாவது ஒரு புதிய தத்துவத்தை நிலை நாட்ட முயலும் பொழுது உடனே நாம் அந்த தத்துவமானது அத்வைதமாகவாவது துவைதமாகவாவது அல்லது விசிஷ்டாத்வைதமாகவாவது இருந்தாகவேண்டுமென உறுதி கூறி அதற்கு இறுதி யிழைக்க முயல்கிறோம். நமது தற்கால கருத்துப் படிக்கு எல்லா தத்துவங்களும் மேற் சொல்லிய மூன்றனுள் ஒன்றுக்குள் அடங்கியாக வேண்டும்; அதாவது இவை மூன்றினுள் அடங்காத தத்துவமே கிடையாது! நம் உயிரின் உணர்வின் இயலில் இவ்வித எல்லைக் கோடு இருக்கும்பொழுது, நாட்டில் புதிய ஆக்கங்கள் எவ்வாறு தோன்றும்? வங்க நாட்டோர் தங்களுயிரின் போக்கில் பகவான் சைதன்யரை எல்லைக் கோடாகக் கருதியிருந்தால் ஸ்ரீராம் மோஹன்ராயும் கேசவசந்திரஸேனும், ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸரும் ஸ்வாமி விவேகானந்தரும் தோன்றுவதற்கு இடமிருந்திராது என்பது குன்றின் மேலிட்ட விளக்கு. புதிய ஒளியை வாங்க அகத்தில் விரிவு வேண்டும். சிரத்தை

உள்ள ஒருவனுக்கு அல்லது ஒரு ஜாதிக்கு ஒளி வலி இன்பம் தானே கிட்டும்—*

யோகம், தத்துவம், கலை, கவிதை, அரசியல், பொருளியல், சமூக இயல், வாழ்க்கை யறம் முதலியவைகளின் பல்வகைப்பட்ட போக்குகளுக்கு எல்லையுங்கிடையாது, முடிவுங் கிடையாது. ஒரு ஜாதியின் வலியுற இன்பமுறச் செறியும் உயிரில் ஒளி புக இடமிருக்கும் வரை மேற் சொல்லிய இயக்கங்களின் போக்குகள் இயலுக்கேற்ற பலவகைப்பட்ட உருமாற்றங்களை தொடர்ப் பெருக்கில் அடையும். இவைகளின் உருவங்களில் வேறுபாடுகள் உண்டாகாவிடில், அனந்தமான வாழ்க்கைப் பொருள் நம்மை கைவிட்டுவிட்டதாக அறியவேண்டும். சிரத்தை உள்ளவரை இறைவனுக்கும் தமக்குமாக உள்ள ஐக்கியம் பற்றறுது. வாழ்க்கை யெனும் கல்பதரு நமது உயிரின் இயலுடைய இச்சைகளுக்கேற்றவாறு அன்றன்றும் இடைவிடாது அளவிறந்து, பல நறுமைகளுடனும் நிறங்களுடனும் வடிவங்களுடனும் பூக்கவல்லது. இயலில் மறதியும் உறக்கமும் இருக்குமாயின் வாழ்க்கையெனும் கல்பதருவும் தூங்கிவழியும். உளத்தினிடை நின்றெரியுந் தீ, மனத்திடை வானவனின் பாந்த ஒளி, நெஞ்சிடை பெயரா வுறுதி, உயிரிடை தயக்கமிலா வேகம், உடலில் குன்றுவலி, இயலையொக்க செயல்கள்— இவை யனைத்தையும் ஒளிர்ந்து காட்டும் தமிழகத்துத் தமிழ் முகங்கள்—முதலியன விழித்தெழும் தமிழியலின் மறதியற்ற நிலைக்கு அடையாளங்கள். தமிழகத்தின் தற்கால உறுதி, தன் இயலில் நினைவையும் விழிப்பையும் பெறுவதில் பாயவேண்டும்; பிறகே, பேறுகள்.

# சங்கீதம்

## நாதமும் ஸ்வரமும்

(ரா. முத்தையர் எழுதுவது)

நாதத்தைக் குறித்து முன் பத்திரிகையில் சிறிது எழுதினேன். ஒரே தடவையில் எழுதினால் தற்பொழுது அனுபவத்தில் பெரும் பழக்கம் இல்லாததால், படிப்பவர்க்கு அருவருப்பைக் கொடுக்குமென நினைத்தும், பகுதிதோறும் சிறிது சிறிதாக எழுதி வெளியிட்டால் படிப்போர் மனதில் பதிந்து வேரூன்றிவிடும் என்றும் எண்ணிக்கொண்டு ஒருவிஷயத்தைச் சேர்ந்த பலபிரிவுகளைத் தொகுதி தோறும் எழுதலாயினேன்.

உலகத்திலுள்ள அனைவரும் சுகத்தையே அடைய விரும்புகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் சிறிது சுகத்தை யடைகிறார்கள். ஆனால் பூரணமான சுகத்தை எக்காலத்திலும் அனுபவிக்கச் சாதனம் எது என்றும் எவரும் வழி தேடி முன் வருவதில்லை. மிகச் சிலரே அதை மிக நுட்பமாக அறிந்து அநுபவித்து எழுதி வைத்திருக்கிறார்கள். அது என்னை எனின், எப்பொழும் சஞ்சல சுபாவத்தையே இயற்கையாகவுடையவும், துர் விஷயத்தில் இறங்கத் தூண்டும் சேர்க்கைகளையுடையவும், ஆசை யென்னும் பிசாசோடு கூடினதும், விரைவில் மறத்தல் மயக்கம் சாக்காடு முதலிய தன்மைகளை யுடையதாய், அப்பியாசத்தால் பகுத்தறிவோடு கூடினதுமான மனதைநிலைநிறுத்தக்கூடியது ஒப்பற்ற நாதமே யாம். ஆனந்த உருவமான சக்தியே நாத உருவமாக இருப்பதால், இம்மை மறுமைப் பயன்களை யளிக்கும் அந்த நாதத்தை உபாசித்து மனதை லயப்படும்படி செய்து உன்மனி என்கிற விருத்தியற்ற

* Knock, and it shall be opened unto you; seek, and ye shall find.



அவஸ்தையை மனது அடையும்படி செய்தால் பூரண ஆனந்தம் உண்டாகும். சமுத்திரத்தில் பெரிய அலைகளிற்பட்டு கரை சேராத துரும்பு படும்பாடுபோல் நிலையின்றித் தத்தளிக்கும் அனேக விதமான ஸம்ஸ்காரங்களோடு கூடின மனதை வெளிப் பொருள்களில் செல்லவொட்டாமல் தடுத்து அதிலுள்ள கெட்ட வழக்கங்களை நசிக்கச் செய்து சாந்தமாக்கி இளக வைத்து அதன்உருவைக்கெடச்செய்து லயிக்கப்படுத்துவது நாதமாம். ஐரோப்பிய பாடகர்களிற் சிறந்த ஒருவர் சரீரத்திற்கும், மனதிற்கும் மூளைக்கும் வந்திருக்கிற வியாதிகளைத் தீர்க்க மருந்தாகவும் நாதத்தை உபயோகப்படுத்தலாம் என்று சொல்லி யிருக்கிறார். சான்றாக தாங்க முடியாத வியாதியாயிருக்கிற ஒருவனது மனம் சாந்தி யடையும்படிக்கு இனிமையானகுரலோடுகூடினபாடகர்களைக்கொண்டுபாடச் செய்து விசிராந்தி யடைவிக்கிறதைப்பார்த்திருக்கிறோம். அந்தப் பாடலைக் கேட்டு நோயாளியானவன் தனக்கு ஏற்பட்டிருக்கும் நோயில் மனதைச்செலுத்தாமல் பாடலில் மனதைச் செலுத்துகிறபடியால் நோயிலிருந்து குணமடைகிறான்.

பிராண வாயு சுழுமுனை நாடியில் குண்டலினீ சக்தியுடன் போகும் பொழுது மூலாதாரம் முதலிய ஆறு சக்கரங்களில் * அயன் அரி உருத்திர மகேசுர சதாசிவ மூர்த்திகளையும், டாகினீ, ராகினீ, லாகினீ காகினீ ஸாகினீ ஹாகினீ என்னும் சக்திகளையும் ஐம்பூதங்களையும், தத்துவங்களையும் ஒழுங்காகத் தியானித்து, அவைகளின் இலக்கணங்களை செவ்வனே யறிந்து அவ் வலியினால் ஒவ்வொரு சக்கரத்திலும் பிராண வாயுவைத் தங்கும்படி செய்து சரீரத்தில் ஆகாச இடத்திற்குக் (ப்ரூமத்யத்திற்கு) கொண்டுவர, அதற்கு மேல் காற்றும் தீயின் அம்சமும் மேற் செல்லுங்காலத்தில் வாயுவுக்குக் காரணமாகிய நாதத்தில் வாயு சேர்ந்துவிடுகிறது. அப்பொழுது நாதம் உண்டாகிறது. என்று ஒரு சாராரும்; சப்தத்தை இயற்றக் கூடிய சக்திகளாகிய வைகரீ, மத்யா, பச்யந்தி, பரா என்னும் நான்கு சக்திகளும், குண்டலினீ சக்தி சுழுமுனையிற் செல்லவே குண்டலினீ சக்தியுடன் மூலாதாரத்தில் வைகரியும், அநாஹதத்தில் மத்யமாவும், ஆக்ஞையில் பச்யந்தியும், ஸஹஸ்ராரத்தில் பராசக்தியும் சேர்ந்து மேற்செல்ல நாதம் உண்டாகிறதென்று ஒரு சாராரும்; மூலாதாரம் முதல் ஆக்ஞை வரையிலுள்ள ஆறு சக்கரங்களிலும் முறையே இசைக்குரிய ஏழு எழுத்துக்களில் முதல் ஆறு ஸ்வரங்களுடையவும் ஸஹஸ்ராரத்தில் ஏழாவது எழுத்தினுடையவும் இடமிருக்கிறது, இவ் ஏழு ஸ்வரங்களும் மேற்கூறியபடி வைகரீ முதலிய சப்தோத் பாதக சக்தியுடனும் தேக ஆகாச இடத்திற்கு மேற் செல்லும்போது நாதம் உண்டாகிறது என்று ஒரு சாராரும்; நாதம் ஆஹதம் அனாஹதம் என இருவகைப்படுமென்று, முன் சொன்னேனும், அவைகளில் ஆஹதமானது புருஷப் பிரயத்தனத்தால் ஆகாச இடமாகிற விசுத்தி சக்கரம் இருக்கிற கண்டத்தில் வைகரீரூபமாக வெளிப்படுகிறது அனாஹதம் பிரயத்தன மன்னியில் இயல்பாக உண்டாகிறது, அவ்விதமாகவே ப்ரூமத்தியத்திற்குமேல் குண்டலினீ சக்தியுடன் மேற் சொன்னபடி காற்று சேரவே நாதம் உண்டாகிறது என்று ஒரு சாராரும் அவரவர் கொண்ட கொள்கைக்கு இசைத்துக்கொண்டு போவர்.

இவ்வித நாதமானது அவ்யக்த தொனியோடு கூடினதாகவும் சிறிது வர்ணங்களுடன் கூடி ஓசை ரூபமாயும் தெளிவாக பிந்து ரூபமாகவும் அர்த்தேந்து நாதம்

* ஆறு சக்கரங்களாவன:—

௧. மூலாதாரம் குதத்திற்கு இரண்டு அங்குலத்திற்கு மேல் இலிங்கத்திற்கு இரண்டு அங்குலத்துக்குக் கீழ் உள்ள ஸ்தானத்தில் முக்கோண வடிவாக நான்கு செந்தாமரை இதழ்களோடு உளது.

௨. சுவாதிட்டானம் இலிங்கமூல ஸ்தானத்தில் அறுகோண வடிவமாக மிக்க பிரகாசத்தினையுடைய ஆறு தாமரை இதழ்களோடு கூடியுளது.

௩. மணிபூரகம் நாபியின் தானத்தில் மூலவட்டம் வடிவமாக ரத்தினப் பிரகாசம் போன்ற பத்து தாமரை இதழ்களோடு கூடினது.

௪. அநாகதம் ஹிருதய கமல ஸ்தானத்தில் முக்கோண வடிவமாக பொன்னிறத்தினையுடைய இதழ்கள் பன்னிரண்டோடு கூடினது.

௫. விசுத்தி கண்டகூட ஸ்தானத்தில் பதினறுகோண வடிவமான வெண் தாமரை இதழ் பதினாறோடு கூடியுளது.

௬. ஆக்கினை புருவமத்தி ஸ்தானத்தில் இரண்டு தாமரை இதழ்களோடு கூடியுளது.

மகாநாதம் எனும் பெயர்களுடன் வளர்ச்சியுறுகிறது. நாதம் ஆனந்தம் உண்டாகும் வரையும் காற்றை பிரம்மரந்திரத்தில் நிலை நிறுத்தப் பழக்க வேண்டும். அப்படி மூர்த்தாவில் உலாவச் செய்யும் பொழுது வீணா நாதம் போல் ஓசை உண்டாகும். உடலில் அர்த்த நாரீசுர இடமான ஸகஸ்ராரத்திலும் அதன் மேல் சக்தி இடமான பிரம்மரந்திரத்திலும் போகும் போது வீணாநாதம் சப்தித்து, முதலில் சங்க நாதமும், மத்தியில் மேக நாதமும், இறுதியில் அருவி விழுவது போன்ற நாதமும் உண்டாகிறது என்கிற பல விவரணங்கள் யாக்ஞவல்கிய கீதையில் சொல்லப்பட்டது. இவ்வாறு வளர்வுறுகிற விபரம் ஹம்ஸோபநிஷத்திலும் மண்டல பிராமணோபநிஷத்திலும் கூறுகிறது என்பர் ஆன்றோர். நாதம் அவ்விதம் பெருகும்போது சரீரத்தில் ஸ்வேதம், கம்பம், பஞ்சனம், பேதனம், சிரக்கம்பம்; அமிருத ஸ்ராவம் முதலிய அனேக அறிகுறி விகாரங்கள் காணப்படுகின்றன.

நாதம் வர்ணாத்மகம் த்வந்யாத்மகம் என இருவகைப்படும். அவற்றுள் த்வந்யாத்மகம் தெளிவாக ஏழு ஸ்வரங்களாகவும், மிருகம் பக்ஷி இவைகள் சப்திக்கும் ஓசையான தெளிவில்லாமலும் இருவகைப்படுகிறது. தெளிவில்லாத நுட்ப ஓசையும் ஏழு ஸ்வரங்களின் இலக்கணத்தோடு சேர்ந்ததென்றே இசைக் கலைஞர் துணிபு. தொண்டர்க்கு அருட் கடலான கடவுள் தொண்டர்கள் நம் உருவத்தைக் காண முடியாமல் தயங்குவரே என்று எண்ணி கட்புலனாலறிய வில்லையானாலும் செவிப் புலனாலாவது அறியட்டுமென அவருடைய தயக்கத்தைத் தீர்க்கவே நாதமே உருவாகக் கொண்டு இயங்குகிறான். முற்றத் துறந்து முழுவனத்திற் சென்றுறைந்து தவம் செய்யும் முனிவர்களும் குயில் முதலிய பக்ஷி மிருகாதிகளின் தொனியிலேயே சங்கீதத்தை யனுபவித்து ஆனந்தமடைகிறார்களென்றால், அருமையான இராகங்களில் பக்தி யுரிமையான ஆன்ற பொருளமைந்த அறிஞர்களால் இயற்றப்பட்டு, இனிமையான குரலோடுகூட இசை இலக்கணத்திலும் அனுபவத்திலும் முற்றுப் பெற்ற முதன்மையோரால் கேட்போர் இன்புறும்படி பாடப்படுகிற நமது இந்த சங்கீதத்தை நாம் கேட்டு ஆனந்தமடையாதிருப்போமோ?

காஷ்டங்களில் தீ யிருப்பதை அரணி கடைந்தெடுப்பது போலவும், எள்ளில் எண்ணெ யிருப்பதை செக்கிலிட்டு ஆட்டி எடுப்பது போலவும் சரீர முழுவதும் பரந்திருக்கிற நாதத்தை யோகாப்பியாசத்தால் அறிகிறார்கள்.

தவிர; கான உருவமான நாதம் சுவாச பாவங்களையும் வளரச் செய்து நற் செய்கைகளிலும் பிரவிர்த்திக்கச் செய்கிறது. நாதமானது தெளிவான பிறகு கோஷம், காம்ஸ்யம், சிருங்கம், கண்டம், வீணை புல்லாங்குழல் சங்கம் துந்துபி மேகநாதம் என்கிற ஒன்பது பிரிவாகப் பிரிகிறதென்று உமா ஸம்ஹிதையில் விவரமாகக் கூறப்படுகிறது. அவைகளில் தெளிவில்லாதிருக்கிற கோஷம் என்னும் நாதம் கிடைத்தால் மனதை வசப்படுத்தி சரீரத்தில் வியாதிகள் நீங்கி வசியம், கிரகித்தல் முதலிய சக்திகள் உண்டாகிறது. காம்ஸ்யம் என்னும் நாதம் கிடைத்தால் சீவப் பிராணிகளின் போகத்தைத் தடுத்து ஸ்தம்பமடையச் செய்தல், விஷத்தை நிவர்த்தி செய்தல், பூதக் கிரகங்களைக் கட்டுப்படுத்தல் முதலிய சக்திகள் உண்டாகும். சிருங்கம் என்னும் நாதம் கிடைத்தால் இடையூறு செய்யப்பட்டவனை நினைத்து மாரணம்செய்யும்வலியைக்கொடுக்கும். கண்டம் என்னும் நாதம் கிடைத்தால் தேவதைகளை உலகத்தில் வரவழைக்கும் சக்தியுண்டாகுதலன்றி, இச்சித்த பொருள்களும் உடனே கிடைக்கும் வலிமையையும் கொடுக்கும். வீணாநாதமானது தூரத்திலிருக்கும் பொருள்களைப் பார்க்கும்படியான சக்தியைக் கொடுக்கும். புல்லாங்குழல் நாதமானது எல்லா தத்துவங்களையும் அறியும்படியான ஞானத்தைக் கொடுக்கும். சங்கம் துந்துபி என்னும் நாதங்கள் விரும்பும் உருவத்தை எடுத்துக் கொள்ளும்படியான சக்தியையும் மேகநாதமானது பழக்கப்பட்டவனுக்கு நேரிடுகிற ஆபத்தைப் போக்கடிக்கிற சக்தியையும் கொடுக்கும்.

இவ்விதமான நாதங்களைக் கேட்டு அவைகளில் மனதைச் செலுத்தாமலும் அவைகளால் ஏற்படும் சக்திகளுக்கு விரும்பாமலும் பிரம்ம உருவத்தை நினைத்தால் சித் சக்தியின் அருள் உண்டாகி கடவுளுக்குரிய சக்தியுடையவனாகிறான். உன்மனி அவஸ்தையை மனது அடைந்த காலத்தில் இன்பம் உண்டாகும் படியான



மூர்ச்சாவஸ்தை உண்டாகிறது. ஆத்மாவினிடம் மனது சேருகிறதால் இன்பம் உண்டாகிறது. உப்பு நீரிலும், கர்ப்பூரம் தீயிலும் கரைந்து விடுவது போல, உன்மனி அவஸ்தையை அடையச் செய்கிற நாதத்தை உபாசித்தால் பிரம்ம உருவமாகிறான். பாட்டுருவமான நாதம் கேட்போரின் காதின் வாயிலாக உட்சென்று அவரின் மனோபாவத்தை வளர்ப்பதோடு அன்பையும் நல்ல செய்கைகளில் இறங்கத் தூண்டுதலைச் செய்கிறது. விரிவஞ்சி இவ்விடம்சுருக்கி வேறொருசமயம் விரித்தலை நலமாமென நிறுத்தப்படுகிறது. இம் முறை இம்மட்டோடு நாதத்தை நிறுத்திக்கொண்டு இந்த நாதத்தால் ஏற்படும் ஸ்வரத்தைக் குறித்துச் சிறிது கூறுவோம்.

நாதத்தால் ஆக்கப்பட்டு பெயர் இலக்கண அறிகுறிகளின் சம்பந்தமில்லாமல் கேட்பவர்களுக்கு ரஞ்சனையையுடைய சப்தத்திற்கு ஸ்வரம் என்று காரணப் பெயர் சொல்லப்படுகிறது. நாதமானது முதலில் சிரவண இந்திரியத்தில் குறைவான சப்தத்தோடு விழுந்தவுடன் சுருதி என்று பெயரடைகிறது. அது ஸ்வரங்களுக்கு அவயமாகிற சுருதி ரூபமாக முதலில் கேட்ட பிறகு கேட்க இனிமையாகவும், மனதிற்குச் சந்தோஷத்தையும் உண்டு பண்ணக் கூடியதுமானதற்கு ஸ்வரம் என்று பெயர். இந்த ஸ்வரத்தை இசைக்கிற பொழுது மந்திரஸ்தாயிக்கும் கீழே போய்விட்டாலும், தாரஸ்தாயிக்கு மேலே போய்விட்டாலும் நம் காதிற்குக் கேட்க மாட்டாது. இதற்கு ஆன்றோர் ஓர் வரையறை செய்திருக்கின்றனர். அதாவது ஒரு க்ஷணப்பொழுதில் (க்ஷணம்-நொடி) எழுகிற வேபனங்களின் கூட்ட வரிசையை ஓசை * என்று சொல்லப்படுகிறது. இந்த வேபனங்களின் தொகை சுமார் ௨௰க்குக் குறை பட்டாலும் சுமார் ௪0000 க்கு மேற்பட்டாலும் ஓசை நமது செவிக்குக் கேட்காது. ஆதலால் இவ்விரண்டிற்கும் மத்திய காலங்களில் தோன்றி உலவுகிற ஸ்வரம் கேட்க இனிமையைத் தருகிறது. இவ் வேபனங்களால் உண்டாகிற இனிமையான ஸ்வர ஓசையைத் தவிர ஏனைய ஓசைகள் இனிமையைத் தராவாம். எவ்வித ஓசையானது ஒருக்ஷணத்திற்கு நிதானமான கணக்கின் வேபனங்களின் தொகுதியால் உண்டாகிறதோ, அந்த ஓசையினால் காதுக்கு இன்பம் உண்டாகிறது. இவ்வாறு இன்பம் பயக்கும் தொனியை சாரீரத்திற்குத் தகுந்தபடி மட்டுப் படுத்தி சுருதியாக வைத்துக் கொண்டு முறையே ஆன்றோர் அமைத்திருக்கிற இசைக்குரிய எழு விதமான ஸ்வரங்களைப் பாடத் தொடங்கவேண்டும்.

அவ்வித ஸ்வரங்களை ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனப் பெயரிட்டு வழங்கியிருக்கிறார்கள். இவைகளை

சரிகம பதநி யென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்து— தெரிவரிய
ஏழிசையுந் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்குஞ்
சூழ் முதலாம் சுத்தத் துளே.

என்கிறபடி சுருக்கமாக ஸ—ரி—க—ம—ப—த—நி என்று வகுத்திருக்கிறார்கள். இந்த ஸ்வரங்களின் பெயர்களை ஏனையவற்றைப் போல இடுகுறி மாத்திரையால் வைக்காமல் காரணம் பற்றியே வைத்திருக்கிறார்கள்.

உதாரணமாக ஷட்ஜம் என்ற ஸ்வரத்திற்கு ஹ்ருதயம். கண்டம், மூக்கு, அண்ணம், நாக்கு, பல் ஆகிய ஆறுவகைத் தானங்கள் சம்பந்தப் பட்டுப் பிறத்தலினால் ஷட்ஜம் எனவும்; ரிஷபம் முதலாக நிஷாதம் வரையிலுள்ள ஆறு ஸ்வரங்கள் பிறக்கிறதற்கு எந்த ஸ்வரம் ஆதாரமாயிருக்கிறதோ அதை ஷட்ஜம் எனவும் காரணப்பெயராக்குவர். ஏனை ஸ்வரங்களுக்கும் இவ்வாறே மற்றோர் தடவை எழுதுவோம். இந்த ஸ்வரங்களை மூன்று ஸ்தாயிக்கும் ஒக்கும்.

மூன்று ஸ்தாயிகள் என்று முன் கூறினோம், அவை எவ்வாறு எனில் ஹ்ருதயத்திலிருந்து அனாஹதச் சக்கிரத்தில் நின்றும் உதானன் தாக்கப் பட்ட அக்கினியிலிருந்து வெளியே வருவதனை ஓசையென்று கூறப்படுகிறது. இந்த நாதமானது முறையே கண்டத்திலுள் விசுத்தி என்னும் சக்கிரத்திலும், தலையிலுள்ள ஸஹஸ்ராரம் என்னும் சக்கிரத்திலும் சென்று தாக்குவதால் மந்திரம், மத்தியமம், ஸ்தாயி என மூன்று பிரிவுகளாகின்றன. இவ்வாறு மூன்று ஸ்தாயிக்கும் ஒத்

* A number of Vibrations per second

திருக்கிற ஸ்வரங்கள் ஏழினுடையவும் ஓசையை முறையே மயில், காளை, வெள்ளாடு, க்ரௌஞ்சம், வஸந்த காலக் குயில், குதிரை, யானை என்றிவைகளுடைய தொனிகளுக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள்.

இவ் விபரங்களைத் தமிழ் முறையில் வருமாறு கூறப்படுகிறது. மூலாதாரத்தினின்று எழும் எழுத்தின் நாசம் ஆளத்தியாய்ப் பிறகு இசை என்றும் பண்ணென்றும் பெயர் பெறும். பல இயற்பாக்களுடனே ஆளத்தியை இசைத்தால் இசை என்றும் நெஞ்சு கழுத்து நாக்கு மூக்கு அண்ணுக்கு பல் உதடு தலை என்கிற பெருந்தானம் எட்டிலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்கிற செய்கைகள் எட்டாலும் பண்ணிப் படுத்தலால் பண் என்றும் பெயர் பெறும். இவ்வாறு பண்ணிற்கு ஆதாரமாயிருக்கிற ஸ்வரங்களை,

> குரல் துத்தம் நான்கு கிளை மூன்று இரண்டாம்
> குரையா உழையிளி நான்கு—விரையா
> விளரி யெனின் மூன்றிரண்டு தாரமெனச்சொன்னார்
> களரி சேர் கண்ணுற்றவர்.

என்கிறபடி குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்று சொல்லுவர். இவற்றுள் குரலானது மிடற்றின் வழியாகப் பிறந்து நான்கு மாத்திரை அளவாய்; பாற்சுவை உவமையாகப் பரவும். துத்தமானது நாவினடியாகப் பிறந்து நான்கு மாத்திரை அளவோடு தேன் சுவை யுவமை கொண்டு தொனிக்கும். கைக்கிளையானது மேல் வாயினடியாகப் பிறந்து மூன்று மாத்திரை அளவாகத் தயிரின் சுவை உவமையாகத் தவழும். உழையானது தலையின் அடியாகப் பிறந்து இரண்டு மாத்திரையளவாய் நெய்ச் சுவை உவமையோடு விலகும். இளியானது நெற்றி யடியாகப் பிறந்து நான்கு மாத்திரை யளவாய் வலத்தின் சுவையோடு எழும். விளரியானது நெஞ்சினடியாகப் பிறந்து மூன்று மாத்திரை அளவாகக் கதலிக் கனியின் சுவையோடு கனலும். தாரமானது மூக்கினடியாகப் பிறந்து இரண்டு மாத்திரை அளவாய் மாதுளங்கனிச் சுவையோடு மயங்கும். இவ் விதமாக ஒவ்வொரு ஸ்வரங்களினுடையவும் மாத்திரைகளைச் சேர்த்தால் மொத்தம் இருபத்திரண்டு மாத்திரைகள் ஆகின்றன. இந்த இருபத்திரண்டு மாத்திரைகளையே துவாவிம்ச சுருதிகள் (இருபத்திரண்டு சுருதிகள்) என்று வட நூல் இசை இலக்கணங்களில் கொண்டனர் எனத் தோன்றுகின்றது. இவ் விபரம் ஆராயற் பாலது.

தற்பொழுது அனுபவத்திலிருக்கிற இசைக் குரிய ஷட்ஜமாதி எழுத்துக்களைத் தமிழில் குரல் முதலாகத் தாரமீறாக வழும் இசைக் குரிய எழுத்துக்களின் பெயர்கள் எனவும் வீணையின் எழு நரம்புகளெனவும் கூறப்படுகிறது. எழு சுரங்கள் பிறக்கக் காரணமான ஷட்ஜமத்திலிருந்தே ஏனைய ஸ்வரங்கள் பிறக்கின்றனவென முன் கூறினோம். ஷட்ஜமம் முதல் நிஷாதம் ஈறாக எழு ஸ்வரங்களுக்கும் முறையே குரல் முதலாகத் தாரமீறாகச் சொல்லப்பட்ட ஸ்வரங்களை யானால் வடமொழி இலக்கணங்களில் கூறியபடி குரலிலிருந்து பிறக்கின்றதெனக் கூற வேண்டும். அங்ஙனமின்றி,

> தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்றும்
> ஓரும் குரல் குரலினுட்டோன்றி—சேருமிளி
> யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
> கைக்கிளை தோன்றும் பிறப்பு.

எனக் கூறப்படுகிறது. அதாவது தாரத்தில் உழை பிறக்கும், உழையில் குரல் பிறக்கும், குரலுள் இளி பிறக்கும், இளியுள் துத்தம் பிறக்கும், துத்தத்தினுள் விளரி பிறக்கும், விளரியுள் கைக்கிளை பிறக்கும் என ஆகிறது. இதனால் முதலில் தோன்றுவது தாரமெனத் தோன்றுகிறது. ஆகவே இரு முறைகளுக்கும் முறை வைப்பு முரண்படுகிறது. இவ்வாறு முரணக் கூறியது தமிழிற் கூறப்படுகிற மகரயாழ் செங்கோட்டியாழ் முதலிய வீணைகளில் நரம்பு மூலமாகப் பிறக்கும் ஸ்வரங்களை யுரைத்தனர் போலும். ஆதலால் இவ்வாறு வடமொழி இலக்கணத்திலும் தமிழ்மொழி இலக்கணத்திலும் கூறப்படுகிற இவை போன்ற விஷயங்களை ஆராய வேண்டும்.

16.204

# நமது சிற்பச் செல்வம்

—— :|o|: ——

## ஸ்ரீ கூர்மாலயம்

இது தான் திருமால் கூர்மாவதார மெடுத்த இடம். இது சிகாகோல் என்ற இடத்தினின்று [illegible] மைல் தூரத்திலுள்ள, ஸ்ரீ கூர்மம் என்ற



ஸ்ரீ கூர்மாலயம்

இடத்தில் இருக்கிறது. ச்வேத மன்னனைக் காக்க [illegible] காக்க இந்த கூர்மேச்வரர் என்ற திருநாமத் [illegible]

[illegible]டன் கடவுள் எழுந்தருளினார். இக் கோயிலில் பல புண்ணிய தீர்த்தங்களிருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது ச்வேத புஷ்கரணி. இதில், இறந்தவர்களுடைய எலும்புகளை எறிந்

இவ் வாலயத்திலுள்ள கல்வெட்டுகள் சரித்திர சம்பந்தமான பல விஷயங்களைத் தெரிவிக்கின்றன. சாளுக்கியமன்னன் விமலாதித்தியனைப் பற்றிய சரித்திரங்கள் இதில் காணப்படுகின்றன. ௧௦௨௧ முதல் ௧௦௬௩ம் ஆண்டுவரை இராஜமஹேந்திர புரத்திலிருந்து வெகு திறமையோடு அரசு செலுத்திய ராஜராஜன் பெருமையைக் காட்டும் பல எழுத்துகள் இதில் காணப்படு



பூரி ஜெகந்நாதம்

கின்றன. இந்த ராஜராஜன் தெலுங்கில் பாரத ஜாதியின் சரித்திரத்தை எழுதிவைத்திருக்கிறான். இவன் கவிகளையெல்லாம் நன்கு ஆதரித்தான். அவர்களுள் நன்னயபட்டர் என்பவர் தெலுங்கில் மஹாபாரதத்தை எழுதினார்.

வெகு நாளைக்குப் பின்பு நரஹரிதீர்த்தரென்றவர் இதை ஆண்டார். இவர் இக் கோயிலுக்கு முன்பு, யோகானந்த நரசிம்ஹர் ஆலயம் கட்டினார். இவர் பூர்ண ப்ரக்ஞர் என்ற மாத்துவத் துறவியிடம் உபதேசம் பெற்று துறவறத்திலேயே நின்றார். இவர் தான் ஸ்ரீ ராமர், ஸீதை முதலிய விக்ரகங்களைக் கூர்மாலயத்தில் பிரதிஷ்டை செய்தது.

இத் தகைய சிறப்புவாய்ந்த ஸ்ரீ கூர்மஆலயத்தின் முகப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது.

## பூரி ஜெகந்நாதம்

"கிருஷ்ணா" என்று எண்ணிய அளவில் ஆனந்தத்தால் தன்னை மறந்து பரவசமாகும் ஸ்ரீ சைதன்



யரும், விஷ்ணு பஜனை பத்ததியை நம் நாடெங்கும் பேரின்ப மடையும்படி பரப்பிய, போஜேந்திரஸ்வாமிகளும் தரிசித்துத்திகட்டாத இன்பமடைந்த பூரி ஜெகந்நாதத்தின் மகிமையை என்னென்று சொல்வது! பலகோடி அன்பருக்கு இன்ப மளித்து நிற்கும் இந்த ஜெகந்நாதனுடைய ஆலயத்தின் அடியை மஹோததியான வள் தோத்திரம் செய்து என்றும் பணிகிறாள். திரள் திரளான ஆன்மகோடிகள் ஈசனருளைப் பெறுவதற்குக் கடல் போல் ஆவேச அலைகள் துடிக்க வருவதன் காட்சியே காட்சி.

இக் கோயில் ஜெகந்நாதனை ஸ்ரீகிருஷ்ணனின் ஸ்ரீ மந்திரமும், பலராமர் சுபத்திரை முதலியவருக்குத் தனித் தனி ஆலயங்களும் கட்டப் பட்டிருக்கின்றன. சபாமண்டபத்தின் பின்னே கர்ப்பக்கிரகம் அழகாக அமைந்திருக்கிறது. அதன் கோபுரம் சுமார் ௨௦௦ அடி உயரமுள்ளது. இங்கிருக்கும் விக்கிரகங்கள் மரத்தினால் செய்யப் பட்டனவை. ஜெகந்நாதரின் நெற்றியில் ஒரு விலையுயர்ந்த வைரம் பதிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டு ஆலயங்களின் அழகு ஒழுகும் சிற்ப வேலைகளுக்கும் அதன் அருள் ஒளிரும் விக்கிரகங்களுக்கும் குறைந்ததேயேனும் ஜெகந்நாதபுரியின் இயற்கைக் கடற் காட்சி மனதை இழுக்கக் கூடியது. கிருஷ்ணபகவான் முடிவில் வேடனின் அம்பு பாய்ந்து இறந்தவுடன் அவர் சரீரம் பாதி தகனம் செய்யப் பட்டபடியே பெரிய வெள்ளத்தால் பூரி ஜெகந்நாதத்திற்கு வந்து சேர்ந்ததென்றும் அதுவே மூல விக்கிரகமென்றும் பாதி எரிந்து பின்னப்பட்டதனாலேயே பூரி ஜெகந்நாதருடைய திருவுருசிற்ப இலக்கணத்திற்குப் பொருந்தாது அமைக்கப்பட்டிருக்கிற தென்றும் நம்புகிறார்கள். இக் கோவிலின் விக்கிரகங்கள் ௯ ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும்.

இங்கு ஆடிமாதத்தில் நடக்கும் தேர்த் திருவிழா மிகவும் சிறப்புற்றது. அப்போது பௌர்ணமியன்று கிருஷ்ணன் கடலாடும் திருக் காட்சி பார்க்கப்பார்க்கத் தெவிட்டாது.

# ஜகதீச சந்திர வஸு செய்த ஆராய்ச்சிகள்

(பஞ்சாபு வித்யாலயத்தில் தைமீ த்தில் அவர் செய்தபிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு)

(ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன் மொழிபெயர்த்தது)

## செடிகொடிகளின் ஸ்வலிகிதம்

செடிகொடிகள் பெரிய ஊமைகளாயிருக்கின்றன. ஆதலால் அவைகளை நாம் கேட்கும் கேள்விகளுக்கு ஏதாவது விடைகளைக் கொடுக்கும்படி செய்யக்கூடிய யாதாயினுமொரு நிர்ப்பந்தச் சக்தியை நாம் கண்டு பிடிக்க வேண்டும்; அப்புறம் அவையிருக்கும் விடைக் குறிகள் தமக்குத்தாமே நமக்கு பொருட்படக்கூடிய ஒரு பாஷையாக மாறுவதற்குத் துணை புரியும் கருவிகளையமைத்தல் வேண்டும்: கடைசியாக அவ்வித விசித்திர பாஷையின் பொருளை நாம் அறிந்து கொள்ளப்

பிரயத்தனப்பட வேண்டும். வாய் திறந்து பேசாமல் மறைந்து நிற்கும் உயிர்களின் ரஹஸியங்களை ஊடுருவிக் கண்டறியக்கூடிய கருவிகள் எவ்வளவு நுண்ணிய கருவிகளாயிருத்தல் வேண்டுமென நாமே யோசித்துப் பார்த்துக்கொள்ளலாம். முதல் முதல் அனைத்திலும் சிறிய உயிர் நிலை வஸ்துவைக் கண்டறிந்து அதன் உயிர்த் துடிப்பை அறிதல் அவசியம். பூதக் கண்ணாடியால் காணக்கூடிய வஸ்துக்களுக்கப்பால் உள்ள கண்ணுக்குத் தென்படாத வஸ்துக்களை நாடிச் செல்லுதல் வேண்டும். அதற்கென நிர்மிக்கப்பட்ட மின்சார ஊடுருவியுணர்க் கருவியைக் கொண்டு மரத்தில் மறைந்து நிற்கும் உட்பாகத்திலுள்ள பிரதிஸ்தலத்தையும் ஆராய்தல் வேண்டும். செடிகொடிகளில் முக்கியாம்சங்களில் மிருகங்களிற் போன்ற ஆக்ஞா நாம்புகள் இருப்பதால் அவைகளைத் தாக்கினால் மிருகங்களைப் போலவே செடிகளும் உள்ளிழுத்துச் சுருங்கும் குணத்தை உடைத்தாயிருக்கின்றன வென்றும், உண்மையை மேற்கூறிய கருவிகளையும் இதர பல வித கருவிகளையுங் கொண்டு ரூபிக்க முடிந்தது. செடிகொடிகளும் விரிந்த நரம்புக்கட்டங்கள் உடையன வென்றும் கண்டு பிடிக்கலாயிற்று.

சலனமில்லாது உலர்ந்த கட்டையைப் போல் தோன்றும் பட்டைகளுக்குள்ளே துடி துடித்துக் கொண்டிருக்கும் அங்கங்கள் உள்ளன; இந்தத் துடிதுடிப்புதான் படபடவென்று அடித்துக் கொள்ளும் நமது இருதயத்தை யொத்தன உயிர் துறக்கும் நெருக்கடியான ஸமயத்தில் நமக்கு ஏற்படும் மாறுவல்தையைப் போன்ற ஒரு படபடப்பும் ஹிம்ஸையும் செடிகளுக்கும் ஏற்படுகிறது. சமீப இனங்களுக்குள் வெளிக்குத் தோற்றும் பேதங்கள் மறைந்து அற்பமான புல் பூண்டு முதல் மானிட வர்க்கம் வரைக்கும் உள்ள சகல ஜீவராசிகளும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவைகளாய் ஒரே உயிர் இயங்குவனவாய் இருக்கின்றன.

செடிகள் வளர்வதின் ஊக்கத்தையும் அதன் இயல்பைப்பற்றியும் நிரம்பவும் முக்கியமான உண்மைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் கஷ்டத்தைத் தருவது யாதெனில்—நத்தையின் அதிமந்த கதியினைக் காட்டிலும் செடிகொடிகளின் வளர்ச்சி ஆயிரம் மடங்கு மந்தமுடையதாயிருந்ததே யாகும். இக் காரணத்தால் வளர்ச்சி வேகத்தை நமக்குப் பிரத்தியக்ஷ பூர்வமாய்க் காட்டி அதனை அளக்கக்கூடியதும் பல்லாயிரம் மடங்கு பெரிதாய் விளக்கிக் காட்டக் கூடியதுமான பூதக் கண்ணாடியை நிர்மிக்க வேண்டியது அவசியமாயிற்று. நான் நிர்மாணம் செய்திருக்கும் 'மாக்நடிக் க்ரெஸ்லோக்ராப்' 'காந்த பூதக் கண்ணாடி' என்னும் கருவியினால் வஸ்துக்களை ஐந்து கோடி, முதல் பத்துக்கோடி மடங்கு பெருக்கிக் காணக்கூடியதென்பது மனதாலும் கிரகிக்கக் கூடிய விஷயமன்று. அத்தனை கோடி முறை பெருக்கிக் காணலாமென்பதை நாம் மனதில் மனோராஜ்யஞ் செய்துகொள்ளக்கூட இயலாது. இந்த அற்புத விஷயம் உங்கள் புத்திக்கெட்டும்படி உதாரணரூபமாய்க் கூறுகிறேன் கேளுங்கள். அதாவது எனது கருவியால் பெருக்கிக் காட்டும் போது நத்தையினுடைய வேகம் எவ்விதம் உங்களுக்குப் புலப்படும் என்பதைச் சற்று யோசியுங்கள்! இந்த வேக ஆதிக்கத்துக்கு தற்காலத்திய பீரங்கிகளிலிருந்து புறப்படும் குண்டுகளின் வேகத்தை ஒப்பிட்டாலுங் கூட அவ் வேகத்தின் தன்மை நமது அறிவுக்குக் கோசரமாகாது. ஏனெனில் தற்காலத்தில் பூலோகத்திலுள்ள மஹா பெரிய பீரங்கியின் குண்டைவிடப் பல்லாயிர மடங்கு அதிகரித்ததாகத் தோற்றும் நத்தையினுடைய வேகம். சூரிய மண்டலத்து உண்



மைகளுள் ஒப்பிட்டுப் பார்த்தால் சிறிது கோசரமாகும். இப் பூமியின் நிரக்ஷமத்திய ரேகையில் ஒரு புள்ளியானது மனதால் கூட நினைக்க முடியாத வேகத்துடன் சுழல்கின்றது. நமது கருவியில் காணப்படும் நத்தையானது பூமியைப் பார்த்து ஏளனம் செய்தால் பொருத்தமாகவே இருக்கும். நத்தை பூமியைப் பார்த்து 'என்ன நத்தையைப் போல் ஊர்கின்றாயே' என்று பரிகாசம் செய்தால் நாம் பரிகாசம் செய்தது சரிதான் என்றே சொல்வோம். ஏனெனில் இந்த மந்த கதியான பூமி ஒரு பிரதக்ஷிணம் செய்யுங் காலத்துக்குள், நத்தை நானூறு முறை பிரதக்ஷிணம் செய்துவிடும்.

இத்தகைய மனதுக்குக்கூட எட்டுதலில்லாத நுட்பத்தினையும் உணர்ச்சியையுமுடைய கருவிகளின் உதவியினால்தான் வளர்ச்சியின் ஒழுங்கும் முறையும் கண்டுபிடிக்கப்படலாயின. செடிகளின் வளர்ச்சியை அதிகரிக்கக் கண்டுபிடிக்கப்பட்ட ஊக்கத்தை உண்டு செய்யும் இயல்பினவாகிய மின்சார சக்தி ரஸாயன வஸ்துக்கள் முதலியனவும் இவ்வித கருவிகளின் சகாயத்தினால்தான் மனிதனுக்குத் தெரியலாயின. இவ்வாறாக நாம் இவ்வுலகத்தின் ஆகார வகைகளை அதிகரித்துக்கொள்ளுவதற்கு அத்தியாவசியமான வழியைக் கண்டுகொண்டோம். எவ்வளவு பரிமாணம் உபயோகித்தால் அந்த ரஸாயன வஸ்துக்கள் நமக்குப் பயன் படுவதாகும் என்பதைக் கண்டறிதல் முக்கியமானது. ஆடத்தான பரிமாணத்துக்கு மிஞ்சாமல் சில வஸ்துக்களைக் கொஞ்சமாக உபயோகிக்குங்கால், வளர்ச்சி வெகு தீவிரமாய் விருத்தியடைதற்கு நிரம்பவும் உதவியாய் இருக்கின்றன.

### தன்னியக்கம்

செடிகொடிகளின் ஆராய்ச்சித் துறையில் திகைப்பையுண்டு செய்யும் விஷயம் ஒன்றுளது. அதாவது,தனக்குத்தானே சுயமாகவே உற்பத்தியாகுந் தன்மை அல்லது தன்னியக்கமென்னும் குணநிசயத்தின் சூக்ஷமம். உதாரணமாக இருதயம் தனக்குத்தானே அடித்துக் கொள்கிறதாகக் காணப்படுகிறது. யுக்தி யோசனைகளும் வரப் பிரலாதமும் தாமாகவே முளைப்பதாகத் தோற்றுகின்றன. அதிகாடாந்தகாரப் பிரதேசமான இந்த விஷயமாக செடிகொடிகளிடம் செய்த பரீக்ஷைகள் மூலமாய் நமக்கு உண்மை உதயமாகிறது. செடிகொடிகளின் தன்னியக்கமான நாடியோட்டத்தைக் கண்டறிய முடிந்தது; அவற்றின் உற்பத்தி சரித்திரத்தையும் அறிந்து கொண்டோம். உண்மையை உள்ளவாறு கூறுங்கால் எதுவும் தன்னால்தானே இயங்குவது அதாவது சுயமாகவே உதிப்பது, முளைப்பது என்பதே கிடையாதென்றும் விஷயம் ஆராய்ச்சிகள் மூலமாய்த் தெரிவாகிறது. ஆனால், உயிருள்ள வஸ்துவானது வெளிபுலகிலுள்ள சக்திகளை ஆகரிஷித்து அவ்வாறு கிரஹிக்கப்பட்ட சக்தியை மெள்ள மெள்ள தன்னுட்புறத்தில் மறை சக்தியாகச் சேமித்து வைத்துக்கொள்ளும் ஆற்றலுடையது என்பது ருசுவாகிறது. இந்தச் சேமதனமாகிய சக்தியே சிறிது சிறிதாக வெளிக்கு வந்து தன்னியக்கம் போல் தோன்றுகிறது. கேவலம்ஜடயந்த்ரத்தின்சலனம்தொடங்கி படபடவென்று பூர்ண ஊக்கத்துடன் இயங்கும் நாடித் துடிப்பு மூலமாய் தமக்குத் தாமே உற்பத்தியாகும் எண்ணங்கள் யோசனைகள் வரை பல்வேறு விசித்திர இயக்கத்தையுடைய இந்த ஜீவ யந்திரத்தைப் பல சிக்கல்களுடைய அதன் அதிசய வேலைப்பாட்டுத்திறம் குன்றாமல்உழைத்து வரும்படிச் செய்தற்குக் கேவலம் நமது மனிதன் கைச் செயற்கை யந்திரத்துக்குரிய ஆற்றலை காட்டிலும் மேன்மையான ஆற்றல் அதனிடம் பொருந்தியிருத்தல் வேண்டும். ஓர் ஜீவ அங்கத்தை அதன் அங்கம்பக்கத்து நண்பர்களி

டமிருந்து அப்புறப்படுத்தி வைத்தோமானால் அதனுடைய இயற்கையான தொழிலும் ஊக்கமும் சீக்கிரத்தில் நாச முறுகின்றன. அதனைப் பூரண பிராணனுடனும் விளங்கும் ஊக்கத்துடனும் ஜீவித்திருக்கும்படி செய்தற்குப் புறத்திலிருந்து சக்தி சதா அதனுக்குள் பாய்ந்து கொண்டிருத்தல் அவசியம். ஆதலால் அஜ்ஜீவனானது சதா சர்வ காலமும் தன்னைச் சுற்றி நிற்கும் சகல விதமான பிரபஞ்ச சக்திகளுடன் கூடிக்குலாவி உறவாடிக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். உண்மை இவ்வாறாயின், முற்றிலும் என்னுடையதென நான் சொல்லிக் கொள்ளக்கூடிய வஸ்து ஒன்றாவதுளதோ? நாம் முற்றிலும் ஒருவரை பொருவர் அனுஸரித்தும், பண்டைக்காலத்து யுக்தி யோசனைகள், எண்ணங்கள், நினைவுகள், அவர்களுடைய அறிவு, வித்தை முதலியவற்றை அநுசரித்தும் நிற்பவர்களன்றோ? நான் என்னும் பிறர் அணுகுதலில்லாத சிறிய கோட்டையைக் கட்டிக்கொண்டு அதனுள்ளே அடைபட்டு நிற்கும் நிலை எவ்வளவு கஷ்டமான நிலையாகும்! என்ன பரிதாபகரமான வாழ்க்கை அத்தகைய மனிதனுடைய வாழ்க்கை! ஆகலால் நான் என்னும் தனி வீட்டில் தன்னந்தனியனாய் நிற்கும் வாழ்க்கையை விட்டுவிட்டு 'நாம்' என்னும் நல்லாணில் கூடி வாழ்ந்து அயலாருக்கு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் கொடுத்தே கிடைக்கக்கூடிய எதையும் லாபமெனக் கருதும் அந்த அஞ்ஞான நள்ளிருளை வேரோடு களைந்து எறிவோமாக! ஏனெனில் ஒருவருடனொருவர் போட்டி போட்டுப் பொருதிக் கொண்டு இருக்கும் வாழ்வைவிட ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து ஒற்றுமையும் கூட்டுறவும் ஒத்துழைப்பும் பொருந்தியவர்களாகி வாழ்தல் எவ்வளவு பயனுற்றதாகும். எத்தகைய சுகத்தைப் பயக்கக் கூடும்!

## பல்வேறு அங்கங்கள் ஒத்தியங்கும் பேருடல்

சமூகத்தாருக்கும் தேசத்தினுக்கும் பொது நன்மையைப் பயத்தற்காகத் தத்தம் பிரத்தியேகத் தொழில்களைச் செய்து அவரவர் கடமைகளை நிறைவேற்றுவதால் இயங்கும் பல மனிதர்கள் அல்லது ஜீவன்கள் சேர்ந்திருக்கும் ஓர் ராஜ்யத்துக்கு ஒப்பிடலாம் ஒரு விருக்ஷத்தின் வாழ்க்கைச் சரித்திரத்தை. விருக்ஷமானது தனது தேகத்துக்குப் புஷ்டியை ஊட்டும் உரத்தைப் பூமியினின்று பெறுகின்றது. அக்கம்பக்கத்தில் உண்டாகும் எண்ணிறந்த அதிர்ச்சிகளானவை, விருக்ஷங்களுக்கு அடிக்கடி உண்டாகும் சோம்பேறித்தனம், சுணங்கோலாதி செயலற்று நிற்கும் மாக நிலையினின்றும் அவ் விருக்ஷங்களை மீட்டு அவற்றை அதிரச்செய்து ஊக்கத்தை ஊட்டிவருகின்றன. க்ஷேத்ரத்தாலும் அதனை யநுஸரித்த சம்பந்தங்களாலும் ஏற்படும் பரமோத்தம நன்குடையாகும் ஜீவனுடைய மலர்ச்சி. எத்தனையோ ஆபத்தான இடுக்கண்கள் மரத்துக்கு ஏற்படுகின்றன; ஆனால் அவ்வித இடையூறுகளால் விருக்ஷமானது நசித்து விடுவதில்லை; இடுக்கண்களை நாசஹேதுவாகக் கொள்ளாமல் அவற்றை உற்றதுணையாக மாற்றிக்கொண்டு அவற்றின் சகாயத்தால் நூதனமான சக்திகளை யெல்லாம் பெறுகின்றன. செத்துப் போனதும் சாவதுமாகிய பயனற்ற அங்கங்களையும் அழுக்குகளையும் தொலைத்து, கால தேச வர்த்தமானங்கள் மாறமாற மாறிய நிலைக்கேற்ப அதற்கு அநுகூலமான புதிய சக்திகளை விருத்தி செய்துகொள்கின்றன.

## சீராக இணைக்கப்பட்டதொரு யந்திரம்

விருக்ஷமானது ஒன்றுக்கொன்று பொருந்துதலில்லாத பரஸ்பர சம்பந்தமில்லாத, கேவலம் நெல்லிக்காய் மூட்டையைப் போன்றதன்று, சீராக ஒன்றுடனொன்று பொருத்தமுற இணைக்கப்பட்ட ஏகீபவித்த பொருளாகும் நமது பூமண்டலத்தில் எங்கேயோ ஒதுக்கப்பட்ட கோடியிலோ மூலையிலோ ஏற்படும் (பூமி) அதிர்ச்சியானது இதர பாகங்களையும் பாதித்து அவைகளுக்குப் புதிய உருவத்தையும் அமைப்பையும் அளித்து விடுகிறது. விருக்ஷத்தின் வாழ்விலும், உள்ளே உயிருடன் இயங்கும் பற்பல ஜீவ அணுக்களுக்கு ஊக்கமூட்டும்படியான வெளிப்புறத்துள்ள தூண்டுதல் சக்திகள் யாவும் உட்செல்லுவதற்கு இயைந்த மார்க்கங்கள் இருத்தல் அவசியம். அவ்விதம் புறத்துச் சக்தி அகத்துள் நுழைந்து தூண்டுதலில்லையென்றால் அந்த ஜீவ அணுக்கள் இயங்குதலின்றி மரணமடையும். நிரம்பவும் வித்தியாசப்படும் அங்கங்களுக்கிடை பரஸ்பர பொருத்தமும் பரஸ்பரம் அடங்கி நடக்கும் குணமும் இருத்தலும் இன்றியமையாதது.

பிரதி இலையும், தழையும், காம்பும், கிளையும் ஒன்றோடொன்று நெருங்கிச் சம்பந்த முற்று நிற்பதற்குக் காரணமான நான் கண்டு பிடித்துள்ள நாடித்தொகுதி யெனும் இணைக்கும் சாதனத்தின் சகாயத்தால் தான் மேற் கூறிய சக்திகள் இயங்க இயல்கின்றன. ஒரு விருக்ஷத்தின் எந்த அங்கத்திலாவது ஏற்படக் கூடிய எவ்வித அதிர்ச்சியும் முழு விருக்ஷத்துக்கும் தெரிந்து விடுகிறது. நரம்புகள் உபயோகத்தால் ஊக்கமுற்று விருத்தியடைவதைப் பற்றியும், உபயோகப்படுத்தப் படாமையினால் நசித்து விடுவதைப் பற்றியும் மிகவும் அருமையான விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. புறத்து அதிர்ச்சிகள் எதுவும் எட்டாது வெகு ஜாக்கிரதையுடன் கண்ணாடி மூடியால் பாதுகாக்கப்பட்ட செடியானது பார்ப்பதற்குப் பெருத்து செழிப்பாகத் தோற்றினும், உண்மையில் அதனுடைய உயரிய நாடியியக்கங்கள் யாவும் பயன் படுத்தப் படாமையால் நசித்து விடுவதால் அச்செடியானது பயனற்ற வெறும் சதை வளர்ந்த ஒதிய மரத்தின் தன்மையதாகும். ஆதலால் இனி அடிமேல் அடி யென ஏற்படும் அதிர்ச்சிகளால் அச்செடியினுடைய இயற்கையான இயக்கம் எவ்வாறு படிப்படியாக விருத்தியடைந்து வருகிறது என்பதை கவனிப்பது ஸ்வாரஸ்யமான விஷயமாகிறது. இதற்கு முன் வேலையின்மையால் தமது தருமத்தை மறந்து செயலற்றுப் போன நரம்புகள் இப்போது பூரண ஊக்கம் உடையவைகளாகின்றன. மிருதுவான பஞ்சணையின் மீது படுத்திருந்து காலங் கழிப்பதால் ஆண்மை குன்றுகிறது; கஷ்ட நஷ்டங்களென்னும் அதிர்ச்சிகளின் மகிமையால் மாத்திரமே ஆண்மையும் வீரத் தன்மையும் இயலுவதாகின்றன. தூண்டப் படாத நாடி தெருநாயைப் போல் உறங்குகிறது. தூண்டுதல்கள் ஏற்பட்டு இயங்குவதால் மாத்திரம் நரம்புகளுக்குப் புத்துயிரும் புது ஊக்கமும் ஏற்படுகின்றன.

இவ்வாறாக வெகு அற்பமான ஜீவனுக்கும் பல்லாயிர சக்கரங்கள் ஒன்றைப் பற்றி யொன்று சுழன்று இயங்கும் ஒரு பெரிய அற்புத யந்திரத்தை யொத்த உயர்தர ஜீவ பரிணமத்துக்கும் இடையில் ஒரு வித இடைவெளி யில்லாத கோவை சந்தேகமற நிர்ணயமாகிறது. அதாவது வெகு தாழ்ந்த இயக்கங்களையுடைய நிலையிலிருந்து படிப்படியாய் அபிவிருத்தி யடைந்து பற்பல விசித்ர இயக்க மாறுபாடுகளெல்லாம் உண்டாகி பரிணமித்துக் கடைசியில் குறைவேதுமற்ற பரிபூர்ண நிலை அடையும் வரை படிப்படியான முன்னேற்றம் அல்லது பரிணாமமென்பது உண்மையென அறியலானோம். அற்பத்திலும் அற்பமான வஸ்துவுக்கும் நமக்கும் சம்பந்தம் இருக்கிறதே என்று நாம் அவமானப் படவேண்டாம். இந்த தத்துவத்தை மேலும் மேலும் ஆராய்வோமானால், உருவமற்ற ஜடமாயிருந்து நாம் உண்டாகியிருந்த அற்பமான [illegible]

ரூபத்தினின்று விடாது சிரமப்பட்டுச் சத்ருக்களுடன் யுத்தஞ் செய்து நமது ஆற்றல்கள் விருத்தியடைய அடைய ‘புல்லாகிப் பூடாகிப் புழுவாகிப் பறவையாகி’ யென்னசதாமேல்நோக்கி வந்து தற்போது இவ்வுயரிய மானிட நிலையை அடைந்துள்ளோம் என்ற பெருமையும் சந்தோஷமும் நமது மனதில் உதிக்கும். இம் மேற்போக்கில் முக்கியமான அம்சம் நாம் கவனிக்க வேண்டியது யாதெனின் சதா அபிவிருத்தியடைந்து வளர்ந்த வண்ணமாகவே இருக்கும் நமது நரம்புத் தொகுதிகளின் இயக்கமேயாகும். மனிதனானவன் தன் இஷ்டானுஸாரம் மனோ சக்தியால் புதிய புதிய தூண்டுதல்கள் துறைகளில் ஈடுபடுந்தோறும் மேற்போக்கடைந்து உயரிய பரிணாமக் கிரமத்தில் படிப்படியாக மேற்சென்றவண்ணமாயிருக்கிறான்.

வஸ்துக்களினிடம் ஏற்படும் அதிர்ச்சி, ஜீவசக்து சம்பூர்ணமாய்ப் பொருந்தி உயிர் துடிதுடிப்பு, வளர்ச்சியின் ஓட்டம், நரம்புகள் வழிசெல்லும் தூண்டுதல்கள், அதனாலுண்டாகும் உணர்ச்சி— இவைகளெல்லாம் தம்முள் எவ்வளவு தூரம் பேதப் பட்டனவாயிருக்கின்றன! இருப்பினும் அனைத்தும் சேர்ந்து எவ்வாறு ஒரே இறுதியை உத்தேசித்து ஒத்துழைக்கும் தன்மையன! நரம்புகளுக்கு ஏற்படும் தூண்டுதல் அதிர்ச்சி, ஊக்கம் முதலியன கேவலம் அதன் வழியாய்ச் செல்லுதலுடன் மாத்திரம் நில்லாது, கண்ணாடியில் பிரதிபலிக்கும் பிம்பத்தை யொப்ப வாழ்வின் வேறொரு பகுதியில் பிரதிபலித்து நுகர்ச்சி, அதனால் பாதிக்கப்படுதல், எண்ணம், யோசனை, ஆத்திரம் முதலிய குணங்களாய் மாறுகின்றன வென்பது அத்தியாச்சரியமான உண்மையன்றோ! இவைகள் தம்முள், பஞ்சபௌதிக சரீரமா, அல்லது அதினின்றும் வேறுபட்டு அதை ஆசிரயிக்காது நிற்கும் பிம்பமா எது உண்மையானது? இவ்விரண்டினுள் எது நாசரஹிதமானது? அதாவது அழிதலில்லாதது எது மரணத்துக்கு உட்படாது அதற்கு அதீதமாய் நிற்பது!

வேதங்கள் காலத்தில்தான் போலும்; ‘உனக்கு எவ்வித ஐசுவரியம் வேண்டினும் தடையின்றிக் கொடுக்கப்படும். உன் மனதுக்கிசைந்த ஐசுவர்யத்தை நீ தாராளமாய்க் கேட்கலாம்’ என்று ஒரு ஸ்திரீயைக் கேட்டபோது அவள் ஐசுவரியங் கிடைப்பின் நித்யத்வம் அல்லது மரணமின்மை ஏற்படுமா எனக் கேட்டனள். பண்டைக் காலத்தில் பல ராஜ்யங்கள் ஏற்பட்டு ஏக சக்ராதிபத்தியம் நடாத்தின. ஆனால் அவ்விதம் இம்மண்ணுலக ராஜாங்க அதிகாரத்தைச் செலுத்திக் கோலோச்சிய அரும்பெரும் அரச வம்சங்களுடைய தற்போது காணப்படும் சின்னங்கள் மண்ணில் புதைந்து கிடக்கும் சில பாழுஞ்சுவர்களும் இடிந்த கட்டடங்களுமே யாவன. ஆனால் பூத பௌதிகத்தாலாய வஸ்துக்களிடம் அவதாரம் செய்தும் அது நசிப்பதாகத் தோன்றும்போது தான் அவ்விதம் தோற்றாது அது மாறுதலடையும்போது தான் மாறுதலடையாது இருக்கும் ஒரு பொருள் உண்டு. அதி வேகமாய்க் கழியும் பல்லாயிரம் தலைமுறைகளாக இறந்துவரும் யுக்தி, யோசனை, எண்ணமாதி மனோதருமச்சுடர் தான் அவ்வித சாசுவதப் பொருள். பூத பௌதிகத்தால் இயைந்தபொருளன்று ஒருவனுக்கு உண்டான உடைமைகளிலன்று நாம் நித்தியத்துவத்தைக் காண்பது. அவன் மனதினுக்கும் எண்ணங்களிலும் அவன் மனதில் கொண்டு போற்றும் லக்ஷ்யங்களிலும் தான் நித்யத்துவத்தின் அதாவது மரணமற்ற நிலையின் வித்தைக் காணலாகும். இம்மண்ணுலக உடைமைகளைப் பெருக்கிக் கொள்வதாலன்று ஸர்வஜன ஸஹோதரப்பாடு என்னும் ராஜ்யம் கிடைக்கலாவது. சதா அல்லும் பகலும் சோம்பாது உழைத்தல், என்றால் பொது நன்மைக்காக உழைத்தல், ஞானத்தையும், உயரிய வித்தையையும், உத்தமமான செல்வங்களையும் லோபதனமில்லாமல் தாராளமாய் வாரி இறைத்தல்போன்ற செய்கைகளால் மாத்திரமே “ஸர்வேஜநாஸ் ஸுகினோ பவந்து” என்ற நமது பிரார்த்தனை ஈடேறும்.



# குரு கோவிந்த சிங்கன்:

குருவினுடைய சம்ஸ்காரத்தைப் பெற்று, அவன் கொடுத்த அமிருதபானத்தைச் சாப்பிட்டு, அவனுடைய உபதேசத்தையும் கேட்டதும் தயாலால் முதலிய ஐவரும் புதியதோர் ஜன்மம் எடுத்து வந்தவர்கள் போலாகிவிட்டார்கள். அன்று ஆபுபர்வதத்தில்நடந்தபிரம்மாண்டமான யாகத்திற்குப் பிறகு எவ்வாறு சாமானிய ஜனங்கள் யாககுண்டத்தின் சன்னிதானத்தில் புதிய க்ஷாத்திர வேகத்தைப்பெற்று ராஜபுத்திரர் என்கிறபெயருக்கு அருகமாக விளங்கினார்களோ அவ்வாறே இவ் ஐந்து பிரதம சிஷியர்களும் க்ஷத்திரியர்கள் என்று அழைக்கப் படவும் சிங்கர்கள் என்ற பெயரைத் தரிக்கவும் தக்கவர்கள் என்று சொல்லும்படி புதியதோர் ஒளியுடன் விளங்கினார்கள். அவர்களுடைய தேஜஸைப் பார்க்கப்பார்க்க குருவினுடைய இருதயத்தில் ஆனந்தம் பெருகிக்கொண்டே இருந்தது. தான் நினைத்த காரியத்தை யெல்லாம் நிறைவேற்றிவிட முடியுமென்கிற தைரியம் அவனுக்கு உண்டாயிற்று. அடுத்த நாள் ஜனங்கள் அவனுடைய ஆணைப்படி அங்கு வந்து கூடினார்கள். கூடிய சிஷியர்களுக்குக் குரு தானே உபதேசம் செய்யாமல் தன்னுடைய பிரதம சிஷியர்களை உபதேசம் செய்யும்படி ஆணையிட்டான். குரு அவர்கள் மீது காட்டிய நம்பிக்கையும் அவர்களுக்குக் கொடுத்த சுதந்திரமும் அவர்களுக்கு முன்னிலும் அதிகமான வீரியத்தையும் பலத்தையும் ஒளியையும் தந்துவிட்டன. ஆனால் சிறிதேனும் அகங்காரமின்றி, அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு தர்மத்தைப் பற்றியும், தியாகத்தைப்பற்றியும், ஆத்மாவைப் பற்றியும், ஈசுவரனைப்பற்றியும், பக்தியைப் பற்றியும், ஞானத்தைப் பற்றியும் சாங்கோபாங்கமாக உபதேசம் செய்துவிட்டு, அழிந்து போய்க் கொண்டு வருகிற சனாதன தர்மத்தை மறுபடியும் சம்ஸ்தாபனம் செய்வதற்காகத் தோன்றியுள்ள குரு கோவிந்த சிங்கனுடைய ஆணைக்கு இரண்டு சொல்லாமல் அவனது ஆணைப்படியே நடந்து வந்து மொகலாய அரசாட்சியை வீழ்த்தி வெற்றி பெறுவோம் என்று பேசி முடித்தார்கள். பிரசங்கம் முடிந்ததும் ஒருவன் எழுந்திருந்து, “ஹிந்துக்களாவது மொகலாயரை வெல்லுவதாவது? அது எங்கே நடக்கப் போகிறது? மொகலாயர் வல்லூறைப் போல வன்மை படைத்தவர்களாயிருக்கிறார்கள். ஆயிரம் குருவிகள் சேர்ந்தால் தான் ஒரு வல்லூறை அடித்துவிட முடியுமா?” என்று கூறினான். ஹிந்து ஜாதியில் தூங்கிக் கொண்டிருந்த குண்டலினி சக்தி இருக்கிற இடத்தைக் கண்டு பிடித்து, அதை எழுப்பிவிடும் தந்திரத்தையும் சோதித்தறிந்துகொண்டு முந்தின நாள்தான் முதல் வெற்றியை—அதிலும் அசாமானியமான ஜயத்தை—பெற்றிருந்த குருவின் மனதில் இவ்வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன. ஆகையால் அவன் உடனே

எழுந்து சிஷ்யர்களைப் பார்த்துப் பின்வருமாறு பேசலுற்றான்;

"ஹிந்து ஜாதியைக் குருவிகளுக்குச் சாமியமாகச் சொல்லுகிறாய், மொகலாயரை வல்லூறுகளுக்கு ஒப்பிடுகிறாய், இந்தக் குருவிகளே வல்லூறுகளை அடித்து வீழ்த்தி வெல்லும்படி செய்யாமற் போனேனேயானால் என் பெயரை மாற்றி வைத்துக்கொண்டு விடுகிறேன்! மகா சக்தியின் அருள் வந்து விட்டது: சிஷ்யாது வீரவாளில் அவள் சான்னியத்தியமாக நிற்பதை நான் காண்கிறேன். ஜபசண்டி! எனது காலஸா வெல்லப் போகிறது—அதன் முன்னே யாரும் நிற்க முடியாது! வாருங்கள், காலஸாவின் முதல் கோஷ்டியான என் அருமைப் புதல்வர்களே: உங்கள் தோள் மீது அகால புருஷன் தனது சக்தி வெள்ளத்தை வர்ஷிக்கிறான். உங்கள் எதிரே உருவின வாட்கள் ஆயிரம் ஒங்கப்பட்டு வந்தாலும் உங்கள் நெஞ்சமானது கலங்காது நின்று அவைகளை எதிர்த்துத் தாக்கும் பலத்தை உங்களுக்குக் கொடுக்கும்: ஸத் ஸ்ரீ அகால் என்று சிங்கநாதம் செய்து கொண்டு நீங்கள் சத்துருக்களைத் தாக்கிச் செல்லும்போது சத்துருக்களின் தளமானது கப்பலின் முகப்புக்கு இடங் கொடுத்துக்கொண்டு கிழிந்து போகும் கடல் நீரைப் போல, உங்கள் வேகத்தைத் தாங்க மாட்டாமல் பின்னிடைந்து சின்னபின்னமாய் விடும். சண்ட மாருத வேகத்தோடு செல்லுகிற நீங்கள் வெற்றி யில்லாமல் திரும்பவே கூடாது. வெற்றி யில்லையேல் மரணம்! அந்தப் பிரகாரம் போர் முனையில் மடிகிறவனே அகால புருஷனுடைய கிருபைக்குப் பூரணமான பாத்திரன். அவனே மனிதனாய்ப் பிறந்ததற்காகத்தான் செய்ய வேண்டிய கடமைகளைப் பூரணமாய்ச் செய்துவிட்டு அகால புருஷனுடைய சன்னிதானத்துக்குச் சீக்கிரம் சென்று அங்கேயுள்ள நிரதிசயமான ஆனந்தத்தை அனுபவிக்கிறவனாகிறான். பௌராணிக மதத்தை நம்புகிற ஹிந்துக்கள் அப்ஸரஸ்களின் ஆலிங்கனத்தை நினைத்துப் போர் செய்கிறார்கள், முஸ்லீம்கள் ஹௌரிகளின் ஆலிங்கனத்தை மனதிலெண்ணி வீரவெறி கொள்ளுகிறார்கள். ஆனால் இதெல்லாம் பொய்க் கதைகள். நிசமாகவே இருந்தாலும், சரீரம் போன பிறகும் காமத்தை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை வைத்துக் கொள்ளுவது எவ்வளவு இழிவான மனப்பான்மையைக் காட்டுகிறது? அகால புருஷனுடைய சன்னிதானத்தை உடனே சேரும் பாக்கியத்தை எதிர் பார்த்து, இவ் வுலகத்துக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, சத்துருக்களின் வாட்களை லக்ஷியம் செய்யாமல் மேற் சென்று தாக்குவது எவ்வளவு உயர்ந்த தன்மை! அந்தத் தன்மை உங்களுக்குச் சித்தி காட்டும். காலஸாவுக்குள்ளே உங்களை அகாலியர் என்கிற தனி கோஷ்டியாக அமைக்கிறேன். உங்கள் தலையின் மீது தலைப்பாகையினுள்ளே விஷ்ணு சக்கரத்தைத் தரியுங்கள்: அந்தச் சுதர்சனத்தின் சேர்க்கை உங்களுக்கு அதன் அக்னி ஜ்வாலை போன்ற தன்மையைத் தரும். உங்கள் நீல உடையும் ஆஜானு பாகுவான உடலும் நெருப்புப் போன்ற விழியையும், தாடியினாலும் பிறவற்றாலும் வாளரி போன்றிருக்கும் தோற்றத்தையும் கண்ட மாத்திரத்திலேயே உங்கள் சத்துருக்கள் கதி கலங்கிப் போய்விடுவார்கள்.

"எல்லோரும் அகாலியராயிருந்தால் நான் பரமானந்த முறுவேன். ஆனால் பிற சிஷ்யராகிய நீங்கள் அகாலியர் போலச் சர்வ தியாகிகளாக இராமற் போனாலும் அவர்களுக்கு அடுத்தபடியிலே இருக்கப் போகிறீர்கள்: உங்கள் தெய்வ பக்தியும், மனச் செம்மையும் உங்கள் சரீர அமைப்பையே மாற்றப் போகிறது: உங்களிடம் வீரலக்ஷ்மியும் விஜய லக்ஷ்மியும் பிரசன்னமாக இருக்கப் போகிறார்கள். அகால புருஷனுடைய கிருபை உங்கள் மீது அமோகமாகப் பெருகப் போகிறது. உங்களுடைய வீரியத்தினால் பாரத தேசத்தின் சத்துருக்களை வென்று ஸ்வராஜ்ஜியத்தை ஸ்தாபித்து ஹரி பக்தியும் அறவாழ்க்கையும் நாட்டில் பரவும்படி செய்யுங்கள். அப்பொழுதுதான் என் பிதா தேகபஹதூரின் ஆத்மா திருப்தி அடையும். அப்பொழுதுதான் பாரத தேசத்தின் அழிந்து போன தேசு மறுபடியும் ஒளிரும். அப்பொழுதுதான் உலகில் சத்திய யுகம் மறுபடியும் பிறந்து ஹிந்துக்களும் முஸல்மான்களும் பிறரும் சகோதரர் போல அன்னியோன்யமாய் வாழத் துவக்குவீர்கள்!"

குரு பேசின இவ் வார்த்தைகள் அங்குக் கூடியிருந்த எல்லோருடைய மனதிலும் பௌருஷத்தையும் சக்தியையும் புதிதாக வார்த்து விட்டன. அவர்களுடைய தோள்கள் வீங்க ஆரம்பித்தன: இப்பேர்ப்பட்ட பக்தனும் வீரனும் தங்களுக்குக் குருவாகவும் சேனாபதியாகவும் ஏற்பட்டுவிட்ட போது தங்களுக்கு அசாத்தியமான காரியங்கள் ஒன்றுமில்லை என்று அவர்கள் எண்ணத் தலைப்பட்டார்கள். குருவும் அவர்களுக்குள் ஓர் தார்மிகமான கட்டு ஏற்படுவதற்காக அவர்களுக்குச் சில சம்பிரதாயங்களையும் சின்னங்களையும் வகுத்து வைத்தான். அவைகளுள் பிரதானமானவை பின்வருமாறு:

ஒவ்வொரு சிஷ்யனும் தலை மயிரைப் பிறந்த மேனிக்கே வளர்த்து வர வேண்டியது. தலைமயிர் வளர்ப்பதால் அதைச் சிக்குப் பிடியாமல் வைப்பதற்காகத் தலையிலேயே ஓர் சீப்பைத் தரிக்க வேண்டியது. கச்சம் அதாவது உள்ளே போடும் காற் சட்டை தரிக்கவேண்டியது. பாரத பூமியைக் காக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று காட்டுவதற்குக் கையில் ஓர் இரும்பு வளை அணியவேண்டியது. எல்லாவற்றிற்கும் மேலே, ஓர் வாள் எப்பொழுதும் தரிக்க வேண்டியது. இவற்றின் பெயர்களெல்லாம் ககரத்தில் துவங்குவதால் இவைகளைச் சிஷ்யர் பஞ்ச ககாரங்கள் என்று குறிப்பிடுவது வழக்கம்.* குழந்தைக்கு ஏழு வயது ஆன பிறகு அவனுக்கு ஐந்து சிஷ்யர் சேர்ந்து அவர்களுடைய கிரந்தத்தினின்று சில மந்திரங்களைச் சொல்லித் தீர்த்தப் புரோக்ஷணை செய்யவேண்டும். இதுவே அவர்களுடைய உபநயனச் சடங்கு. இந்தச் சடங்கு ஆன பிறகு அவன் மேற் சொல்லிய ககர வர்க்கம் ஐந்தையும் மரண பரியந்தம் அணிய வேண்டியது. சிஷ்யர் விக்கிரகங்களை ஆராதியாமல் நாம ரூபங்களுக்கு அதீதமாக உள்ள அகால புருஷனையே ஆராதிக்க வேண்டியது. நானகன் முதலிய பத்து குருக்களிடமும் பரம பக்தி செலுத்தி அர்ஜ்ஜுன குரு தொகுத்து வைத்த ஆதி கிரந்தத்தைப் பயபக்தியோடு படித்து வந்து அதில் கூறிய ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் அனுஷ்டிக்க வேண்டியது. சாத்தியமாயின போது அமிருதசரஸ் நகரத்திலுள்ள ஸ்வர்ணாலயத்துக்குத் தீர்த்த யாத்திரை சென்று அங்குள்ள அமிருதசரஸ் என்கிற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கொள்ள வேண்டியது.

இந்தச் சம்பிரதாயமான விதிகளும், லௌகிக வஸ்துக்களை விலக்கிச் சுசியும் தர்மமுமான வாழ்க்கைக்கு வேண்டிக் குருவால் நியமிக்கப்பட்ட பொது ஆசாரங்களும், எல்லாவற்றிற்கும் மேலே குருவினிடத்தில் அவர்கள் வைத்த பரம பக்தியும் சிஷ்யரை ஒற்றுமையாயுள்ள ஒரே குடும்பம் போலச் செய்து விட்டன.

இந்த வஜ்ராயுதம் போன்ற ஆயுதத்தை வார்த்து, அதை நாம் மேலே சொல்லியபடி காரியங்களுக்கும் இட்ட பிறகு குரு கோவிந்த சிங்கன் ஔரங்கஜேபின் தளகர்த்தர்களோடு பகிரங்கமாய்ப் போர் தொடங்க ஆரம்பித்துவிட்டான்.

* கேசம், கங்கம், கச்சம், கடா (இரும்பு வளை), கிருபாணம் (வாள்).

காட்டில் சஞ்சரித்த இருபது வருஷங்களில் கோவிந்தன் போர் முறைகளைப் பற்றித் தீர்க்காலோசனை செய்து வைத்ததோடு முற்காலத்தில் போர் செய்த வீரரின் தந்திரங்களையும் ஆராய்ச்சி செய்து அறிந்துகொண் டிருந்தான். எதிரிகளைத் தாக்குவதா யிருந்தாலும், எதிரிகளுக்குத் தாத்காலிகமாய்ப் பின்னடைய வேண்டியிருந்தாலும் கோட்டைகளும் தூர்க்கங்களும் அவசியம் என்பதை அவன் நன்கு அறிந்துகொண்டு ஸத்லேஜுக்கும் யமுனைக்கும் இடையே உள்ள குன்றுகளில் இரண்டு மூன்று தூர்க்கங்கள் கட்டினான். தவிர கியார்தா பள்ளத்தாக்கில் நாஹன் என்னும் நகருக் கருகிலுள்ள பௌன்தா என்ற இடத்தில் ஓர் படை வீடு தயாரித்து வைத்துக் கொண்டு, தன் தகப்பனை தேக பஹதூர் கட்டி வைத்த ஆனந்தபூர் மாகோவால் என்கிற கோட்டையையும் சம்கௌடம் என்கிற கோட்டையையும் புதுப்பித்து வைத்துக்கொண்டான்.

இக் கோட்டைகளின் மீது சார்ந்து நின்றுகொண்டு குரு கோவிந்த சிங்கன் அத்தியாசாரங்கள் புரிந்து வந்த மொகலாயர்களையும் அவர்களுக்கு அநுகூலமாக இருந்து ஜனங்களைஇம்சித்து வந்த சிற்றரசர்களையும் அங்கங்கே தாக்கி வந்தான். இப்படி இவன் தாக்கினவர்களுக்குள் முதலவன் நாஹன் நாட்டுச் சிற்றரசன். இவன் குரு கோவிந்தனுக்கு வெகு நாட்களாகச் சினேகிதனாக இருந்தவன். ஆனால் குருவானவன் மொகலாயர்களுக்கு விரோதமாகத் துவஜம் கட்டியதும், நாஹன் அரசன் தன் அரசுக்கு ஹானி வந்துவிடப் போகிறது என்று பயந்து மொகலாயர் கக்ஷியில் சேர்ந்துகொண்டு குருவை எதிர்க்கத் தலைப்பட்டான். அவனுக்கு ஹிந்தூர் அரசனும் துணைவனாகச் சேர்ந்தான். இவ் இரு அரசர்களும் குருவைத் தாக்கி வந்ததோடு, குருவினிடம் சேவகம் செய்து வந்த பட்டாணிகளை அவனுக்கு விரோதமாகக் கிளம்பும்படி தூண்டியும் விட்டார்கள். பல சிறு போர்கள் நடந்தன. கடைசியாக இரு கக்ஷிக்காரரும் வியூகம் வகுத்துக்கொண்டு எதிரெதிராய்நின்று போர்தொடங்கினார்கள். எதிரிகள் ராஜபுத்திரர்கள்; தலைமுறை தலைமுறையாய்ப் போருக்கென்றே வளர்ந்தவர்கள்; போருக்கென்றே ஜீவனை வைத்துக்கொண்டிருப்பவர்கள். சிஷ்யர்களோ சாதாரணமாகப் பயிரிடுபவர்கள். அவர்களிற் பெரும்பாலவர் ஆயுதத்தைத் தொட்டு வெகு நாட்களாகாதவர். சாமான்யமாகப் பார்த்தால் குருவின் சைனியம் நாஹன் சைனியத்திற்கெதிரே நின்று வெகு நேரம் போர் புரிதல் சாத்தியமில்லை. நாஹன் அரசனும் அவன் துணைகளும் அவ்வாறேதான் நினைத்தார்கள். ஆனால் நபோலியன் சொல்லுகிறது போல ஆள்பலம் கால்தான் ஆத்ம பலம் முக்கால் பங்காகும். ஆகையால் சுதந்திர தாகமும், தெய்வ பக்தியும், தங்கள் குருவும் தலைவனுமான கோவிந்தனுடைய சாமர்த்தியத்திலும் சக்தியிலும் நம்பிக்கையும் உள்ள சிஷ்யர்கள் அஞ்சா நெஞ்சத்தோடு எதிரிகளைத் தாக்கினார்கள். போர் வெகு உக்கிரமாக நடந்தது. சிஷியர்களுடைய ஆவேசமும் எதிரிகளுடைய பலமும் ஒன்றுக்கொண்டு தோலவே தோலா என்று சொல்லும்படி யிருந்தது. ஆனால் குரு கையிலே பரசுவை எடுத்துக்கொண்டு மேற் செல்லுமிடங்களிலெல்லாம் நாஹனுடைய போர் முனை சிதைக்கப்பட்டுப் போகும். அவனுடைய பயங்கரமான தோற்றத்தையும் இரண்டு பலிஷ்டர்கள் சேர்ந்தும் தூக்க முடியாத அக் கோடரியைச் சுழற்றும் லாகவத்தையும் கண்டு சத்துருக்கள் ஒரு பக்கம் நடு நடுங்கிப் பின் வாங்கினார்கள். இன்னொரு பக்கம் வியந்து கொண்டு அப்படியே நின்றுவிட்டார்கள். ஆனால் நாளாகடம் என்ற நாட்டின் அரசனை ஹரிசந்திரன் என்பான், தன்னுடைய சௌரியத்தையும் பலத்தையும் காட்டிப் புகழ் சம்பாதிப்பதற்கு இதுவே சமய



மென்று கொதித்தெழும் சிங்கத்தைப் போல மேல் வந்துகொண்டிருக்கும் குருவினுக்கெதிரே வந்து போர் கொடுக்கத் தலைப்பட்டான். ஹரிசந்திரன் உரு வயது வாலிபன்; ஆஜானுபாஹு; அவன் தோற்றம் மலையை ஒத்திருந்தது. குருவின் பராக்கிரமமாகிற வெள்ளம் இந்த அணையைக் கடந்து இனிமேல் செல்லாது என்று தோன்றியது. ஹரிசந்திரன் பீமசேனனுடைய கதைதானோ என்று ஐயத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்த தன்னுடைய கதாயுதத்தை எடுத்துக்கொண்டு குருவின் வழியை மறைத்தான். இரண்டு பக்கத்திலுமுள்ள வீரர்கள் இவர்கள் யுத்தத்தைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையினால் தூண்டப்பட்டு அப்படியே ஸ்தம்பாகாரமாய் நின்றுவிட்டார்கள். குருவும் பலவானான எதிரி கிடைத்தது பற்றிச் சந்தோஷம் கொண்டு எதிரியைத் தாக்கினான்.] இரண்டு பேரும் சரி சமமாக வெகு நேரம் போர்செய்தார்கள். குருவினுடைய கோடரி ஹரிசந்திரனுடைய மார்பை இரண்டு துண்டாக வெட்டி விடும்போல விழும். ஆனால் ஹரிசந்திரனுடைய கதாயுதம் வெகு கணக்காக வந்து கோடரியின் வாயைத் தேக்கி ஒதுக்கிவிடும். அடுத்த நிமிஷம் ஹரிசந்திரனுடைய கதை குருவினுடைய சிரசை நூறு சுக்காக உடைத்துவிடும்போல வஜ்ராயுத வேகத்தோடு இறங்கும். ஆனால் குருவின் கோடரிக் காம்பு அந்தக் கதையின் வேகமெல்லாம் பறந்தோடிப் போம்படி செய்துவிடும். இவ்வாறு வெகு நேரம் போர் நடந்தது. ஒவ்வொருவனும் இந்த விசை சத்துரு இறந்தான் என்று பல தடவைகள் நினைத்துப் பல தடவைகள் ஏமாந்து போய் விட்டார்கள். ஆனால் மத்தகஜம் போன்ற சரீரத்தையுடைய ஹரிசந்திரன் காலக்கிரமத்தில் சளைக்கத் தலைப்பட்டான். குரு கோவிந்த சிங்கனோ, போர் ஆரம்பித்த காலத்தில் இருந்த தெளிவுடனும் சாவதானத்துடனுமே இருந்து தாக்கினான். ஆகவே ஹரிசந்திரனை அவன் அடியடியாய்ப் பின்னிடையச் செய்து கடைசியாக அவனைத் தன் பரசுவினால் வெட்டி வீழ்த்தியும் விட்டான். நாஹனுடைய சைனியம் இந்தத் தனிப்போரின் விளைவைக் கண்டு புறங்காட்டியோட ஆரம்பித்தது. ஆனால் அதே சமயத்தில் குருவினுடைய சைனியத்தில் உள்ள பட்டாணியர் சமயம்பார்த்துக் கலகஞ்செய்ய ஆரம்பித்தனர். எதிரியை நோக்கிச் செல்ல வேண்டிய வேகம் தடைப்பட்டது. சிஷியரின் பலம் கலகம் செய்த பட்டாணியரை அடக்குவதில் செலவாக வேண்டியதாகிவிட்டது. பட்டாணியர் அடக்கப்பட்டார்கள். ஆனால் சத்துருக்கள் ஓடி விட்டனர்.

சத்துருக்கள் ஓடி விட்டாலும் முறிபடவில்லை. வீரியத்தில் சிஷியர் அவர்களுக்கு இணையாக இருந்தாலும் ஆள் தொகையில் நாஹன் கூட்டத்தாருக்கு மிகவும் தாழ்ந்தவர்களா யிருந்தார்கள். ஆகையால் குரு அவ்விடத்தை விட்டுச் சத்லெஜ் நதிக்கரை யோரத்துக்குப் பின்வாங்கிக் கொண்டு வந்து ஆனந்தபூர் கோட்டையை அடைந்து அதை யுத்த சன்னத்தமாக்கும் காரியத்தில் இறங்கினான். அவன் நாகன் அரசனை வென்று ஹரிசந்திரனைத் தனிப்போரில் கொன்ற செய்தி அவனுக்கு முன்னாகவே அப் பிரதேசத்துக்கு எட்டி அவனுடைய கீர்த்தியைப் பரப்பியிருந்தது. ஆகவே கஹலூர் அரசனான பீமசந்திரன் என்பான் மொகலாயருக்கு விரோதமாகக் குருவின் துணையை நாடினான். பல மலைநாட்டரசர் மொகலாயருக்குத்துணையாகவும்கஹலூருக்கு விரோதமாகவும் துவஜம் கட்டினார்கள். ஆனால் சிஷியர்களின் வீரமும் பீம சிங்கனின் சௌரியமும் ஏகாதிபத்திய சைனியத்தை முறியடித்து விட்டன.

இரண்டு முறை முகலாய சைனியத்தைக் கோவிந்தன் தோற்க அடித்துவிட்டான் என்று கண்டதும் ஏகாதிபத்திய அதிகாரிகள் குரு

வைத் தாக்கி அழித்து விடுவதற்காக ஒரு பெரிய சைனியத்தைத் தயாரித்து அனுப்பினார்கள். குருவினுடைய தன்மையையும், அவன் ஏற்படுத்தி வைத்த புதிய பத்ததிகளையும் பற்றிக் கேள்வியுற்றதும் இவன் சிவாஜியை விடப் பெரிய சத்துருவாவன் என்று ஔரங்கஜேபின் கூர்மையான அறிவுக்குப்பட்டது. ஆகையால் அவன் சாமானியமான நாயகர் சென்றால் போதாது என்றும், லாகூர் ஸுபேதாரும் ஸர்ஹிந்து ஸுபேதாரும் பெரிய சைனியத்தோடு சென்று குருவை நசுக்கி விடவேண்டும் என்றும், அவசியமானால் அவர்கள் காபூலுக்குச் சீட்டனுப்பித் தன் மகன் பஹதூர் ஷாவையே துணைக்கு அழைத்துக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவு செய்தான். இரண்டு ஸுபேதார்களும்கோவிந்தஸிங்கனைப்பெரியபடைகளுடன் தாக்கினார்கள். அவனும் திறந்த வெளியில் பல இடங்களில் போர் செய்து பார்த்து, அவர்களுடைய பெருஞ்சைனியத்தோடு மேலே போர் நடத்த முடியாமல் வெளியிலுள்ள சிஷியர்களுக்கு ஸ்ரீ முகம் அனுப்பிச் சீக்கிரம் வந்து சத்துருக்களைத் தாக்குங்கள் என்று ஆஞ்ஞாபித்துவிட்டு, தன்னோடிருந்த சைனியத்துடன் ஆனந்தபூர் கோட்டைக்குள் பிரவேசித்துக்கொண்டான். சத்துருக்கள் ஆனந்தபூரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

சிஷியர் முதலில் வெகு உற்சாகத்துடனிருந்தார்கள். எதிரிகள் அஜாக்கிரதையாக இருக்கையில் வெளியேறி அவர்களைச் சாடிவிட்டு, அவர்கள் தெரிந்துகொண்டு ஒன்று கூடித் தங்களைத் தாக்குமுன் கோட்டைக்குள் வந்து புகுந்து விடுவார்கள். எதிரிகள் கோட்டையைத் தாக்க யத்தனிக்கும்போது இவர்களில் ஓர் சாரார் கோட்டை மதில் மீதிருந்து பீரங்கிப் பிரயோகம் செய்வார்கள். இன்னொரு சாரார் பாணத்தால் அவர்களை அடித்துக் கொண்டு, நெருங்கிச் சென்றும் தாக்குவார்கள். இத்தகைய பகிர்யானங்களில்* சிஷியர்களே விடாமல் வென்று வந்தாலும், ஒவ்வொரு பகிர்யானத்திலும் பத்து, இருபது என்று சிஷியர் மடிந்தும் எதிரி கையில் பிடி பட்டும் வந்தார்கள். உள்ளேயும் ஆகாரம் குறைந்து போயிற்று. சத்துருவை ஓட்டி ஆனந்தபூரை விடுவிப்பர் என்று எதிர்பார்த்திருந்த வெளியூர்ச் சிஷிய சைனியத்தின் நாம நிஷானங்கூட ஒன்றும் காணோம். குரு அங்கங்கே சென்று கலங்கத் தொடங்கும் சிஷியர் கூட்டத்துக்குத் தைரிய மூட்டி வந்தான். இருப்பினும், மனதுக்கு இஷ்டந்தான், ஆனால் சதைக்குத் திராணியில்லை என்று பெரியார் சொல்லியது போல, முற்றுகை யிடப் பட்ட சிஷியர் மனமுடையத் தலைப்பட்டார்கள். குருவின் வார்த்தைகளுக்குகூட அவர்களுக்கு உற்சாகம் தரமுடியவில்லை, முழுகுகிற கப்பலை விட்டு நீங்கியோடும் எலிகளைப்போல ஒருவர் இருவராகப் பலர் கோட்டையை விட்டுச் சொல்லாமல் ஓடி விட்டார்கள். அபாய நிலைமையில் தோழர்களையும் சகதர்மிகளையும் † விட்டு விட்டு ஓடிய சிஷியர்களை, இம்மையிலும் மறுமையிலும் அவர்கள் கதியற்றுப் போகக்கடவது என்று குரு பயங்கரமாகச் சபித்தான். அச் சாபம் தங்கள் மீது சாராமற் காத்துக்கொள்ள வேண்டும் என்று பயந்துகொண்டு அனேக சிஷியர் ஓடாமல் நின்றார்கள். ஆனால் ஒவ்வொரு நாள் செல்லுவதும் அம் முற்றுகை யிடப்பட்ட கோட்டையில் ஓர் யுகம் போல இருந்தது. ஆகார மில்லாமல், தூக்கமில்லாமல், கால் வயிறு ரொட்டிக்குக் கதறியழும் குழந்தைகளின் கஷ்டங்களைக் கண்ணால் பார்த்துக்கொண்டு, போர் செய்யும் ஆற்றல் எத்தனைபேருக்குஇருக்கும்? ஆகவே குருவின் சாபத்துக்குக்கூட அவர்களிற் பெரும் பாலோரைத்

* முற்றுகை யிடப்பட்டவர் கோட்டைக்குள் நின்று வெளியேறிச் சத்துருக்களைத் தாக்குதல்.

† தங்கள் மதத்தினர்.



தப்பியோடுவதினின்று நிறுத்தச் சக்தியற்றுப் போய்விட்டது. இரகசியம் பேசிக்கொண்டு பலர் ஓட யத்தனித்துக் கொண்டிருக்கையில் குருவுக்குச் செய்தி எட்டிவிட்டது. அவன் அவர்களை உடனே வரவழைத்து, "உங்களைச் சிஷியர் என்று நினைத்திருந்தேன்: சிஷியர்கள் வெல்வார்கள், அல்லது இறப்பார்கள்; குருவின் அனுமதி கேட்காமல் குருவையும் சேனாபதியையும் காட்டிக் கொடுத்துவிட்டு, சிஷியர் ஓட மாட்டார்கள்: ஆகையால் நீங்கள் சிஷியர் அல்லீர்! உங்கள் கேசத்தையும் இரும்பு வளையையும் எடுத்துவிடுங்கள்: வாளை யணியும் யோக்கியதை உங்களுக்கு இல்லை: ஆகையால் உங்களைச் சிஷியர் கூட்டத்தினின்று பிரஷ்டம் செய்துவிட்டேன்: யாரடா அங்கே? இவர்களுடைய தாடியையும் கேசத்தையும் முண்டித்துவிட்டு இவர்களை வெளியே ஓட்டிவிடுங்கள்!" என்று வெகுண்டான். குருவின் ஆவேசத்தைக் கண்டு நடுநடுங்கி அவர்களிற் பெரும்பாலோர் அங்கேயே தங்க விரும்பினார்கள். ஆனால் குரு இத் தகைய கோழைகள் கோட்டைக்குள் இருக்கவே கூடாது என்று கண்டிப்பாய்க் கூறி அவர்களுக்கு முண்டனம் செய்வித்து அவர்களை வெளியே அனுப்பிவிட்டான்.

கோட்டையில் கோவிந்தனையும் அவன் குடும்பத்தையும் தவிர நாற்பதே நாற்பது சிஷியர் தாமிருந்தார்கள். ஆனால் அவர்கள் எதற்கும் கலங்காதவர்கள். கால்ஸாவின் மானத்தைத் தங்கள் உயிருக்கும் மேலாகப் பாவித்தவர்கள். கோட்டையின் நான்கு மதிற் புறங்களிலும் பீரங்கிகளை வைத்து அவர்களிற் சிலர் ஒவ்வொன்றையாக வாயுவேக மனோவேகத்துடன் சுடுவதையும், மதில்மீது நின்றுகொண்டு அம்புகளைச் சராமாரியாகப் பெய்வதையும் கண்டு சத்துருக்கள் கோட்டைக்குள் தங்களை அறியாமல் குருவுக்குப் பெரிய நிலைக் கூட்டம் சேர்ந்து விட்டது என்று நினைத்துவிட்டார்கள். ஆனால் குருவுக்கு உள்ளிருக்கும் பலம் தெரியுமாதலால் அவன் இனிக் கோட்டையை வெகு நாட்களுக்கு வைத்திருக்கமுடியாதெனநினைத்துஉள்ளேயிருக்கும் பெண்டிரையும் குழந்தைகளையும் வெளியில் போய் ஓர் காவலிடம் தேடிக்கொள்ளும்படி அனுப்பினான். இவ்வாறு அனுப்பப்பட்டவர்களுள் குருவின் இரண்டு சம்சாரங்களும், தாய் கூஜரி தேவியும், ஜோராவர ஸிங்கன், பத்தே ஸிங்கன் என்கிற இரண்டு கடைசிக் குமாரர்களும் இருந்தார்கள்.

போவதற்கு வேறு இடமின்றி இவர்கள் ஸரஹிந்துக்கே போக நேர்ந்தது. இவர்கள் ஸரஹிந்தில் இருந்த செய்தி சீக்கிரம் ஊரில் பரவி சைனியத்துடன் ஆனந்தபூருக்குச் சென்றிருந்த ஸுபேதார் வரையிலும் எட்டியது. இதைக் கேள்விப்பற்றதும், குருவினது புத்திரரை முஸ்லீம்களாக்கிவிட்டால் அவனது மானத்தையும் கௌரவத்தையும் வேரறுத்துப் போட்டதாகிவிடும் என நினைத்து ஸுபேதார் பாசறையை விட்டு ஸரஹிந்தில் வந்து ஓர் குதிபாகக் குதித்தான். குரு புத்திரர்களைத் தன் வசம் பிடித்துத் தருகிறவர்களுக்குப் பெரிய தோர் பரிசு அளிப்பதாகப் பிரகடனப்படுத்திப் பல ஆட்களை ஊருக்குள் அனுப்பிக் கோவிந்தனுடைய புத்திரர்களைத் தேடிப் பிடித்து வரச் சொன்னான். எப்பேர்ப்பட்ட இயக்கத்திலும் எப்பேர்ப்பட்ட மகானைச் சுற்றியும் கூட, துரோகிகளும் சண்டாளர்களும் சேர்ந்து விடுகிறார்கள். ஏசுவினிடம் யூதாஸ் * சேர்ந்திருந்தானன்றோ! கூஜரி தேவி முதலியவர்களுக்குக் குரு துணையாக அனுப்பியிருந்தவர்களில் ஒருவன் ஸுபேதார் பிரகடனப் படுத்தியிருந்த பரிசுப் பொருளுக்கு ஆசைப்பட்டு ஜோராவர ஸிங்கனையும் பத்தே ஸிங்கனையும் வெளியில அழைத்துப் போவதுபோல அழைத்து வந்து

* Judas.

சத்துருவின் வசம் காட்டிக் கொடுத்துவிட்டான்!

உடனே ஒரு பெரியதர்பார் கூட்டப்பட்டது. ஸுபேதார் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். குருவின் புத்திரர்களைக் காவலாளிகள் ஸுபேதாருக்கு முன்னே கொண்டு வருகிறார்கள். ஜொராவர சிங்கனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கலாம். பத்தே சிங்கன் அவனினும் மிகச் சிறுவன். ஆனால் அவர்கள் பயம் என்பதையே அறியாதவர்கள்போல நடக்கிறார்கள். அவர்களது பார்வையில் சிறிது கலக்கமேனும் அச்சமேனும் இல்லை. தர்பாரில் நிச்சப்தம். அங்கே கூடியுள்ளவர்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஓர் நாழிகை நேரத்தைப் போலக் காண்கிறது. கடைசியாக, குருபுத்திரர் ஸுபேதாருக்கு எதிரே நிற்கிறார்கள்.

ஸுபேதார் புருவத்தை நெரித்துக்கொண்டு கூறுகிறான்: "பிள்ளைகளே, நீங்கள் சக்ரவர்த்திக்கு விரோதமாகக் கொடி உயர்த்திப் போர் புரிகிற ஓர் ராஜத்துரோகியின் புத்திரர்கள். நீங்களும் அவனது படையிலே சேர்ந்து போரும் புரிந்திருக்கிறீர்கள். உங்களுக்கு மரண தண்டனை விதிப்பது தான் நியாயம். ஆனால் நீங்கள் குழந்தைகளாதலால் உங்கள் மீது எனக்கு இரக்கம் வருகிறது. அதனால் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தரக்கூடிய இஸ்லாம் தர்மத்தை நீங்கள் தழுவுவதாக இருந்தால் உங்களை மன்னித்துவிட எண்ணியுள்ளேன். என்ன சொல்லுகிறீர்கள்?"

ஜொராவர்:— ஸச்சா பாதுஷா வாஹெ குரு கோவிந்த மகாராஜனை ராஜத்துரோகி என்றுகூற உனக்கு எள்ளளவும் பாத்தியமில்லை. அவனே சத்தியத்துக்குச் சக்ரவர்த்தி. அறத்தினுக்கு அரசன். பாரத நாட்டில் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகப் போர் புரிகிறவன். அவன் கடவுளுக்குத்தான் பணிவானே யொழிய பூமண்டலத்திலிருக்கிற எத்தகைய சக்ரவர்த்திக்கும் உட்பட்டவனல்லன். ஆகையால் அவன் என்றைக்கும் அங்கீகரியாத அரசனுக்கு அவன் எவ்வாறு துரோகியாக முடியும்? உங்கள் அரசாங்கம் தர்மமான அரசாங்கமாக இருந்திருக்கும் பக்ஷத்தில் எங்கள் குருவும் தந்தையுமான கோவிந்த சிங்கன் உங்களுக்குத் துணையாக இருந்து வாழ்ந்திருப்பான். நீங்கள் நாட்டில் அதர்மம் புரிந்து வருகிறதாலேயே அவன் சிஷ்யர்களுடன் உங்கள் அரசை எதிர்த்துப் போர் புரிகிறான். எங்களைப் பொறுத்த மட்டில் எங்கள் மீது நீ இரங்க வேண்டாம். எங்களை நீ கொன்று விடலாம். உன் கையில் நாங்கள் அகப்பட்டிருக்கும் போது எங்களை நீ உன் இஷ்டம் போலச் செய்து விடலாம். ஆனால் நாங்கள் எங்கள் தர்மத்தை விட்டு விடுவோம் என்று கனவில்கூட நினையாதே!

சபையிலுள்ள அனைவரும் தங்கள் வாழ்நாளில் அது வரையில் கேட்டிராத ஸ்வரத்தையும் வார்த்தைகளையும் கேட்டுப் பிரமித்தார்கள்; அந்தப் பாலகனுடைய அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு வியந்தார்கள்; மேலே என்ன நடக்கப் போகிறது என்று கண்கொட்டாமல் உன்னிப்பாய், சர்வேந்திரியங்களிலும் ஜாகரூகர்களாய், பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஸுபேதாரும் மனதிலே அவர்களுடைய தைரியத்தை மெச்சினான். ஆனால் அவ் எண்ணத்தை அடக்கிக் கொண்டு பின் வருமாறு பேசினான்.

ஸுபேதார்:—பிள்ளாய், பணிவாகப் பேசினாயானால் உயிர் தப்பலாம். இப்பொழுது பேசுகிற ஸ்வரத்தில் பேசினாயானால் உங்கள் உயிர் உங்களதல்ல. ஆனால் நீ சிறு பையனாகையால் உன்னை இன்னும் மன்னிக்கிறேன். நன்றாக யோசித்துப் பார். எதற்காகப் பிராணனை விடுகிறாய்? இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்று. பாதுஷா ஔரங்கஜேபின் தயவும் பேட்டியும் உனக்குச் சம்பாதித்துத் தருகிறேன். பாதுஷாவானவன் நீங்கள் பொய்ச் சமயத்தை விட்டு நபி நாயகத்தின்



மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு விட்டீர்கள் என்று கண்டதும் உங்களைத் தன் திருக்கையால் தழுவுவான். உங்களுக்கு உயர்ந்த கல்வி கற்பித்துத் தன் சைனியத்தில் சிரேஷ்டமான தளபதி ஸ்தானங்களும் கொடுப்பான். உயர்ந்த பிரபுக்களின் வம்சத்தில் பிறந்த, ஹௌரிகள்போல அழகு வாய்ந்த, பெண்களை உங்களுக்கு விவாகம் செய்து வைப்பான். ஆபரணங்களும் உடைகளும், வீடுகளும் உத்தியானங்களும் உங்களுக்கு ஏராளமாக அளிப்பான். ஆகையால் உங்கள் தந்தையோடு சோறு தண்ணீரில்லாமல் காடு காடாய் ஓடி ஓடிக் கடைசியில் ஏகாதிபத்திய சிப்பாய்களின் வாட்களுக்கு இரையாகாமல் இப்பொழுதே கலமாவைச் * சொல்லிவிடுங்கள்.

ஜொராவர்:— ஸத் ஸ்ரீஅகால்! வாஹெ குருகி பத்தே! யாரென நினைத்து எங்களிடமிவ்வார்த்தைகள் பேசுகிறாய்? சிங்கத்தின் குருளைகள் புல்லுக்கு ஆசைப்படும் என மதிக்கிறாயா? எங்கள் குருவினுடைய வேலைக்காரனது வேலைக்காரன்கூட ஔரங்கஜேபின் சைனியத்தில் தளபதி ஸ்தானத்தை விரும்பான். உங்கள் ஷாஹம் ஷாவின் தயவை லக்ஷியம் செய்யான். அப்படியிருக்க, எங்களையா இந்த அற்பத்திலும் அற்ப விஷயங்களுக்காகக் கலமா சொல்லச் சொல்கிறாய்? சபாஷ்!

ஜொராவர் இவ்வாறு பேசிடவே ஸுபேதாருக்கு உக்ரமான கோபம் வந்துவிட்டது. உடனே வேலைக்காரனிடம் சொல்லினான்: "பாம்பின் வயிற்றில் பாம்புதான் பிறக்கும், அன்றோ? கொத்தனை அழைத்து வந்து, இந்த ராஜத்துரோகிகளைச் சுவரோடு சுவராய்ச் சேர்த்துச் சுற்றிச் செங்கல் வைத்துச் சுவர் எழுப்பச் சொல்!"

கொத்தன் வந்தான். பாலர்களைச் சுவரோடு சேர்த்து நிறுத்தினான். காலிலிருந்து செங்கல்களைச் சுண்ணாம்பும் வைத்துச் சுவர் எழுப்பத் துவங்கினான்.

பாலர்கள் அலக்ஷியமாக நின்றார்கள். தர்மத்தின் கௌரவத்தைக் காக்கும் பாக்கியம் தங்களுக்கு இச் சிறு வயதிலேயே கிடைத்தது என்று இருவரும் கர்வங் கொண்டார்களே யொழிய, அவர்கள் மனதில் லேசா லேசம்கூடத் துக்கம் என்பது இல்லை. மனதைக் குருவினது சரணாரவிந்தங்களில் நிறுத்தி, அகாலபுருஷனைத் தியானித்துக் கொண்டு ஜொராவரும் பத்தேயும் பேரானந்தத்தில் மூழ்கி நின்றார்கள். கல் ஏற ஏற அவயவங்களில் வலியும் கடுப்பும் ஏறுகிறது. கல் இடுப்பு வரையில் வந்துவிட்டது—வயிற்றைச் சுற்றியும் வைக்கப்படுகிறது. அப்பொழுது ஸுபேதார் கொத்தனை நிறுத்தச் சொல்லி, "இப்பொழுதேனும் பொய் மார்க்கத்தை விட்டோம் என்று சொல்லுங்கள், கல்லைப் பிரித்தெடுத்துவிட்டு உங்களை விடுவிக்கிறேன்," என்றான். ஆனால் நமது பாலர் வஜ்ரத்தைப் போல அழுத்தமாகவே நிற்கிறார்கள். ஸத் ஸ்ரீ அகால் என்கிற கோஷம் தான் அவர்களது திருவாயினின்று வருகிறது. மேலே கட்டுங்கள் என்று சமிக்ஞை செய்கிறான் ஸுபேதார். கொத்தன் கட்டிக்கொண்டே போகையில் பத்தே சிங்கனுக்குத் திணற ஆரம்பித்துவிட்டது. அவன் மனந் தளரப் போகிறான் என்று ஜொராவர் சிங்கன் அவனைப் பார்த்து 'பயப்படாதே பத்தே!' என்று சொன்னான். அவ்வார்த்தைகளைக் கேட்டதும் பத்தேசிங்கன் கர்வத்துடன், "யாரைப் பார்த்து, அண்ணா, பயப்படாதே என்று சொல்லுகிறாய்? நான் குரு மகாராஜாவின் புத்திரன் என்பதையும் சிஷ்யன் என்பதையும் மறந்துவிட்டாய் போலும்! நான் அதை ஒரு நாளும் மறவேன்: குரு மகாராஜாவின் உபதேசங்களும் அவனது அன்பும் எனக்கு அச்சம் என்றால் என்ன என்று கூடத் தெரியாமல் செய்துவிட்டன: இந்த உடலையும் உயிரை

* லா இலாஹி இல்லல்லாஹு: முஹம்மது ரஸுல் அல்லாஹு, என்ற சூத்திரம்.

யும் சத்தியத்துக்காகவும் தர்மத்துக்காகவும் ஆத்தியாகக் கொடுப்பதைவிட உயர்ந்த பதவி ஏதேனும் உண்டோ! இன்னும் நான்கு செங்கற்கள் ஏறினால் என் ஜீவன் அகால புருஷனிடம் சென்றுவிடும்! அதைவிட எனக்கு வேறு ஆனந்தம் எது? ஆகையால் இந்த துஷ்டர்கள் செய்கிற ஒவ்வொரு தீமையும் என்னுடைய நன்மைக்காகவே என்பதை நன்கு உணர்ந்துகொண்டு இதோ இந்த உயிரை அகால புருஷன் கையில் ஒப்பித்துவிட்டேன். நாம் இருவரும் இந்தச் சரீரத்தை விட்டுவிட்டு ஏக காலத்தில் அகால புருஷனுடைய சன்னிதானத்துக்கு இணை பிரியாமல் செல்லுவோம்: எனக்காக நீ கவலைப்படாதே!" என்றான்.

ஸுபேதாருக்குக் கோபமும் மூர்க்கத்தனமும் அதிகமாகிவிட்டது. அதிவேகமாகக் கல்லை ஏற்றிக் கட்டுங்கள் என்று ஆக்ஞாபித்தான். குழந்தைகளின் ஒவ்வொரு இந்திரியமும் வரிசையாக உணர்ச்சி யிழந்து வந்தது. கடைசியாக அவர்களுடைய சரீரம் செங்கற்களுக்குள் முற்றிலும் புதையுண்டது. அவர்களது அன்றலர்ந்த மலர் போன்ற ஆத்மாக்கள் பத்தேசிங்கன் கூறியபிரகாரம் இணை பிரியாமல் ஈசுவரனுடைய பாதாரவிந்தங்களில் போய்ச் சேர்ந்தன.

குரு புத்திரர்களைக் கொன்றுவிட்டதிலிருந்து பெரியதோர் வெற்றி பெற்றுவிட்டதாக ஸுபேதார் நினைத்துக்கொண்டான். ஆனால் எந்தக் காலத்திலும் ஆத்ம தியாகிகளின் இரத்தம் அவர்களுடைய தர்மத்தை வளர்க்கும் ஜீவதாரையாகிறது. ஆகவே இவர்களுடைய ஆத்ம பலிதானத்தையும் கடைசி வரையில் அவர்கள் காட்டிய தைரியத்தையும் பற்றிக் கேள்வியுற்றும் கோவிந்தசிங்கனுக்குத் துக்கம் உண்டாகவில்லை— மற்று, அவன் தோள் பூரித்தது. தன் புத்திரர்கள் ஹிந்து தர்மத்தின் மானத்தைக் காத்தார்கள் என்ற எண்ணமும், தன்னுடைய கீர்த்தியை மாசில்லாமல் செய்தார்கள் என்ற எண்ணமு தங்களுடைய கீர்த்தி பூலோகம் உள்ளளவும் நி நிற்கும்படி செய்துகொண்டு விட்டார்கள் என் எண்ணமும் அவனுக்குப் புத்திர சோகமே இ லாமற் செய்துவிட்டன. அது மாத்திரம அவனைச் சூழ்ந்துள்ள நாற்பது பேர்களுக்கு அந்தச் செய்தி ஆயிரம் யானைகளின் பலமு ஆயிரம் சிங்கங்களின் அஞ்சாமையும் கொடுத் விட்டது. அவர்கள் குருவின் பாதாரவிந்த களில் வீழ்ந்து, "ஐயனே, குழந்தைகளின் ஆத் தியாகம் தங்களுக்குத் தேவ பலத்தைக் கொடு துவிட்டது. மற்ற சிஷ்யர்களுடைய மன யும் இது மாற்றிவிட்டது என்று அறிகிறோ அவர்களைச் சபித்த சாபத்தைத் தேவரீர் மாற் னால் அவர்கள் தங்கள் கடமையினின்று இனி பின் வாங்கவே செய்யார்கள் என்று நாங்க பிணை நிற்க முடியும்: மாற்றியருள்க!" என்று வேண்டினார்கள். குரு மகாராஜனும் சாபத்தை மாற்றிவிட்டான்.

எதிரிகளின் சைனியம் நாளுக்குநாள் வளர்ந்து வந்தபடியால் கோவிந்த குரு தன் சிறு தளத்தைக் கூட்டிக்கொண்டு சம்கௌடம் என்ற கோட்டைக்கு இராவோடிரவாய்ச் சென்றான். ஆனால் தப்பிச் சென்ற செய்தி மொகலாயருக்குத் தெரிந்து அவர்கள் அவ்வூரை முற்றுகை போட்டார்கள். சண்டைகள் கோரமாய் நடந்தன. தோட்டியாக இருந்த ஜீவன சிங்கன் என்பான் மகா உக்கிரமாகப் போர் புரிந்து போர்க்களத்திலேயே மடிந்து குருவின் அருளைப் பெற்றான். அவன் வீழ்ந்த இடத்தில் ஓர் வீரக்கல் வைத்திருக்கிறார்கள். அதை இன்னும் காணலாம்.

எத்தனை நஷ்டமும் நாசமும் வந்தாலும் கிஞ்சித்தேனும் சலியாமல் சிஷ்யர் போர் புரிவதைப் பார்த்து அலுத்துப் போயும், மத செருக்கினால் மொகலாயர் குருவினிடம் சப



தானம் பேச தூதர் அனுப்பியபோது ஹிந்து தர்மத்தை விட்டு இஸ்லாம் தர்மத்தைத் தழுவ வேண்டும் என்று ஓர் நிபந்தனை கண்டு, அவ்வாறு தழுவினால் அவனுக்கு மொகலாய சைனியத்தில் ஓர் சேனாதிபதி ஸ்தானமும் தருவதாகச் சொல்லியனுப்பினார்கள். ஆனால் இந்த வார்த்தைகளைத் தூதர் கூறியதும் குருவின் மூத்த மகனான அஜீத சிங்கன் கோபாக்கிராந்தனாகி அவர்களைக் குருவினிடம் போகவிடாமல் தானே அவர்களைக் கண்டித்து அனுப்பிவிட்டான். மறுபடியும் போர் மும்முரமாக நடந்தது. அஜீத சிங்கனும் அவனது சகோதரனான ஜுஜார சிங்கனும் முன்னணியிலேயே போர் செய்து குருவின் கண்ணெதிரே ஷஹீதாயினர்.* ஆனால் இம்முறையும் வெற்றி மொகலாயரிடமே நின்றது. மிகுதி நின்ற வீரர்களோடு குரு சம்கௌடத்தினின்று தப்பியோடும்படியாகிவிட்டது. போகும் வழியில் கோவிந்தன் சில பட்டாணிகளின் கையில் அகப்பட்டான். ஆனால் அவனது வீரத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் தெய்வ பக்தியையும் பற்றிக் கேள்வியுற்றிருந்த அவர்கள் அவனுக்கு உபசாரங்கள் செய்து அவனைப் பேலால்பூர் என்ற இடத்துக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அங்கேயும் குரு மகாராஜனும் அவனது படையும் பீர்முகம்மது என்ற ஓர் முஸ்லீமினாலேயே ரக்ஷிக்கப்பட்டார்கள்.† அங்கேதான் அவன் முஸ்லீம்கள் சமைத்த அன்னத்தை உண்டு, ஆபத் காலத்தில் இதர மதத்தினரிடம் அன்னமும் உண்ணலாம் என்று தன் சிஷ்யர்களுக்கு விதியும் வகுத்து வைத்தான்.

பிறகு முஸ்லீம்கள் உடுத்திக்கொள்கிறது போன்ற நீல வர்ண உடை தரித்துக்கொண்டு வேற்றுருவம் தாங்கிக்கொண்டு குரு பூதிந்தா பாலைவனத்துக்குச் சென்றான். கலைந்து போன சிஷ்யர் அங்கே வந்து அவனோடு சேர்ந்து கொண்டார்கள். அங்கு நின்றும் சத்துருக்களின் தளங்கள் அவனை நெருக்க, அவன் ஓடி ஓடிச் சென்று கடைசியாய்ச் செல்லிடம் ஒன்று கண்டு அங்கு தன் படைகளை நிறுத்தி, நெருங்கிய படைகளை எதிர்த்துத் தாக்கினான். அங்கே சத்துருக்கள் தோற்றுப் போயினபடியால் அந்த இடத்திற்கு முக்திசரஸ் என்கிற பெயர் வைக்கப்பட்டு இன்றைக்கும் வழங்குகிறது. கடைசியாக ஹான்ஸிக்கும் பெரோஜபூருக்கும் இடையிலே தான் தொடரும் சத்துருக்களின் படை முற்றிலும் முறியடிக்கப்பட்டுப் போயிற்று. அங்கு தான் முதல் முதல் குருவுக்கும் சிஷ்யர்களுக்கும் இந்தப் போரில் மூச்சு விடச் சாவகாசம் ஏற்பட்டதால் அவ்விடத்துக்குத் தம்தமா என்ற பேர் சிஷ்யர்களால் வைக்கப்பட்டது. குருவின் சைனியமும் மிகமிகக் குறைந்து போய்விட்டபடியால் மொகலாய சேனாதிபதிகள் குருவினால் இனி ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்துக்கொண்டு தங்கள் தலைமை ஸ்தானத்தை நோக்கித் திரும்பி விட்டார்கள்.

குரு தம்தமாவில் இருந்துகொண்டு சிஷ்யரையெல்லாம் ஓலை அனுப்பி வருவித்து மறுபடியும் போர் தொடங்க ஏற்பாடுகள் செய்யத் தலைப்பட்டான். அதே காலத்தில்தான் ஏற்கெனவே கவனம் செய்த கீர்த்தனைகளைத் தொகுத்து, புதிய கீர்த்தனைகள், ஸ்தோத்திரங்கள் முதலியன எழுதியும், ஓர் புதிய கிரந்தத்தை யாத்து வைத்து, தான் முன்னமே எழுதத் துவக்கியிருந்த விசித்திர நாடகத்தையும் முடித்தான். அந்நாடகத்தின் இறுதியில் காணப்படும் அகால புருஷ ஸ்தோத்திரம் படிப்போருக்கு மயிர்க்குச் செறி

* ஷஹீது—தர்மத்துக்காகப் பிராணனைக் கொடுக்கிறவன். அஜீத சிங்கனுக்கு அப்பொழுது வயது பதினெட்டும் ஜுஜார (ஜுஜ்ஹார) சிங்கனுக்குப் பதினான்கும் ஆகி யிருந்தது.

† குரு கோவிந்தன் தான் படிக்கும் காலத்தில் இந்தப் பீர்முகம்மது அவனுக்குச் சகபாடியாக இருந்தான். அவன் சிறந்த முஸ்லிமாயுமிருந்தான்.

விக்கிறது. தனது வெற்றிகளுக்கும், மகா பெரிய அபாயங்களினின்று தப்பி அறத்திற்காகப் போர் புரிய இன்னமும் தான் தயாராக இருப்பதற்கும் அகால புருஷனுடைய திருவருளும் தனது வாளுமேதான் காரணம் என்று அவன் வியந்து கூறிக் கடவுளை ஸ்தோத்திரம் செய்கிறான்.

இவ்வாறு தம்தமாவில் குரு இருந்து வரும் நாளில் ஔரங்கஜேபு அவனிடம் தூதரை அனுப்பி அவனைத் தன் பாசறைக்கு அழைத்தான். ஆனால் கோவிந்தன் மொகலாயர் செய்து வந்த அக்கிரமங்களையும், ஔரங்கஜேபு தனக்கும் தன் தந்தைக்கும் இழைத்த இன்னல்களையும் கூறிக் கண்டித்து, "உன்னிடம் நான் வரவேண்டிய அவசியமே யில்லை: என் நான்கு புத்திரர்களையும் உன்னோடு நான் செய்த போர்களில் பலி கொடுத்திருக்கிறேன்: உனக்கும் எனக்கும் சினேகம் உண்டாகாமல் தடுக்க அவர்களது இரத்தமும் என் தந்தை தேகபகதூருடைய இரத்தமும் இடை நின்று கூவுகின்றன: இந்த வயதுகாலத்தில் குழந்தைகளை இழந்து, இலையற்ற மரம் போல நிற்கிறேன்: ஆனால் எனது காலஸாவே எனது சந்ததி. அந்தக் காலஸா உன் ராஜ்ஜியத்தைத் தகர்த்தெறியப் போகிறது! வாஹ குருஜி காலஸா!" என்று பதில் எழுதி யனுப்பி விட்டான்.

ஔரங்கஜேபு கலி ௪௮௦௮-இல் தன் பாசறையில் மனமுடைந்தவனாகவே இறந்துவிட்டான். அக்காலத்தில் காபூலிலிருந்த அவன் மகனான பஹதூர் ஷா பெரிய படையுடன் ஹிந்துஸ்தானத்துக்கு வந்து, தன் சகோதரர்களைப் போரிற் கொன்று தில்லி சிங்காதனத்தின் மீது ஏறினான். பஹதூர் ஷாவுக்குக் கோவிந்தன் மீது அபார மதிப்பு உண்டு. ஒரு சிறிய படையை வைத்துக்கொண்டு ஏகாதிபத்திய சைனியங்களோடு பதின்மூன்று வருஷ காலம் இடை விடாமல் போர் செய்த மகா வீரனை எவ்வாறு மெச்சாமல் இருத்தல் சாத்தியம்? ஆகவே பஹதூர் ஷா அவனோடு அவனுடைய கௌரவத்துக்கேற்ற நிபந்தனைகளை செய்துகொண்டு, சமாதானம் செய்து கொள்வதாகச் சொல்லி, இடையில், கோதாவரிக் கரையோரம் ஏகாதிபத்தியத்துக்காகப் படைகளுடன் சென்று சத்துருக்களைத் தாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். மொகலாயர் சிஷியர்களை இம்சியாமலிருக்கச் சம்மதிக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் அறிகுறி என நினைத்துக் குரு அதற்கு இசைந்து தன் படையை அழைத்துக்கொண்டு தெற்கு நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

இக்காலத்தில் குருவினது சீலத்தையும் வீரத்தையும் கண்டு குருவுக்குத் தொண்டு செய்தே தன் காலத்தைக் கழிக்க வேண்டுமென்று உறுதி கொண்டு தென்னாட்டுப் பிராமணன் ஒருவன் அவனை ஆசிரயித்திருந்தான். குருவும் அவனது பலத்தையும் மனோதிடத்தையும் சாமர்த்தியத்தையும் கண்டு வியந்து அவனைத் தன் சேனாயகனாக்கிக்கொண்டிருந்தான். அந் நாயகன் தன் பெயர்கொண்டே தன்னை ஒருவரும் அழைக்கபடாது என்றும், பந்தா—குருவின் அடிமை—என்றுதான் அனைவரும் தன்னை அழைக்க வேண்டும் என்றும் கூறி வந்ததால் அவனது பெயர் பந்தா என்றே வழங்கலாயிற்று. அவனது இயற்பெயர் உலகினுக்கே மறந்து போயினது போலும்.

கோவிந்த சிங்கன் மெல்ல மெல்லத் தெற்கு நோக்கி வந்து கோதாவரிக் கரையிலுள்ள நதேடம் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தான். ஆனால் திடீரென அவனது ஆயுள் அங்கு கத்தரித்துப் போய்விட்டது.

ஓர் காலத்தில் பட்டாண் நாட்டுக் குதிரை வியாபாரி ஒருவன் தன்னை அவமதித்ததற்காகக் கோவிந்தன் அவனைத் தன் வாளால் கொன்றுவிட்டிருந்தான். ஆனால் அப் பட்டாணியின் மைந்தர் திக்கதியாயிருத்தல் கண்டு அவன் அவர்களைத் தன் குழந்தைகளைப் போலவே வளர்த்து வந்தான். அன்னவர்கள் வயதான பிறகு தங்கள் தகப்பன் குருவினால் கொல்லப்பட்டுப் போயினான் என்று கேள்வியுற்ற தினத்திலிருந்து தங்கள் தகப்பனைப் பழி வாங்க வேண்டுமென்று கருதிக் கொண்டே வந்தார்கள். கடைசியாக, நதேடத்திற்குக் குரு வந்து சேர்ந்த காலத்தில், அற்றம் பார்த்துக்கொண்டுவந்த பட்டாணி வாலிபர் குரு தனியாக இருந்த நேரம் பார்த்து அவனைத் தம் கூரிய வாளால் மர்மத்தில் வெட்டிவிட்டார்கள்.

குரு வெட்டுண்ட செய்தி தெரிந்ததும், ஓடிப் போயின பட்டாணியரைச் சிஷியர் தேடிப் பிடித்துக் குருவின் முன்னர் நிறுத்தினார்கள். "உங்களைக் குழந்தைகளைப் போலவே வளர்த்தேனே, ஏன், அப்பா, என்னைத் தாக்கினீர்கள்?" என்று கோவிந்தன் அவர்களைக் கேட்டான். அதற்கு அவர்கள் "நீ எங்களைத் தந்தை போலவே வளர்த்துவந்தாய் என்பதில் தடையில்லை: அதனால் எங்களுக்கும் உன் மீது அபாரமான வாஞ்சையிருந்தே வந்திருக்கிறது: ஆனால் நீ எங்கள் தகப்பனைக் கொன்றாய் என்கிற சங்கதி எங்களுக்குத் தெரிந்த தினத்திலிருந்து, அந்தப் பழியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற எங்கள் வர்மமும் உன் பேரில் எங்களுக்குள்ள அன்பும் ஒன்றோடொன்று போர் செய்யத் தலைப்பட்டன: கடைசியில் எங்கள் வர்மமே வென்றது: எங்கள் பழியைத் தீர்த்துவிட்டோம்: ஆனால் எங்களை அன்போடு வளர்த்துவந்த உன் உயிரை வாங்கியே அப் பழியைத் தீர்த்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது எங்கள் துரதிருஷ்டமே: உன்னைக் கொன்ற பாதகத்துக்காகச் சிஷியர் எங்களைக் கொன்றுவிடுவதே முறை: இதோ எங்கள் வாட்களைக் கீழே போட்டுவிடுகிறோம், எங்களைக் கொன்று விடும்படி சிஷியருக்கு ஆணையிட்டுவிடு," என்று சொல்லித் தங்கள் வாட்களை உறையோடு கீழே போட்டுவிட்டார்கள்.

சிஷியர்கள் குருவினது ஆணையை எதிர் பார்த்து நின்றார்கள். ஆனால் குரு புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "குழந்தைகளே, நீங்கள் செய்தது நியாயமே: என் தகப்பனைச் சிரச்சேதம் செய்ய ஆக்ஞாபித்த ஔரங்கஜேபின் தலையைச் சிதைக்க வேண்டும் என்கிற ஆவல் எனக்கு அளவு கடந்து இருந்திருக்கும்போது நீங்கள் என்னை வெட்டியதைக் கண்டு நான் எவ்வாறு கோபிப்பேன்? நீங்கள் செய்த காரியம் சரியே," என்று பட்டாணிகளிடம் கூறி, சிஷியர்களைப் பார்த்து, "இவர்களை விட்டு விடுங்கள், அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகட்டும்!" என்று சொன்னான். பட்டாணிகளும் அவன் காலில் வீழ்ந்து வணங்கிவிட்டு அக் கூட்டத்தை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்கள்.

சிஷியர்கள் குருவின் பாதத்தில் வீழ்ந்து, "எங்களை அநாதைக் குழந்தைகளைப் போல விட்டு விட்டுச் செல்லுகிறாயே! ஏ குருதேவனே, நாங்கள் இனி என்ன செய்வோம்? யாரைக் குருவாகக் கோருவோம்! யார்தாம் உன்னைப் போல எங்கள் மீது கருணை மழை பொழிந்துகொண்டு எத்தகைய இடுக்கண்களுக்கிடையிலும் எங்கள் மனம் சோராமற் காப்பர்?" என்று கதறினார்கள். குரு அவர்களைத் தேற்றி, "புத்திரர்களே, கவலைப்படாதீர்கள்! நான் அல்லன் உங்களுக்குப் பலமும் தைரியமும் தந்து வந்தவன்: அகால புருஷனது அருள் தான் உங்களது திண்மைக்கும் அஞ்சாமைக்கும் காரணம் என்பதை நன்கு உணருங்கள்: குருக்களின் பரம்பரையும் என்னோடு

தீர்ந்துவிட்டது: இனி குருவைப் பார்க்க விரும்புபவர் நானக தேவனது கிரந்த சாஹிபைப் * பார்க்கட்டும்! ஈசுவரன் காலஸாவை ரக்ஷிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறான்: பந்தாவின் தலைமையின் கீழ் நின்று நீங்கள் அறத்தைக் காவுங்கள். ஐந்து சிஷியர்கள் நடு நிலைமையோடு, மனச் சாந்தியோடு எங்குக் கூடி யிருக்கிறார்களோ அங்கு அவர்களுக்கிடையே நான் சூக்ஷ்மதேஹியாக இருப்பேன் என்று உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன்: என் குழந்தைகளே! இனிச் சென்று வருகிறேன்: சொல்லுங்கள், அகால புருஷனுக்கு ஜயம்! வாஹு குருஜி காலஸா! வாஹு குருகே பத்தே!" என்று கூறி நிறுத்திக் கொண்டான். பிறகு சற்று நேரம் தான். அவனது ஆத்மா எந்த அகால புருஷனது திருமுன்னர் நின்று தர்ம சம்ஸ்தாபனத்துக்காக இப் பூவுலகில் இறங்கியதோ அந்தச் சன்னிதானத்துக்கே திரும்பிப் போய்ச் சேர்ந்துவிட்டது!

குரு கோவிந்தனுடைய வாழ்க்கை விபலமாகப் போயிற்று என்று சிலர் கருதலாம். ஆனால் அறிந்தவர் அவ்வாறு கருத மாட்டார்கள். அவன் தன் சிஷியர்களை வைத்துக்கொண்டு பெரியதோர் யுத்த களத்தில் ஏகாதிபத்திய சைனியத்தை ஓர் முறைகூட முறியடிக்கவில்லை என்பது வாஸ்தவம். சிஷியரை ஓர் தனி ராஷ்டிரமாக, ஓர் தனி கணமாக, அவன் அமைத்துவைக்கவில்லை என்பதும் உண்மை. ஆனால் அவன் இறந்த உடனேயே சிஷியர்களின் படையைத் திரட்டிக்கொண்டு பந்தா ஸரஹிந்தைத் தாக்கி ஸுபேதாரை வென்று அந் நகரைச் சூறையாடினான். பந்தா மொகலாயர் வசம் அகப்பட்டுத் தாம பலியான பிறகு சிஷியர் இருக்குமிடந்தெரியாமல் பதுங்கி யிருக்கவேண்டி வந்தாலும், ஓர் ஐம்பது வருஷத்துக்கெல்லாம் காலஸா மறுபடியும் தலையெடுத்துப் பஞ்சாபிலும் காசுமீரத்திலும் ஓர் பெரிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தது. ரணஜித சிங்கன ராஜரீக விஷயங்களில் சுவச்சந்த அதிகாரத்தை வகித்தானாலும் தார்மிக விஷயங்களில் காலஸாவுக்குக் கட்டுப்பட்டே நடந்தான். அவன் செய்த சில குற்றங்களுக்காகக் காலஸா அவனுக்கு விதித்த சாட்டையடியை அவன் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டான். அவன் காலத்துக்குப் பிறகு கிழக்கிந்திய சங்க உத்தியோகஸ்தரின் சூழ்ச்சியினாலும் சில சிஷியர் தலைவரின் பணத்தாசையாலும் சிஷியரது ராஜ்ஜியம் ஆங்கிலர் வசம் வந்துவிட்டது. ஆனால் இன்றைக்கும் சிஷியர் ராஷ்டிரிய, தார்மிக உணர்ச்சி நிரம்பிய, ஏக ரூபமான, கட்டுப்பாடுள்ள ஓர் கூட்டமாக நிற்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அகாலியரின் சக்தி நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்று பத்திரிகை வாசிக்கிறவர் அனைவரும் அறிவர். அவர்களை இனி என்றைக்கும், யாராலும் நசுக்க முடியாது. சாமானிய ஜனங்களைச் சேர்த்து, ராஜாளிகளை அடிக்கும் வன்மையைக் குருவிகளுக்குத் தருகிறேன் என்று தான் செய்த சபதத்தின் பிரகாரம் அவர்களை அசகாய சூரர்களாக்கி, தான் இறந்து இருநூறு வருஷங்களுக்கு மேலாகியும் தன் முத்திரை அன்று வைத்தபடியே நிலைத்து நிற்கும்படி செய்த சக்தி குரு கோவிந்தனதே. இவ்வாறு தனது ஆத்ம சக்தியனைத்தையும் தன் சிஷியரிடத்தில் வியாபிக்கும்படி செய்த வன்மை சரித்திரத்தில் முகம்மது நபி —ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்— ஒருவனுக்குத்தான் நமக்குத் தெரிந்த மட்டில் உண்டு.

ஸத் ஸ்ரீ அகால்

* சிஷியர் நானகனுடைய கிரந்தத்தை மரியாதையாகக் கிரந்த சாஹிப் என்று குறிக்கிறார்கள். நம் முன்னோரும் நாலடியார், திருக்கோவையார் என்ற பெயர்களை நோக்குக.

# ஆலோகன அவலோகனம்

## ஓர் தீரச்செயல்

மலையாளத்தில் மாயக் குன்று அம்சத்தைச் சேர்ந்த இரண்டு தீயர்கள் காட்டிய தீரம் நமது "பாரதி"யில் ஓர் ஸ்தானம் பெற அருகமுடைத் தாயிருக்கிறது. யாரோ ஒருவருடைய மாட்டை ஓர் இரவில் ஓர் புலி அடித்துக் கொன்று விட்டது. இவர்கள் அது தெரிந்த உடன் தங்கள் அரிவாட்களை எடுத்துக் கொண்டு புலியைத் தேடிக் கொண்டு காட்டினுள் சென்றார்கள். வெகு நேரம் தேடிய பிறகு புலி பதுங்கி யிருந்த புதர்ப் பக்கம் வந்து சேர்ந்தார்கள். புலியைக் கண்டதும் அவர்கள் தங்கள் மனதிலுள்ள கோபத்தை யெல்லாம் வைத்துக் கொண்டு அதைத் தாக்கினார்கள். புலியும் அவர்களைத் தாக்கிற்று. நெருங்கி வந்து பல்லாலும் நகத்தாலும் அவர்களைக் கிழிக்கவும் செய்தது. ஆனால் அவர்கள் பயந்து ஓடிவிடாமல் அதற்கு ஈடு கொடுத்துக் கொண்டு தங்கள் வாட்களைப் பிரயோகித்து அதைக் கொன்றும் போட்டனர். புலி தந்த படுகாயத்துக்காக அவர்கள் தற்பொழுது சிகிச்சைச் சாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் காட்டிய தீரத்தை நாம் போற்றுகிறோம்.

வைத்தியுத சக்தியானது எப்படி யாதொரு நீக்கமுமின்றி எல்லாப் பொருள்களினுள்ளிருக்கிறதோ அப்படியே சௌரியமும் தீரமும் எல்லா மனிதரிடமும் இருக்கிறது. ஆனால் அக் குணங்கள் வெளிப்படுவதற்கு வசதி யில்லாமலிருப்பதோடு, அவை அழுங்கிப்போய்ப் பயங்கொள்ளித்தனமும் கோழைத்தனமும் வளர்வதற்கு வேண்டிய இடமும் நமது ஜாதியின் தற்கால ராஜீய ஜாதிய அமைப்பில் இருப்பதால் நம் நாட்டில் இத்தகைய தீரச் செயல்கள் அபூர்வமாகக் காணப்படுகின்றன. ஆயுதச் சட்டம் ஏற்படுத் தப்பட்ட தையோடு நாட்டில் கோழைத்தனம் வந்துவிட்டது. ஏழுது கோலைக் கொண்டு பிழைக்கும் ஜீவனம் ஊதத் தொழில் ஜீவனத்தைவிட உயர்வாகக் கருதப்பட்டுப் போன தினத்தினின்று நம்மிடம் பயங்கொள்ளித்தனமும் ஆள்வினையின்மையும் தோன்ற ஆரம்பித்து விட்டன. ஆனால் இத்தனை தடைகள் இருந்தாலும் மனிதனுடைய இயற்கைப் போக்கு தைரியத்தையும் உத்யமத்தையும் நாடியே செல்கின்றது என்று நமது தீயர் நண்பர் காட்டி விட்டனர். அவர்கள் உதாரணம் தமிழ் நாட்டில் பரவுவதாக.

## காடுவாள் சமஸ்தானமும் நிஜாம் அரசாங்கமும்

காடுவாள் சமஸ்தானம் சம்பந்தமாக நிஜாம் அரசர் நியாயமில்லாத ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். காடுவால் சமஸ்தானாதிபதி சில காலத்துக்கு முன் காலம் சென்றார். அவருக்கு ஆண் சந்ததி யில்லை. ௯0 வயதுள்ள அரசு விதவையும், ௧0 வயதும் ௬ வயதும் உள்ள இரண்டு குமாரத்திகளுமே அவருக்குச் சந்ததியாவர். இயற்கையாகப் பார்த்தாலும், இது வரையில் வந்திருக்கப்பட்ட மாமூலைக் கவனித்தாலும், அந்தச் சமஸ்தானம் அப் பெண்களில் யாருக்கேனும் ஆண் பிள்ளை பிறக்குமளவும் மாஜி சமஸ்தானாதிபதியின் விதவையின் ஆட்சியின் கீழும், ஆண் பிள்ளைகள் பிறந்த பிறகு அவ் ஆண் பிள்ளைகளின் ஆட்சியின் கீழும் இருக்க வேண்டியது. ஆனால் நிஜாம் அரசருக்கு அது சம்மதமாக இல்லை. இப் பெண்களுக்கு விவாகம் ஆகி அவர்கள் வயிற்றில் பிறக்கும் ஏதாவது ஓர் ஆண் மகவுக்கு ௨௧ வயது முடிகிற வரையில் அச் சமஸ்தானம் நிஜாம் ராஜ்ஜியத்தின் வரவு செலவு இலாகா மந்திரியால் நிர்வகிக்கப் பட வேண்டும் என்றும் அவ் ஆண் பிள்ளைகளின் கல்வியும் பாதுகாப்பும் நிஜாமின் வசம் இருக்க வேண்டும் என்றும் ஓர் ஜரீதா போட்டிருக்கிறார். இது மாத்திரமில்லை. இந்தப் பெண்களுக்கு வயதாகிற வரையில் அவர்களுடைய பாதுகாப்பும் தன் வசமே இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். இவ்

தமிழ்க் குருகுலம் தமிழ்த் தேச வாலிபருக்கு இலக்கியகல்வியும் தொழிற் கல்வியும் போதித்து அவர்களை அற வாழ்க்கைக்கு உரியராக ஆக்கவேண்டும் என்ற கருத்துக் கொண்டு ஸ்ரீமான் வ. வெ ஸுப்ரஹ்மண்ய ஐயர் உள்ளிட்ட பாரத்துவாஜ ஆசிரமத்தினரால் ஆரம்பிக்கப் பட்டது.

குருகுல வித்தியாலயம் ஆரம்பிக்க இருக்கிறதாக முதல் முதல் வெளியிடப்பட்ட பிரசுரம் கலி ௫௦௨௬ ஐப்பசி கார்த்திகை மாதவாகில்வெளிவந்த விக்ஞாபனமாகும். அதில் மாணவர் வித்தியாலயத்திலேயே வசித்துக்கொண்டு வித்தியாலயத்திலேயே சாப்பிட்டு வருவார்கள் என்பதைத் தவிர ஆகார விஷயமாக வேறு ஒன்றும் சொல்லப்படவில்லை. தமிழ் நாட்டின் பழக்க வழக்கங்கள் இருந்தநிலைமையில் பல ஜாதிகளினின்று சேர்க்கப்படப்போகிற மாணவர்களுக்குப் பந்திகள் எவ்வாறு அமைத்தல் சாத்தியமாகும் என்று நிர்ணயித்தல் யாருக்கும் முடியாத காரியம் என்று கருதப்பட்டது. நம்மைச் சுற்றிலும் உள்ள ஜனங்களுக்குள்ளே இது சம்பந்தமாக உள்ள பழக்கங்களைச் சுசி, ஆசாரங்களுக்கு விரோதம் இல்லாமல் எவ்வளவு மட்டுக்கு விரிவான வழியில் மாற்றிஏற்படுத்திக்கொண்டு போகலாமோ அவ்வளவு மட்டுக்கு மாற்றிக்கொண்டு போவதுதான் உசிதம் என்றே ஆசிரம வாசிகள் சங்கற்பித்துக் கொண்டார்கள்.

குருகுலத்தைக் கல்லிடைக்குறிச்சியில் ஆரம்பித்த போது பிராமணரேதான் சேர்ந்தார்கள். சில மாதங்களுக்கெல்லாம் பிராமணேதர மாணவர் வந்த காலத்தில் பிராமண மாணவர் தனியாகவும் பிராமணேதரர் தனியாகவும் உட்கார்ந்தார்கள். பிராமணேதர் மாணவருக்குப் பிரிவென்பதால் மனதில் யாதொரு வருத்தமும் இருக்கக் கூடாது என்ற காரணம்பற்றி ஆசாரியர் அவர்களுடைய பந்தியிலே வழக்கமாக உட்கார்ந்து வந்தார். பிராமணேதர உபாத்தியாயரும், தொண்டரும், குழந்தைகளை அழைத்து வந்து போகும் பிராமணேதரரும் ஆசாரியரும் உட்கார்ந்து வரும் பந்தியில் எந்த எந்த மாணவனுக்கு உட்கார இஷ்டமிருக்கிறதோ அம்மாணவன் உட்காரலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டதின் பேரில் பல பிராமண மாணவர் அப்பொதுப் பந்தியில் உட்கார்ந்தனர். யாரையும் வலுக் கட்டாயப் படுத்தி இப் பந்தியில் உட்காரவைக்க குருகுல நிர்வாகிகளுக்குச் சம்மதமில்லை. இவ்வாறு நடந்துகொண்டு வருகிற காலத்தில்தான், அதாவது கலி ௫௦௨௫ துவக்கத்தில்தான், ஸ்ரீ வரதராஜுலு நாயுடு குருகுலத்துக்கு வந்தார். பொதுப் பந்தியும் தனிப் பந்தியுமாக உட்கார்ந்து வந்த விபரம் அவருக்கு அப்பொழுதே தெரியும் என்பதை அவரே இவ் விவகாரத்தைத் துவக்கிய புதிதில், அதாவது ஆறு ஏழு மாதங்களுக்கு முன், தமது 'தமிழ்நாட்டில்' ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அதைப்பற்றி அவர் கேட்ட போதும் சுற்றியுள்ளோருக்குள் மன விரிவும் தாராள நோக்கமும் ஏற்பட ஏற்படத்தான் குருகுலத்தின் பந்தியமைப்பும் அத் தாராள நோக்கத்திற் கேற்ப மாற்றப்பட்டு வரும் என்று நிர்வாகிகள் சொல்லியிருக்கிறார்கள். அவரும் அதன் நியாயத்தை அக்காலத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

குருகுலம் ஆரம்பித்த சுமார் ஒரு வருஷத்திற்குப் பிறகு அது சேர்மாதேவிக்கு மாற்றப்பட்டது. அங்கே முதலில் பத்தடி சௌக்க பர்ணசாலை ஒன்றைத் தவிர வேறு கட்டடம் கிடையாது. தோப்புகளிலும் ஆலயங்களிலும் திருஷ்டி தோஷம் பார்க்கும் வழக்கம் தென்னாட்டாருள்ளும் இல்லை. ஆகையால் பிள்ளைகள் மரங்களின் அடியில் ஒன்றாக உட்கார்ந்து வந்தார்கள். சில கட்டடங்கள் கட்டிய பிறகும் பழைய சம்பிரதாயமே நடந்து வந்தது. ஆனால் சாப்பாட்டுக் கட்டடம் வேறோர் காரியத்துக்கு உபயோகமாக வேண்டி வந்த போது சமையற் கட்டடமும் அதனோடு ஒட்டியுள்ள ஓர் தாழ்வாரம் மாத்திரம் இருந்ததால் பிராமண மாணவரும் இதரரும் தனித்தனி உட்கார நேர்ந்தது. இத் தாழ்வாரத்தோடு தொடர்ந்த தாழ்வாரத்தை அமைப்பதற்குப்பல இடையூறுகள் நேர்ந்ததால் தாமதமாயிற்று. இச் சமயத்தில்தான் ஸ்ரீ வ. நாயுடு குருகுலத்தைத் தாக்கத் துவக்கினர். தாழ்வாரம் சரிவர அமைந்ததும் தனியாகச் சாப்பிட அனுமதி பெற்ற இரு மாணவரைத் தவிர மற்றெல்லாரும் ஒரே பந்தியில் உட்கார்ந்து சாப்பிட மறுபடியும் துவங்கினர். அதுமுதல் இன்றுவரையும் அவ்வாறேதான் நடை பெற்று வருகிறது.



உபாசாரியர் கீழ்நாடுகளுக்குக் குருகுலத்துக்காக உதவி தேடச்சென்றபோது அங்குள்ள நண்பர் பலருக்கும் குருகுலத்துப் பந்தி அமைப்பு விவரம் தெளிவாகச் சொல்லப்பட்டது. சென்ற புரட்டாசி முதற்கொண்டே "தமிழ் நாடு" இப் பந்தி விவகாரத்தைப் பற்றிக் கிளர்ச்சி செய்துவந்தும் அந்நாட்டில் குருகுலத்துக்குப் பொருள் உதவப்பட்டு வந்ததினின்றே, குருகுலத்துக்கு உதவி புரிந்த பெருமக்கள் பந்தி அமைப்புச் சம்பந்தமாகக் குருகுல நிர்வாகிகள் எடுத்துக் கொண்ட சிரமத்தையும், அதிலுள்ள கஷ்டங்களையும் சரிவர மதித்து வந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

திருஷ்டி தோஷத்தை வட நாடுகளில் நீக்கியிருக்கிறதுபோல நீக்கி வைக்கத் தமிழ்நாட்டில் தமிழ்க் குருகுல வித்தியாலயம் ஒரு ஸ்தாபனம்தான் மனப்பூர்த்தியாக முயற்சி செய்துகொண்டு வந்திருக்கிறது. நடுநிலைமையில் நின்று பார்த்தால் இப்பொழுது எப்பட்டிருக்கிற சமதிருஷ்டி எண்ணங்களைப் பூர்த்தி செய்து வைக்க அது தன் சக்தியனைத்தையும் வஞ்சனையின்றி உபயோகித்திருக்கிறது என்று ஏற்படும். அதற்கு மேலும் தற்பொழுது அதனிடம் எதிர்பார்ப்பது அசாத்தியமாயிருந்தும் மகாத்மாவின் பலத்தைக் கொண்டு, உடனுண்ணலுக்குச் சம்மதியாத மாணவரை இனிக் குருகுலத்தில் சேர்ப்பதில்லை என்றும் ஆசாரியரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிறகும் தகராறுகள் வளர்ந்து வருவதைப் பார்த்தால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் கருத்து குருகுலத்தை அழித்துவிட வேண்டும் என்றிருப்பதாகவே தோன்றுகிறது. ஜாதிப் பொதுவில் இருந்து வருகிற வழக்க பழக்கங்களுக்கு ஓர் தனி ஜாதியை உத்தரவாதமாக்கி, அந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவன் மீது பழி சுமத்தி எழுதி எழுதி ஜாதித் துவேஷத்தை உண்டாக்குவது கடினமன்று—மிக மிக எளிதான காரியம். ஆனால் நடுநிலைமையிலுள்ளவர்கள் இக் குருகுலம் கல்வி விருத்திக்காக ஏற்பட்டது என்பதையும், உடனுண்ணல் சம்பந்தமாகத் தனக்குச் சக்தி உள்ள அளவு உழைத்து வந்திருக்கிறது என்பதையும் உழைத்து வருகிறது என்பதையும் மறக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

## புராதன குருகுலங்கள்

மாணவரைக் குருகுலங்களிற்கு அனுப்பி ஆத்தியாத்ம வித்தையும் சாஸ்திரங்களும் அப்பியசிக்கும்படி செய்வது இப்பொழுது நடையிலில்லாமற்போய்விட்டது. ஆனால் இது புராதன காலங்களிலும், சுமார் ௪௦௦, ௫௦௦ வருஷங்களுக்கு முன் வரையிலும் கூட, நம் நாட்டில் பழக்கத்திலிருந்து வந்திருக்கிறது. உபநயன விதியை முடித்துக் குருகுலத்துக்கு அனுப்பப்படுகிற மாணவர் அவர்களுடைய வித்தியாப்பியாசம் முடிகிற வரையில் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்லாமல் குருவுடனேயே இருந்து வருவார்கள். கிரகஸ்தர் வீடுகளுக்குச் சென்று பிக்ஷை யெடுத்துக்கொண்டு வந்து சாப்பிட்டுக்கொண்டுதான் அவர்கள் வித்தியாப்பியாசம் செய்வார்கள். உபநயன சடங்குகளில் பவதி பிக்ஷாம் தேஹி என்று பிரம்மசாரி சம்பிரதாயமாகச் சொல்லி வருகிறதும் அதை யொட்டியே யாகும். பஞ்ச பாண்டவர் கௌரவர், கண்ண பிரான், யாக்ஞவல்கியர், ஜாபாலி, வித்தியாரண்யர், வேதாந்த தேசிகன் முதலியோர் இத்தகைய குருகுலங்களில் கல்வி கற்றவர்களே. இக் காலத்தில் புராதன குருகுலங்களின் லக்ஷணங்கள் அனைத்தையும் கொண்ட குருகுலங்களை அமைத்து, அவற்றில் இலக்கிய, ஆத்தியாத்மிக கல்வி மாத்திரமில்லாமல் தொழிற் கல்வியும் சேர்த்துக் கற்பித்தல் சாத்தியமாயின் அவையே நாம் தற்காலம் விரும்பத்தக்க கல்வி ஸ்தாபனங்களாகும். தொழிற் கல்வியைத் தொழிலாளர் மாத்திரம் கற்று வந்ததினின்றே நமது ஜாதி தொழிலபிவிர்த்தியில் பின்னடைந்து விட்டது. சாஸ்திர காசமிருந்து வேறு கல்விகளில் பிரவர்த்திக்கிற வருப்பாரும் கூடத் தொழில்களை அப்பியசித்து வந்த ஒரு காரணத்தாலேயே இங்கிலாந்தும் பிரான்ஸும் ஜெர்மனியும் அமெரிக்காவும் இன்று தொழிற் சிறப்பதில் உலகத்தில் இணையற்று நிற்கின்றன.

## இன்றைய தேவை

நம் நாடு தன்னை மேனாட்டுத் தனிகர் வர்க்கம் கட்டியிருக்கிற கட்டை அவிழ்த்து விடவேண்டுமானால் நமது மாணவரிற் பெரும்பாலர் இலக்கிய கல்வியை ஒரு

நலை முறைக்கு நிறுத்தி வைத்துவிட்டு விவசாய கல்வியிலும், தச்சு, கொல்லுத் தொழில் முதலிய சிற்பத் தொழில்களிலும் இறங்கவேண்டும். இத்தொழில்களைக் கற்பிக்கத் தகுந்த ஆற்றலுடைய ஆசிரியர்களும் இருந்து, அவைகளில் முற்காலத்துக் கல்விநசையுடனும், ஐரோப்பிய மாணவர் காட்டும் பிடிவாதத்துடனும் மாணவர் இறங்கினால், நம் குழந்தைகளுக்கு இயற்கையாயுள்ள கூரிய அறிவு அவர்களை மேனாட்டுச் சிறபிகளுக்கு எவ்வாற்றானும் தாழாத சிற்பிகளாக்கிவிடும். ஆகவே தொழிற்சாலைகளும் தொழிலை மறையாமல் பூர்ணமாகக் கற்பித்துவைக்கிற ஆசிரியர்களும் தமிழ்க்குருகுலத்துக்கு முக்கியமான தேவையாகும். தமிழ் நாட்டின் கருத்து இத்தகைய விஷயங்களில் பிரவேசித்தால் தொழி... சாமர்த்தியமும் தேசபக்தியும் பெருமுயற்சியும் நிரம்பி... மாணவர் தொகுதி அதினின்று ஓர் பத்து வருஷம்... ளில் தோன்றும் என்பதில் தடையில்லை. தற்போது தமிழ் நாட்டாரின் கருத்து வேறு வழிகளில் செலுத்தப்பட்டு வருவதில் இத் தகைய மாணவர் கூட்டத்தை நாம் காணப்போகிற நாள் ஒதுங்கிப் போய்க்கொண்டே வருகிறதே என்று வருந்துகிறோம்.

# புஸ்தக விமரிசனம்

(ராம்பிலீல் இன் வேதாந்தா: ராஜமய்யர் எழுதியது: வேதாந்த பரியடனம் என்று பொருள்படும் ஆங்கில நூல்: கிடைக்குமிடம்:— எஸ். கணேசன் கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை. இதன் விலை ரூ. ௫.)

தமிழில் அன்புள்ள யாருக்கும் காலஞ் சென்ற பேரறிஞரான ஸ்ரீமான் பி.ஆர்.ராஜமய்யரைத் தெரியாமலிருக்காதென்று நம்புகின்றோம். இவர் மதுரை ஜில்லாவில் வத்தலக்குண்டு என்ற கிராமத்தில் ௧௮௭௨-ம் வருஷம் பிறந்தவர். அவருடைய இளமைப் பருவத்தைப் பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. இவர் எப். ஏ. பரீட்சை தேறின பிறகு சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் பயின்று, பிறகு சட்ட வகுப்பில் படித்தார். அப்போது ஆங்கிலத்திலும் தமிழிலும் தன்னறிவை மிகவும் வளர்த்தார். இவர் இளமையிலேயே புத்திக்கூர்மையும், சுறுசுறுப்பும், அறிவை வளர்க்க ஓர் ஆக்கிரமும் உள்ளவர். ஆத்யாத்ம உணர்ச்சி மிகுந்தவர். ஷேக்ஸ்பியர், பைரன், கீட்ஸ், ஷெல்லி, வோர்ட்ஸ்வொர்த் முதலிய ஆங்கிலகவிகளை நன்கு கற்றறிந்து ஆராய்ந்து தேர்ந்தவர். ஷெல்லியும் வோர்ட்ஸ்வொர்த்தும் இவருக்கு அதிக இன்பம் அளித்தார்கள். ஆயினும் தாய் மொழியை அவர் மறக்கவில்லை. தாயுமானவரையும் கம்பனையும் மனமுருகப்படித்து மகிழ்ந்தார். ராஜமய்யர்தான் கம்பனை உலகிலேயே நிகரற்ற கவியென்று காட்டினார். ௧௮௯௩-ம் வருஷம் கிறிஸ்தவ கல்லூரிப் பத்திரிகையை நடத்தினர். அப்பொழுதுதான் அவருடைய பெயர் பெற்ற புனை நூலாகிய கமலாம்பாள் "விவேகசிந்தாமணி"யில் பகுதிகளாக வெளிவந்துகொண்டிருந்தது. இச் சமயத்தில் அவருடைய ஆன்மா பேரின்பமடைய தவித்துக்கொண்டிருந்தது. ஸ்வாமி சாந்தானந்தரென்னும் துறவி அவரது ஆத்மதாகத்தை... எப்பொழுதும் தியானம் செய்வதும் வேதாந்த நூல்களை ஆராய்வதும் பிரபுத்த பாரதம் என்ற பத்திரிகை எழுதுவதுமாகத் தன் காலத்தைக் கழித்தார். பிரபுத்த பாரதத்திற்குத் தானே எல்லா வியாசங்களையும் எழுதி வந்தார். ஸ்வாமி விவேகானந்தர் இவருடைய தூய வாழ்க்கையையும் பேறிவையும் கண்டு மகிழ்ந்து இவரைக் கொண்டாடினர். இவர் தொடங்கிய பிரபுத்த பாரதத்தைத்தான் விவேகானந்தர் ராமகிருஷ்ண மடத்திற்குக் கொடுத்தார். அப் பத்திரிகை இன்னும் நடந்து வருகிறது. தன் வாழ்க்கையைக் கல்வியிலும் கவிதையிலும் பேரின்பத்திலும் கழித்து ராஜமய்யர் தன... உடலை நீத்தார். இவர் தமிழுக்கும் நம் நாட்டின் ... வளர்ச்சிக்கும் அரும்பாடு பட்டவர்.



'பிரபுத்த பாரத'த்தில் இவர் அவ்வப்போது எழுதிவந்த சில வேதாந்த விளக்க வியாசங்கள் வேதாந்த பரியடனம் என்னும் இப் புஸ்தகமாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இந்நூலை விவேகானந்தர் மிகவும் மெச்சியிருக்கிறார். வேதாந்த ஞானமானது அனைவருக்கும் வெகு எளிதில் புரியும்படியாக இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. மனிதன் தன் உள்ளத்தை உள் நோக்கிப் பார்க்கவேண்டுமானால் இப் புத்தகம் அவனுக்கு ஒரு கண்ணாடி போல் விளங்கு மென்பதில் ஐயமில்லை. சர்வ மத சமரசம், பரோபகாரம், அனைத்திடத்திலும் அன்பு ஆத்ம தரிசனம், புலனடக்கம், கடவுளைக் காணல், முதலியவற்றைப் பற்றி மிகவும் தெளிவாகவும் உருக்கமாகவும் ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். நற்காலத்து நாகரீகம், விலங்குகள் விரும்பும் போக இன்பத்தைச் சார்ந்துள்ளதென்றும், அதை மனிதர் நீங்கி ஒங்கவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். உலகமானது, புருஷன் பிரகிருதி இவர்களால் ஆக்கப் பட்டதென்றும், இவர்களே உலகின் உயர்விற்கும் தாழ்விற்கும் காரணமென்றும் சொல்லுகிறார். இவ் வுலகம் தன்னை யறிந்தவருக்குக் கனவு போன்றது. குருமூலமாகவும் ஆழ்ந்த சமாதியின் மூலமாகவும் உலகின் பொய்யுறவைக் கண்டறிந்தால் ஆத்ம ஒளி கதிர்விட்டொளிரும். நம்முடைய சுகதுக்கங்களுக்குக் காரணம் நமது வினைகளே. அகங்காரமே நமது சுதந்திரத்தைக் கெடுப்பது. வேதாந்த அறிவே நம்மை, நாமே அறியும்படி செய்து பேரானந்தத்தைக் கொடுப்பது என்று கூறி இவ்வரிய நூல் மக்களுக்கு உள்ள ஒளியைக் காண உதவுகிறது. இப் புத்தகம் ஒவ்வொருவரும் கற்றுக் களிக்கத் தகுந்தது.

(ஆஸ்திக மத உபாக்யானம்: ஆசிரியன் வாகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி: கிடைக்குமிடம்:—ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி, ராயப்பேட்டை, சென்னை. விலை அணா ௧௦.)

ஆஸ்திக ஞானம் குன்றி வரும் இந் நாளில் அதற்குக் காரணமான தற்கால சேவதாலக்ஷியக் கல்வி முறையைக் கண்டித்துத் தேசிய வித்தையை நாடெங்கும் பரப்பவேண்டுமென்று நாட்டு மக்கள் முயற்சித்துவரும் இக் காலத்தில், பள்ளிச்சிறுர்கள் கையில் தாராளமாய் கொடுக்கத்தக்க இனிய, எளிய நூல்கள் இல்லையென்று ஆசிரியர்களும் பெற்றோர்களும் தயங்காமலிருக்கச் சமய சஞ்சீவி போன்ற சிறு நூல்கள் பல வெளியிட்டு வரும் இவ் ஆசிரியர் சனாதன தர்மத்தின் மர்மத்தை அனுஷ்டான ரீதியில் எவரும் எளிதில் அறிந்து கொள்ளும்படி இந் நூலை வெளியிட்டிருப்பது தமிழ்ச் சிறார்களின் பாக்கியமேயாகும். சமய பேதங்களைக் கொண்டு பேதங்கள் இருப்பினும் அடிப்படையான தர்மங்களில் சிறிதும் பேதமில்லாத் தன்மையினால் இந்திய மக்கள் தம்முள் சமரஸமாய் அன்னியோன்னியமாய் வாழ முடியும் என்பதை வாழ்ந்திருப்பவர்களின் வரலாற்றின் மூலம் நிரூபிக்க ஆசிரியர் மிகவும் முயன்றிருக்கிறார்.

இதன் எளிய சொற்றொடர்களும், இனிய நடையும் படிக்கும் சிறு மாணவர்களின் மனதைக் கவர்கிறது என்றே சொல்லலாம். மேற்கோள்களாகட்டும், படிப்பினையாகட்டும் வலித்து வருவிக்கப் படவில்லை. விஷயப்போக்கு நடையை ஒட்டியே அமைந்திருக்கிறது. கதைகளும் அதிக நீளமாயில்லை. சுமார் ஐம்பது கதைகள் வரை இச் சிறு புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. கதைப் பொருளைக் கண் கூடாகக் காட்ட எழு சித்திர படங்களும் இடைக்கிடையே அமைக்கப்பட்டிருக்கின்றன. புத்தகம் கண்ணுக்கு நன்றாய் இருக்கிறது. முக தலையில் புத்தக விவரணம் ஆங்கில பாஷையிலில்லாமல் தாய்ப் பாஷையிலேயே, புத்தக பாஷையிலேயே அமைந்திருப்பின் நன்றா யிருந்திருக்கும் எனினும் அடுத்த பதிப்பில் இக் குறையும் நீங்கிவிடும் என்றே நம்புகிறோம்.

(௧. நிருமலர்: ௩-அணா. ௨. வள்ளி திருமணம்: ௪-அணா. ௩. பால சந்திரிகை: ௧௦-அணா. ௪. கிருஷ்ணராகவீய சங்கீர்த்தனம்: ரூ. ௧—௪—0. ௫. குணபூஷணி: ௧௦-அணா. திரிச்சி ஜனானுகூல அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீ தி. கி. ராஜகோபாலனிடம் கிடைக்கும்.)

இந் நூல்களில் முதலது ஸ்ரீ தி. ம. நாராயணசாமி பிள்ளை செய்த ஓர் உபன்னியாசத்தின் சுருக்கமாகும். ௨-வது, தற்காலத்தில் நடிக்கப்படும் முறையில் எழுதப் பட்ட நாடகம். ௩-வது, ம. சுப்பராய செட்டியார் எழுதிய குழந்தை வைத்திய நூலாகும். இது வீட்டில் தாய்மார் வைத்தியம் செய்து கொள்ள மிகவும் பிரயோஜனமான நூலாகக் காணப்படுகிறது. ௪-வது புத்தகத்தில் பிதாவும் புத்திரனுமான கிருஷ்ணமாச்சாரியார் ராகவாசாரியார் என்னும் இரண்டு சங்கீத வித்துவான்கள் எழுதிய ௫0—கீர்த்தனைகள் ஸ்வர தானங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. ௫—வது நூல் திரிச்சி வாகனேரியிலுள்ள ஆ. பரமசிவம் பிள்ளை எழுதிய பெருங் கதையாகும்.

160204

# Reviews of Books

**(England's Educational policy in India:** By V. V. Oak. Published by B. G. Paul and Co, Madras. Price Rs 2.)

This is a very timely publication. People talk about the grudging manner in which the British Government in India has been he'ping the schools and colleges established in the country, but when asked for facts or figures they take refuge only in vague generalities. But vague generalities do not answer any pur pose. This is an age of statistics, and unless one is able to put his hand on figures prepared from authentic sources one's criticisms are treated only as verbiage. No handy book was hitherto available in the market that presented to the general reader in a succinct form the educational policy of England in India based on official figures. Such a book, therefore purporting to devote itself solely to an examination of the attitude of the English governors of our country towards the education of the populations entrusted to their charge must be doubly welcomed at this time when the thoughts of all right-minded people are turned away from wars and armaments and are directed towards education.

It will be a rude shock to those who believe, like Gokhale, in the divinely-appointed mission of England in India, if they are told, as we are by the author that it was only in 1813 that the East India company sanctioned the magnificent sum of one lakh of Rupees for the educational advancement of its subjects. Even to-day but 2 per cent of our population is in primary schools, while no less than 20 % take their primary schooling in the United States. The comparison of the Educational policy of America in the Philippines with that England in India is really an eye-opener. The whole book is full of carefully collected information and deserves encouragement at the hands of all who are interested in education.

**(Great Thoughts of Mahatma Gandhi:** Published by Ganesh and Co., Madras. Price Re 1.)

We think it is Cæsar that first made an attempt to collect and write out for constant perusal apothegms from the writings or conversations of great men that lived before his time. Bacon's collection of BONMOTS and apothegms are also well-known. The present collection differs from the above two collections in that the sayings are collected from the writings of only one individual. They differ also in another aspect from other collections of a similar nature in that the sayings are one and all of them charged with a high seriousness and call the reader to a higher life than is being lived in the present. Though they have an application to the present-day problems of the world, they have the stamp of eternity stamped on them. The fact that there is no sequence between the different sayings is really a merit instead of a defect, because even readers who are incapable of sustained attention can close the book at any sentence and reopen it at any place and yet can be edified by its perusal.

# "பால பாரதி" முதல் புத்தகம்

## கலி ௫௦௨௬ ஐப்பசி முதல் பங்குனி வரையில்


| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| அகலிகை சரண் புகல் (சுத்தானந்த பாரதியார்) | கூ. | காவிய உத்தியானம் ... ... | ஐ கூ. |
| ஆலோசன அவலோகனம் ஐ. * இஎ, கா. இ௨, ௧௧அ, ௧அஅ, ... ... | உ௫௦, ௬௧௨. | குரு கோவிந்த சிங்கன் ... ... | கூ௦கூ. |
| ஆழ்வார்கள் (சுத்தானந்த பாரதியார்) | கா. இ. | குவாலியர் கோட்டை ... ... | கா. கூ௫. |
| ஆனந்தரங்கப் பிள்ளையின் தினசரி | ௧கூஎ, ௨௧கூ, ௨எ௧. | சங்கீதம் (ரா. முத்தையர்) | கா கூ௫, ௬௫, ௨எ௫. |
| இந்திய மாதரும் முந்திய ஒழுக்கமும் (அசலாம்பிகை அம்மாள்) ... ... | ௨அகூ. | தயானந்த சரஸ்வதியும் ஆரிய ஸமாஜமும் (சுத்தானந்த பாரதியார்) ... ... | கூஅ௧. |
| இளைஞர்களுக்கு ஓர் வேண்டுகோள் (ஆ. வ. பதுமநாப பிள்ளை) ... ... | ஐ. ௬அ. | திருவள்ளுவரின் பொருள் நூல் (சுத்தானந்த பாரதியார்) ... ... | ௧௪௫, ௨௨அ. |
| உண்மையான [illegible] யாது? (சுத்தானந்த பாரதியார்) ... ... | ஐ. ௬கூ. | தமது பத்திரிகை ... ... | ஐ. ௧. |
| ஏகதெய்வம் (சுத்தானந்த பாரதியார்) ... | ௧௨௧. | தமது நித்யச் செல்வம் ... | ௧எ, ௧எஅ, ௨அ௫. |
| கடலின் அமைப்பு (க. அமுதன் மொழி பெயர்த்தது) ... ... | ௨௨அ. | நப்போலியனின் வீரப் பிரசங்கம் ... | கா. ௧கூ. |
| கடவுள் உண்மையை அறிஞர் ஆளுல்—(ல. ஆறுமுகம் பிள்ளை மொழி பெயர்த்தது.) ... | ௧கூ௦. | [illegible] உறுதி (சுத்தானந்த பாரதியார்) | ௧௧கூ. |
| கம்பராமாயணம் (வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்) ஐ. ௬௧ ... | கா ௨௫, ௬௦அ, ௨அஎ. | தேசியக் கொடி (திரு. வி. வாசுதேவன்) | ௬௦௧. |
| கம்பராமாயண ஆட்சேப சமாதானங்கள் | ௨௧கூ. | பகவான் புத்தரும் மஹாத்மா காந்தியும் (ப. ஆதி மூர்த்தி) ... ... | கூகூ. |
| | | பட்டினியும் நீண்ட ஆயுளும் (ப. ஆதிமூர்த்தி) | ௧௧கூ. |
| | | பாரத சக்தி (சுத்தானந்த பாரதியார்) | ஐ. இ௨. |
| | | புஸ்தகவிமரிசனம் * ஐ. கூ௧, கா இ௧, ௧௨அ, ௧௧௨, ௨இச, கூ௨௦ | |
| | | புத்தன் துறவு (சுத்தானந்த பாரதியார்) | கா. கூ. |


* பக்கங்கள் கார்த்திகை மாதத்திலிருந்து தான் தொடர்ந்து வருகின்றனவாதலால் ஐப்பசி மீ பகுதியின் பக்கங்களுக்கு முன்னே ஐ என்ற எழுத்தும், அவ்விய முன்ன இடங்களில் கார்த்திகைப் பகுதியின் பக்கங்களுக்குமுன் கா என்ற எழுத்தும் குறிக்கப்படுகின்றன.

# அட்டவணை


புலவர் வறுமை ... ... கஅ0.

பூர்வீக கடிகாரங்கள் (வே. சுப்ரஹ்மண்ய ஐயர்) ... ... உஅக.

மக்களும் தேசமும் ( தி.ரா.மஹாதேவ அய்யர்) ஐ. சஇ.

மக்கள் அறம் ( சுத்தானந்த பாரதியார்) அஎ.

மார்க்க ஒளரேலியன் (பே. திரிகூடசுந்தரம் பிள்ளை) ... ... கா. கச.

முஸ்லீம் பண்டிதரும் ஸநாதன தர்மமும் (வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர் ... கா உ.

யோக ஸாதனம் (அரவிந்த கோஷ் எழுதியதை க. அமுதன் மொழிபெயர்த்தது) ஐ. இ0,கா. உஉ, அச, கசக, உஎஉ.

ராஜகோபாலன் கடிதங்கள் ஐ.க,கா.கஅ,கச,கஎஉ,உகஎ.

லைலி மஜ்னூன் (வ.வே.ஸுப்ரஹ்மண்ய ஐயர்)ஐ.கக

விர்ஜீலியன் (வை.வையாபுரிப் பிள்ளை) க[illegible]

விவசாயம் (வ.வே.ஸுப்ரஹ்மண்ய ஐயர்) ககச

வைத்யுதம் (ரா. அனந்தகிருஷ்ணன்) எக, [illegible]

ஜகதீச சந்திரவஸு செய்த ஆராய்ச்சிகள் (வே.கா.ராம நாதன் மொழி பெயர்த்தது) ... [illegible]

ஜாரதுஷ்டிரன் ... ... உகஎ

ஸம்ராட் அசோகன் (மஹேசகுமார சர்மா) ஐ உக கா. கஅ, கக,ககூ,உ0இ, உ[illegible]

ஸர்வக்காரின் கடிதங்கள் ... கசக, உசக.

ஸூபி ஸாதியின் திருவாக்குகள் ... ககஅ.

ஸ்வர்க்கவாஸி சி.சுப்பிரமணியபாரதி ஞாபகம் (பா.ஆதிமூர்த்தி ஐயர்) ... ஐ ரு0.

வைரங்கள் ... ... க0ச,


